# தமிழ்ப்

# புலவர் வரிசை

## பதினைந்தாம் புத்தகம்

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

கழக வெளியீடு: அசுக

# தமிழ்ப் புலவர் வரிசை

[பதினைந்தாம் புத்தகம்]

MADURAI UNIVERSITY LIBRARY
4 JAN 1973
MADURAI-2.

ஆசிரியர் :
திரு. சு. அ. இராமசாமிப் புலவர்

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி. :: சென்னை-1.

First Edition: Oct., 1956

THAMIZHP PULAVAR VARISAI - XV

[All Rights Reserved]

*Published by*

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1/140, BROADWAY, MADRAS - 1.

***Head Office*:**

98, EAST CAR STREET, : : TIRUNELVELI.

75826.

031:1Aw
H9.15

Appar Achakam, 2/140, Broadway, Madras-1—C. 1200.

# பதிப்புரை

முன்னேற்றத்தை விரும்பும் நாடுகள் எல்லாம், தத்தம் நாட்டுப் புலவர்கள் செய்தருளிய தாய்மொழி நூல்களை விரும்பிப் படித்தலும் படிப்பித்தலும் செய்கின்றன.

அத்துடன், அவை அப் புலவர்கள் வரலாற்றைச் செம்மையுடன் உணர்ந்து அவர்தம் அறிவு, ஆண்மை, அன்பு, ஒழுக்கம், தந்நலமின்மை, தாய்மொழிப் பற்று, எல்லாருக்கும் உதவுதல், விடா உழைப்பு, அஞ்சாமை, வாய்மை, கடமை முதலிய நற்பண்புகளை மேற்கொண்டு நடத்தி நற்பயன் பெறுகின்றன.

அம்முறையில் நம்நாட்டுப் புலவர் பெருமக்கள் வரலாறுகளையும், அவர்கள் செய்தருளிய நூல்களையும் மாணாக்கர் இளமையிலேயே கற்று அதன்படி ஒழுகுவது, நாட்டுக்கும், மொழிக்கும் செய்யும் நல்ல சீரிய தொண்டாகும் எனக் கருதித் **தமிழ்ப் புலவர் வரிசையில்** இதுகாறும் **பதினான்கு புத்தகங்கள்** வெளியிட்டுள்ளோம். உங்கள் கையில் மலரும் இந்நூல், இவ்வரிசையில் **பதினைந்தாம் புத்தகமாகும்.**

இதன்கண் **நம்பிகாளி** முதல் **வரதநஞ்சைய பிள்ளை** ஈறாக ௩0 புலவர் பெருமக்கள் வரலாறுகளும், ஆங்காங்கு அவ்வப் புலவர் பெருமக்கள் யாத்த பாடல்களும், உள்ளுறை நயங்களுடன் செவ்விய இனிய எளிய நடையில் எழுதப்பெற்றிருக்கின்றன. இதனை எங்கள் விருப்பத்தின்படி ஆக்கித் தந்த திரு. சூ. அ. **இராமசாமிப் புலவர்** அவர்களுக்கு எங்கள் நன்றி உரித்தாகுக.

சென்னைக் கல்வித்துறை இயக்குநர் (Director of Public Instruction) இப் புலவர் வரிசை நூல்களை வாங்கும்படி உயர்நிலைப் பள்ளிகட்கும், கல்லூரிகட்கும், பொது நூலகங்கட்கும் அறிக்கை அனுப்பியிருப்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இதனையும் முதல் **பதினான்கு** புத்தகங்கள் போலவே ஆசிரியர்களும், மாணாக்கர்களும், பொதுமக்களும் வாங்கிக் கற்றும் கற்பித்தும் புலவர் பெருமக்களுக்குச் செய்யும் கடப்பாட்டினைச் செய்து எங்களையும் ஊக்குவார்களாக.

**சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.**

# முன்னுரை

**தொடக்கம்**

தமிழ்ப்புலவர் வரிசை என்னும் பெயரில் இதுவரை பதினன்கு பகுதிகள் வெளிவந்துள்ளன. இது பதினைந்தாவது பகுதியாகும். தமிழ்ப்புலவர்களின் வரலாறுகளெல்லாம் மறைந்து விடாமல் வரிசையாக எழுதச்செய்து பாதுகாக்கவேண்டும் என்னும் நோக்கம் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் ஆட்சிப் பொறுப்பாளர் திருமிகு வ. சுப்பையா பிள்ளை அவர்கட்கு நீண்ட காலமாக இருந்துகொண்டிருந்தது. முதலில் தமது நோக்கத்தைச் சேலை சகதேவ முதலியாருக்குத் தெரிவித்து ஔவையார், கம்பர், ஒட்டக்கூத்தர் புகழேந்திப் புலவர் முதலியோருடைய வரலாறுகளை எழுதச் செய்து அவைகளை ஒழுங்குபடுத்துமாறு எம்மிடம் தந்தனர். நான் அவ்வரலாறுகளைக் காலப்போக்கிற்கு ஏற்றவகையில் அமைத்துக், கூடிய வரையில் தனித்தமிழில் எழுதி முதலில் மூன்று பகுதிகளை முடித்தேன். அவைகள் மூன்றும் 1947, 1948-ஆம் ஆண்டில் வெளியாயின. பிறகு ஐந்தாண்டுகள்வரை இவ்வேலை நடைபெறவில்லை. மீண்டும் இவ்வேலை 1953-ல் தொடங்கப்பெற்று மூன்று ஆண்டுகளில் பன்னிரண்டு பகுதிகள் வெளிவந்துள்ளன.

**அமைப்புமுறை**

இவ்வரிசையில், நூல்கள் எழுதிப் புகழுடன் விளங்கியிருந்து மறைந்த புலவர்களுடைய வரலாறுகள் மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளன. விரிவான வரலாறு எழுதப் பெற்றுத் தனி நூலாக வெளிவந்துள்ள புலவர்களின் வரலாறுகள் இந்நூலில் சுருக்கமாகவே அமைக்கப் பெற்றுள்ளன. காரணம் விரிவான வரலாற்றை அறிய விரும்புவோர் தனிநூல்களைப் படித்துக் கொள்ளலாம் என்பதுதான்.

**வரலாறுகள் தொகுத்தல்**

மேனுட்டுப் புலவர்களின் வரலாறுகள், அப்புலவர்கள் உலகில் வாழ்ந்திருக்குங் காலத்திலேயே எழுதிப் பாதுகாக்கப் படுகின்றன. நமது நாட்டிலேயோ அத்தகைய பழக்கம் இல்லை. காலஞ் சென்ற தமிழ்த் தாத்தா, உ. வே. சாமிநாதையர் அவர்கள் தமது வரலாற்றைத் தாமே எழுதி வெளிப்படுத்தத்

தொடங்கிய பிறகுதான், வேறு சிலரும் இம்முறையைப் பின்பற்றத் தொடங்கியுள்ளனர். இவ்வாறு தமிழறிஞர்கள் தம் வரலாற்றைத் தாமே எழுதிவைப்பது தமிழ்த் தாய்க்கு அரிய தொண்டாகும் என்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

நிற்க, வரலாறுகளின் இன்றியமையாமையை நமது நாட்டார் இன்னுஞ் சரியாக உணர்ந்து கொண்டதாகத் தெரியவில்லை. புலவர்களின் வரலாற்ருேடு நாட்டின் வரலாறும் பின்னிக்கிடக்கின்றது என்பது சங்கப் புலவர்களின் வரலாற்றையும், ஒளவையார், புகழேந்தியார், கம்பர், ஒட்டக்கூத்தர் முதலானவர்களுடைய வரலாறுகளையும் கூர்ந்து நோக்குவார்க்குத் தெள்ளிதிற் புலனும். வரலாறுகள் தொகுக்கத் தொடங்கிய போது அவைகள் எளிதாகக் கிடைத்துவிடவில்லை. தேனீக்கள் மலர்தோறுஞ் சென்று தேன்தொகுப்பதுபோல் பலவிடங்கட்குஞ் சென்று நூல்களைத் தேடியும் அறிந்தவர்களிடமிருந்து குறிப்புகள் பெற்றும் தொகுக்கவேண்டியதாயிற்று. பலருடைய வரலாறுகள், தோன்றிய காலம் மறைந்த காலம் முதலிய எதுவுந் தெரியாமல் காணப்பட்டன. அவ்வரலாறுகளை நன்ருக ஆராய்ச்சி செய்து காலம் முதலியவைகளைக் கண்டுபிடிக்கவில்லை. முதலில் வரலாறுகளை உருவாக்கிக்கொண்டால் பிறகு காலப்போக்கில் எல்லாவற்றையுந் தெரிந்தமைத்துக்கொள்ளலாம் என்று கிடைத்த வரலாறுகளை உடனுக்குடன் வெளியிட்டிருக்கிருேம்.

திருப்புகழ்ச் சாமி, முருகதாசசாமி என்று பெயர் வழங்கிய வண்ணச் சரபம் தண்டபாணியடிகள் இயற்றியருளிய புலவர் புராணத்தில் இருந்து பல வரலாறுகள் எடுக்கப் பெற்றன. இப்புராணத்தில் வரலாற்றுச் செய்திகள் காணப்பட்டதேயன்றிக் காலம் முதலியன விளக்கமாகவில்லை. அவைகளை அவ்வாறேதான் இத்தொகுதிகளினுஞ் சேர்த்திருக்கிறேன். நூல்களின் முகப்பில் நூலாசிரியருடைய வரலாற்றையும் சிலர் எழுதிச் சேர்ப்பதுண்டு. இவ்வாறு பல நூல்களின் முகப்பில் இருந்தும் வரலாறுகள் அகப்பட்டன. செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி முதலிய திங்கள் வெளியீடுகளில் இருந்தும் சில வரலாறுகள் கிடைக்கப்பெற்றன. காலஞ் சென்ற உ. வே. சாமிநாதையர் அவர்களால் எழுதப்பெற்ற மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் வரலாற்றில் இருந்தும் சில குறிப்புகள் அகப்பட்டன. மற்றும் ஆட்சிப் பொறுப்பாளர் அவர்கள் தாமும் பெரிது முயன்று பல நண்பர்களிடமிருந்தும் வரலாறுகள் வாங்கிக்கொடுத்தார்கள். நான் மதுரை, மன்னுர்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் நூல் நிலையங்களில் உள்ள நூல்களைப் பார்த்தும் சில வரலாறுகளைத் தொகுத்தேன். அறிஞர் பெருமக்களின் நினைவாக வெளிப்

படுத்தப் பெற்ற நினைவு மலர், மணிவிழா மலர் முதலியனவும் வரலாறு தொகுத்தற்குப் பயன்பட்டன.

என் அன்பிற்குரிய அடிகளாரும் சிதம்பரம் மௌனதேசிகர் ஆதீனத் தலைவருமாகிய உயர்திரு. சபாபதி சுவாமிகள் அவர்கள் தமது ஆதீன நூல் நிலையத்தில் இருந்து பல வரலாறுகள் உதவியருளினார்கள். தஞ்சைமாவட்டம் மன்னார்குடியில் உள்ள கோட்டூர் இரங்கசாமி முதலியார் இலவச நூல்நிலையத்தில் இருந்து நூல்நிலையக் காப்பாளர் திரு. பாலகிருட்டிண முதலியார் அவர்களும், திரு. அ. இளங்கோவன் அவர்களும் பல வரலாறுகள் கிடைக்கச் செய்தனர். பலவான்குடியில் உள்ள என் நண்பரும் மாணவருமாகிய திரு. மெ. வெ. வேலப்ப செட்டியார் அவர்களும், பல வரலாறுகள் தேடித்தந்தனர். மற்றும் என்னுடைய நண்பர்கள் பலரும் வரலாறு தேடித்தந்தனர். சென்னை ரெவின்யூபோர்டு ஆபீசில் சூபிரண்டாக விளங்கும் திரு. பச்சையப்பன் அவர்கள் சில வரலாறுகள் தந்துதவியதோடு, மேலும் பல வரலாறுகள் தேடித்தருவதாகவும் உரைத்தனர். இவர்கள் எல்லோருக்கும் எனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்வதோடு, கழகச் சார்பாகவும் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**நல்லவேலை**

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சிப் பொறுப்பாளர் திரு. வ. சுப்பையா பிள்ளை அவர்களை நான் கழகந்தொடங்கிய காலம் முதலாகவே அறிவேன் இவர்கள் நாம் எடுத்துக்கொள்ளும் செயலைச் செவ்வையாகச் செய்து முடிக்கும் திண்ணிய திறலினர். அவ்வக் காலங்கட்கு ஏற்ற முறையில் நூல்களை வெளிப்படுத்துவதினும் வல்லவர். இவர்களுடைய சலியா உழைப்பினால் தான் கழகம் இன்று உயரிய முறையில் சிறந்த தமிழ்ப் பணி செய்து வருகிறது. இவர்கள் தமிழ்ப் புலவர் வரலாறுகளைப் பாதுகாத்தற்கு முன்வந்து செய்யும் பணியைப் பலரும் போற்றிப் பாராட்டுகின்றனர். மேலும் போற்றிப் பாராட்டுவார்கள். பெயர்கூட அறியப் பெறுமல் மறைந்து கிடந்த பல புலவர்களின் வரலாறுகளை எல்லோரும் நன்குணர்ந்து போற்றுமாறு செய்துவிட்டார்கள். இதுவரையில் 380 புலவர்களின் வரலாறுகள் வரை வெளிவந்துள்ளன. பழைய புலவர்களின் வரலாறுகளில் இன்னும் ஏறக்குறைய முந்நூறுவரை அகப்படலாம். பழைய புலவர்களின் வெளிவராத வரலாறுகளையும் தற்காலப் புலவர்களில் நூல்கள் எழுதிப் புகழ்பெற்று விளங்கும் புலவர்களின் வரலாறுகளையும் அறிந்துள்ள நண்பர்கள் எழுதியனுப்புவார்களானால், அவ்வரலாறுகளெல்லாம் மறையாமற் பாதுகாக்கலாகும்.

நான் பல புலவர்களோடு திங்கட்கணக்கிலும் ஆண்டுக்கணக்கிலும் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அத்தகையோருடைய முழு வரலாறுகள்கூட இப்பொழுது எனக்குத் தெரியாமற் போய் விட்டன. ஆகவே இத்துறையில் நண்பர்கள் கருத்துச் செலுத்துமாறு வேண்டிக்கொள்ளுகிறேன். புலவர் பெருமக்களின் நிழலோவியங்களும் தொகுக்கப்படுகின்றன. நிழலோவியங்களையும் அனுப்பித்தரின் சமயம்போல் பயன்படுத்துவதற்கு மிக உதவியாக இருக்கும்.

### தமிழ்ப்புலவர்கள் அகரவரிசை

காலம், வரலாறு, ஊர் முதலியன அறியப்படாமல் பல புலவர்களைப் பற்றிக் குறிப்புக்களும் செய்திகளும் நூல்களின் மூலமாகவும் வரலாறுகளின் மூலமாகவும் அறியப் பெறுகின்றன. இத்தகைய புலவர்களின் செய்திகளையெல்லாம் ஒன்ருகச் சேர்த்து அகரவரிசையில் வெளிப்படுத்துவது என்னும் நோக்கத்தோடு தொகுத்துவைக்கப் பெறுகின்றன. நாளடைவில் இது வெளிவரும்.

### முடிவுரை

இவ்வரிசையில் சமயகுரவர்கள் ஆழ்வார்கள் ஆகியோர்களின் வரலாறுகள் சேர்க்கப் பெறவில்லை. இவர்களுடைய வரலாறுகள் தனிநூலாகப் பலரானும் எழுதப்பட்டுள்ளமையின் எல்லோரும் நன்குணர்வர் என்பதே காரணமாகும். அகப்படும் வரலாறுகளை உடனுக்குடன் உருவாக்குவதையே முதன்மையான நோக்கமாகக் கொண்டிருந்தபடியால், இவைகளைக் காலமுறைப்படி ஒழுங்கு படுத்தவில்லை. புதிதாகக் கிடைத்துவரும் குறிப்புக்களோடு இனிமேல் இவைகளைக் காலமுறைப்படி ஒழுங்கு செய்து வெளிப்படுத்தக்கூடும். இவ்வரலாற்று நூல்வரிசையை ஏற்றுப் பாராட்டும் அன்பர்கள் எல்லோருக்கும் எனது நன்றியறிதலை இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

பைந்தமிழ்ப் பண்ணை,
கருப்பக்கிளர்,
தஞ்சைமாவட்டம்.
25-10-56.

சு. அ. இராமசாமிப் புலவர்.

MADURAI UNIVERSITY LIBRARY

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| க. | நம்பிகாளி | 1 |
| உ. | சிதம்பரம் ஞானப்பிரகாசர் | 5 |
| ங. | முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார் | 7 |
| ச. | வீரபத்திரப் புலவர் | 9 |
| ரு. | கார்மேகக் கவிஞர் | 15 |
| சு. | ஆத்மநாத தேசிகர் | 20 |
| எ. | அழகுமுத்துப் புலவர் | 22 |
| அ. | மதுரகவி பாரதியார் | 27 |
| கூ. | கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள் | 28 |
| க0. | சோணசல பாரதியார் | 38 |
| கக. | கவிகுஞ்சர பாரதியார் | 41 |
| கஉ. | மதுரைச் சபாபதி முதலியார் | 49 |
| கங. | முத்துச்சாமி அய்யர் | 52 |
| கச. | சிதம்பர பாரதியார் | 54 |
| கரு. | பிச்சை இபுராகிம் புலவர் | 56 |
| கசு. | சாது நாராயண தேசிகர் | 61 |
| கஎ. | பொன்னையா முதலியார் | 65 |
| கஅ. | ஆ. முத்துத்தம்பி பிள்ளை | 66 |
| ககூ. | து. அ. கோபிநாத ராயர் | 71 |
| உ0. | வீரசைவக் கனகசபைக் கவிராயர் | 78 |
| உக. | ஆறுமுக அடிகள் | 81 |
| உஉ. | பிச்சையா நாவலர் | 83 |
| உங. | வீரசுப்பைய ஞானதேசிகர் | 88 |
| உச. | திரு. வி. உலகநாத முதலியார் | 93 |
| உரு. | பொன்னம்பல சிவம் | 99 |
| உசு. | வி. சு. நடராசன் | 104 |
| உஎ. | சிவபாதசுந்தரம் | 108 |
| உஅ. | பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் | 112 |
| உகூ. | வையாபுரிப் பிள்ளை | 117 |
| ங0. | வரத நஞ்சைய பிள்ளை | 127 |
| | பதினைந்து புத்தகங்களினும் வெளிவந்துள்ள **380 புலவர் பெருமக்களின் பெயர் அகாவரிசை** | 145 |

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

# தமிழ்ப் புலவர் வரிசை

## [பதினைந்தாம் புத்தகம்]

### க. நம்பிகாளி

**தோற்றம்**

தொண்டைமண்டலத்திலே வல்லம் என்னும் ஊரிலே இடையர் குலத்தில் **நம்பிகாளி** என்னும் புலவர் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றினர்.

**கல்வி**

இவர் கல்வியைத் தக்கவர்களிடத்திலே நன்கு கற்றுச் சிறந்த புலமைபெற்று விளங்கியதுடன் வாக்குப் பலிதம் உள்ளவராகவும் இருந்தார். தமது வாக்கால் ஒன்றனை ஆக்கவும், அழிக்கவும் வல்லவர். இவர் பல நாடுகட்குஞ் சென்று செல்வர்களிடத்திலே நன்கொடைபெற்று வாழ்க்கை நடத்துதலையே தமது தொழிலாகக் கொண்டிருந்தார்.

**தம்மையே விற்றுப் பரிசளித்தல்**

நம்பிகாளி காலத்திலே தொண்டைமண்டலத்தில் நெற்குன்றவாண முதலியார் சிறந்த வள்ளலாகத் திகழ்ந்திருந்தார். இவர் வேண்டுவார் வேண்டுவதை இல்லையென்னுமல் வழங்குவார். தம்மிடம் வருபவர்கள் வாய்திறந்து

கேட்பதற்கு நாணினால் எழுதிக் காட்டட்டும் என்னும் எண்ணமுடையவராய்த் தம் வீட்டு முற்றத்திலே மணலைக் கொட்டிப் பரப்பியிருந்தார். வருகிற புலவர்கள் வாய் திறந்து கேட்பதற்கு நாணினால் தமது விருப்பத்தை அம் மணலிலே எழுதிக் காட்டித் தமக்கு வேண்டியதைப் பெற்றுச் செல்வர். இவ் வள்ளலின் செயலைத் தொண்டை மண்டல சதகத்தார் தமது சதகத்தில்,

"உணலைப் பசும்பொன் முதலான வற்றை உதவிப்பின்னும்
குணலச்சை உள்ளவர் கேட்கவும் கூசுவர் கொல்லெனவே
எணலைக் கருதி எழுதிவைப் பீரென இன்மறைந்து
மணலைப் பரப்பிய முன்றினுள் ளான்தொண்டை மண்டலமே."

என்று பாடியுள்ளனர். நம்பிகாளி நெற்குன்றவாணரின் வள்ளன்மையை நன்கு அறிந்திருந்தபடியால் இவரிடம் பரிசு பெற்றுச் செல்லலாம் என்று எண்ணி வந்தார். புலவர் வந்த சமயத்தில் வள்ளலிடம் பொருள் இல்லை. தம்மை ஒருவனுக்கு விலைபேசி விற்று அதனால் கிடைத்த பொருளை நம்பிகாளிக்குக் கொடுத்தனுப்பினர். தாம் விலையான செய்தியைத் தம்மனைவிக்கு,

"கற்குங் கவிவல்லை யாதவர் கோன்நம்பி காளிக்கியாம்
விற்கும் பரிசன மாகிவிட் டோம்வட வேங்கடமும்
பொற்குன் றமும்புகழ் கங்கா நதியும் பொதியமும்போல்
நெற்குன் றமுநம் மரபும்எந் நாளும் நிலைநிற்கவே."

என்னுஞ் செய்யுளை எழுதியனுப்பினர். இச் செய்தி,

"பன்னுந் தமிழ்க்கவன் மாமனை தாதி பரிசளிப்ப
முன்னம்பி காளிக்கு நெற்குன்ற வாண முதலியென்போன்
பின்னுஞ் சிலபல பொன்னுங் கொடுத்துத்தன் பேர்நிறுத்த
மன்னுந் தமிழும் உரைத்தான் அவன்தொண்டை மண்டலமே."

என்னுந் தொண்டைமண்டல சதகப் பாடலாலும் உறுதியாகின்றது.

பட்டமரந் தழைக்கப்பாடுதல்

நம்பிகாளி கொங்கு மண்டலத்தில் உள்ள நெடுவூர் என்னும் ஊருக்குச் சென்றார். இவரோடு கையேட்டுக் காரர்களும் மற்றும் பலருஞ் சென்றனர். நம்பிகாளி மிகுந்த வாக்குவன்மை உடையவர் என்பதை நெடுவூரில் இருந்த அந்தணர்கள் கேள்வியுற்றார்கள். ஆயினும் அவர்கள் நம்பவில்லை. அழுக்காறு கொண்டு புலவரையும் தமிழ்மொழியையும் பலவாறு இகழ்ந்துரைத்தார்கள். "தமிழ்மொழியும் தமிழ்ச்செய்யுட்களும் தெய்வத் தன்மை நிரம்பப் பெற்றிருப்பது உண்மையாயின் பட்டுப் போன இம்மரம் தழைத் தோங்குமாறு ஒரு செய்யுள் பாடும். பாட்டினால் பட்டமரந் தளிர்த்துவிடுமானால் தமிழ்மொழியையும் உங்களையுஞ் சிறப்புடன் போற்று கிறோம்," என்றார்கள். நம்பிகாளி அந்த அந்தணர்களை ஒருபொருட்படுத்த வில்லையாயினும் மாணவர்கள் அந்த அந்தணர்களுடைய ஆணவத்தை யடக்கித் தமிழ்மொழி யின் சிறப்பை நிலைநாட்ட வேண்டும் என்று மிகவும் வேண் டிக் கொண்டார்கள். அவ்வளவில் நம்பிகாளிப்புலவர்,

"தெய்வத் தமிழென்னும் செம்மொழியும் அம்மொழிநேர்
செய்விப்பர் தேவ ரெனல்தேறத்—தெய்வம்
சுரந்தளிக்கும் மாநெடுவூர்ச் சோலையிலே பட்ட
மரந்தளிர்க்க வின்று வளர்ந்து."

என்னுஞ் செய்யுளைப் பாடினார். அவ்வளவில் பட்டுப் போய் அடுப்பெரித்தற்குத் தகுதியாகக் காய்ந்துநின்ற மரம் பசுமையாய்த் தழைத்து வளர்ந்து பூத்துக் காய்த்துக் குலுங்கியது. இதனைக் கண்ட அந்தணர்கள் மிகுந்த அச்சமடைந்தார்கள். இப் புலவனிடம் குறும்புகள் செய் வோமாயின் அழிந்தொழிவது திண்ணம் என்று உணர்ந் தார்கள். நம்பிகாளியைப் பலவாறு புகழ்ந்து பாராட்டிப்

போற்றி மகிழ்ந்தார்கள். இச்செய்தி கொங்குமண்டல சதகத்தில்,

"பரந்த கடலுல கெல்லாம் அறியப் பரமசிவன்
நிரந்தர மாயருள் சண்முக வேலனன் னேயத்தினல்
புரந்தரன் போற்றும் நெடுவூரிற் காளிப் புலவன்பட்ட
மரந்தழை யக்கவி பாடிய துங்கொங்கு மண்டலமே."

என்று கூறப்பட்டுள்ளது.

**தனிப்பாடல்கள் நூல்கள் முதலியன**

அருட்புலவராகிய இவரால் பாடப்பெற்ற தனிப் பாடல்கள் பல. நூல் யாதுஞ் செய்தாரா இல்லையா என்பது தெரியவில்லை. காலப் போக்கில் மேலுஞ் சில தனிப் பாடல்கள் அகப்படலாம்.

**இவர் பெருமை**

அருள்பெற்ற அறிஞராகிய இவரிடத்தில் அக்காலத் தினர் பெருமதிப்புக் கொண்டிருந்தனர். பெரும் வள்ள லாகவும் புலவராகவும் விளங்கியிருந்த நெற்குன்றவாண முதலியார் தம்மையே விற்று இவருக்குப் பொருள் வழங் கினர் எனின், இவருடைய பெருமையைப்பற்றிக் கூறவேண் டுமோ? இவர் காளிதேவியை வழிபட்டு அத் தேவியின் திருவருள் பெற்றபடியினல்தான் வாக்குப் பலிதமுள்ளவ ராக விளங்கினர் என்று சிலர் கூறுப. காளி என்பது காளிதேவியின் அருள்பெற்றபடியினல் அமைந்ததாகவும் இருக்கலாம்.

## உ. சிதம்பரம் ஞானப்பிரகாசர்

### தோற்றம்

ஈழமண்டலத்தில் உள்ள வீணுகானபுரத்திலே சாலி வாடி நகரத்திலே, கார்காத்த வேளாளருள்ளே முடி தொட்ட வேளாளராகிய பாண்டி மழவர் குலத்திலே' நானூறு ஆண்டுகட்கு முன்னே ஞானப்பிரகாசர் தோன்றி ஞர். இவர் இளமைப் பருவத்தில் தானே கல்வியை நன்கு கற்றுத்தேறி அறிஞர்களுடைய கூட்டுறவை மிகுதியாக மேற்கொண்டு நல்வழியிலே நடந்து கொண்டிருந்தார்.

### சிதம்பரத்தை அடைதல்

பிறகு தமது நாட்டைவிட்டுப் புறப்பட்டுத் தென் தமிழ் நாட்டிற்கு வந்தார். திருப்புகலூரையடைந்து அங்கிருந்த ஆதிசைவராகிய பெரியண்ணு சுவாமிக் குருக்கள் என்பவரிடத்திலே தீட்சை முதலியன பெற்றுக்கொண்டு திருத்தில்லையை அடைந்தார். "தீர்த்தம் என்பது சிவ கங்கையே" என்று புகழ்ந்தோதப்பெற்ற சிவகங்கையிலே மூழ்கிக் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக்கொண்டு அவ்விடத்தில் சிலகாலந் தங்கியிருந்தார்.

### வடமொழி கேட்டல்

பிறகு தில்லையில் இருந்து கௌட தேசத்தை யடைந் தார். அங்கே வடமொழிப் புலமைவாய்ந்த அந்தணத் துறவி யொருவர் மாணவர் பலருக்குத் தருக்க, மீமாம்ச, வேதாந்த நூல்களைக் கற்பித்துக்கொண்டிருந்தார். அவர் மாணவர்களுக்கு அவைகளைக் கற்பிக்குந்தோறும் அவற்றை ஞானப்பிரகாசரும் கருத்தூன்றிக்கேட்டு வருவாராயினர். ஒருநாள் அவ்வாசிரியர் இவரைப் பார்த்து, "உம்முடைய பெயர் யாது? நாடு யாது? ஈண்டுக் கற்பிப்பன உமக்கு

விளங்குகின்றனவா ?" என்று கேட்டார். இவர், "நன்ருக விளங்குகின்றது" என்று மறுமொழி கூறியதுடன் அவர் கேட்ட கேள்விகளுக்குந் தகுந்தவாறு விடையளித்தார். இவருடைய ஆற்றலைக் கண்டு அவ்வாசிரியர் மிகுந்த வியப்படைந்தார். இவரைத் தம் மாணவர் கூட்டத்திற்குத் தலைவராக்கி மேலுங் கற்பித்து வருவாராயினர். இவர் ஓராண்டுக்குள்ளே எல்லாவற்றையும் நன்கு கற்றுச் சிறந்த புலமையடைந்தார். ஆசிரியர் இவரைப் பார்த்து, "நீர் நூல்கள் செய்வதற்கு வல்லவராயினீர்," என்று சொன்னர். இவர் ஆசிரியரிடத்திலே விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்.

**துறவியாதல்**

புறப்பட்ட இவர் திருக்கைலாய பரம்பரையில் உள்ள திருவண்ணமலை யாதீனத்தை யடைந்தார். அப்பொழுது அங்கே எழுந்தருளியிருந்த ஞானதேசிகரிடத்திலே துறவு பெற்றுச் சிவாகமப் பொருள்களை யெல்லாம் நன்கு அறிந்தார்.

**நூல்களும் உரையும் இயற்றல்**

பிறகு இவர் பௌட்கராகமவிருத்தி, சிவஞான போத விருத்தி, சித்தாந்த சிகாமணி, பிரமாண தீபிகை, பிரசாத தீபிகை, அஞ்ஞான விவேசனம், சிவயோக சாரம், சிவயோக ரத்தினம், சிவாகமாதி மான்மிய சங்கிரகம் என்பவைகளை வடமொழியில் இயற்றினர். சிவஞான சித்தியாருக்கு ஓர் உரை செய்தார். அந்த உரையின் முகப்பில்,

"சிவமுற நமக்கு முந்தித் தந்திவத் திரளைச் சிந்தித்(து)
உவமையில் சிவனைப் பில்லா உமைகுரு குலங்கண் மற்றென்
இவர்களை வணங்கி யின்பச் சிவஞான சித்திக் கேற்ப
நவமுறும் உரை உரைப்பாம் முன்னுரை நலங்கொ ளார்க்கே."

என்னும் செய்யுளைச் செய்துள்ளார்.

**இறுதி**

பிறகு ஞானப்பிரகாசர் திருத்தில்லையை அடைந்து கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக்கொண்டு அங்கிருந்தார். ஒருநாள் ஞானப்பிரகாசருடைய அடியவர் ஒருவர் தாமிருக்கும் இடத்திற்குப் பக்கத்திலே ஓரிடத்தில் நிலத்தில் பெருந்தொகைப் பொருள் இருப்பதைக் கண்டு அச் செய்தியை ஞானப்பிரகாசருக்குத் தெரிவித்தனர். ஞானப் பிரகாசர் அப் பொருளை எடுத்து அவ்விடத்திலே ஒரு குளத்தை வெட்டுவித்தனர். அக் குளம் இன்றும் ஞானப் பிரகாசம் என்னும் பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கிறது. அக் குளத்தின் கரையிலே மடம் ஒன்றை அமைத்து அதில் தங்கியிருந்த இவர் ஒரு பங்குனித்திங்கள் பூச நாளிலே இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

---

## ந. முத்தமிழ்க் கவி வீரராகவ முதலியார்

**தோற்றம்**

முத்தமிழ்க்கவி வீரராகவ முதலியார், அந்தகக் கவி வீரராகவ முதலியாரின் பெண் வயிற்றில் பிறந்தவர். இவர் செங்கற்பட்டுக்கு அண்மையில் உள்ள பொன்விளைந்த களத்தூரிலே நம்மாழ்வாருடைய திருவருளாலே பிறந்தார். இவர் பிறந்த சில காலத்திற்குள் தந்தையை இழந்தார். அந்நாளில் கலகம் ஒன்று உண்டாயிற்று. அக் கலகத்திற்கு அஞ்சிய இவருடைய தாய் இவரைத் தூக்கிக் கொண்டு ஊரை விட்டுத் தென்திசை நோக்கி ஓடினள்.

**திருவருள்**

குழந்தையோடு நோக்கிச் சென்ற மாது, திருக்கண்ண மங்கை என்னும் திருமால் திருப்பதியின் அண்மையில்

உள்ள ஓர் ஆற்றினது நடுவே குடிசை போட்டுக்கொண்டு தங்கியிருந்தனள். அவ்வாற்றில் திடீரென்று பெருவெள்ளம் வந்தது. வெள்ளத்தைக் கண்ட தாய் குழந்தையை விட்டுவிட்டு ஓடிப்போய் விட்டனள். குழந்தையை அப் பதியில் எழுந்தருளிய அபிடேகவல்லித்தாய் பால் கொடுத்து வளர்த்தனள். அத் தாயாருடைய திருவருளினாலே இவர் முத்தமிழையும் இளமையிலேயே ஐயந்திரிபற அறிந்தார். உடனே அத் தாயார்மீது, "திருக்கண்ணமங்கைமாலை" என்னும் நூலை இயற்றினார். மேலும் சில காலம் அப் பதியிலேயே தங்கியிருந்தார்.

## தொண்டை நாடடைதல்

பிறகு இவர் தொண்டைநாட்டை யடைந்து வசித்திருந்தார். ஒருமுறை காஞ்சிபுரத்திற்குச் சென்று அப் பதியில் எழுந்தருளிய வரதராசப்பெருமானையும் பெருந்தேவித் தாயாரையும் போற்றிப் பணிந்தார். இருவர்மீதும் பஞ்சரத்தினம் என்னும் நூலைப் பாடினார். இவருடைய கழுத்தில் திருமாலினது திருமாலை தானே விழுந்தது. வைணவர்கள் அதைக் கண்டு மிகுந்த வியப்படைந்தார்கள். இவருக்குப் பரிவட்டம் முதலியன சாத்திச் சிறப்புச் செய்தார்கள். மேலும் அவ்விடமே தங்கியிருக்கச் செய்தனர்.

## இயற்றிய நூல்கள்

1. திருக்கண்ணமங்கைமாலை
2. வரதராசர் பஞ்சரத்தினம்
3. பாலூர்க் கலம்பகம்
4. செய்யூர்ப் பிள்ளைத்தமிழ்
5. திருவேங்கடக் கலம்பகம்.

முதலியன இவருடைய நூல்கள். இவர் தனிப்பாடல்களும் பலசெய்துள்ளார். இவருடைய பாட்டனாராகிய அந்த

கக் கவி வீரராகவ முதலியார் பாடல்களும் இவருடைய பாடல்களும் மாறுபாடு காணமுடியாதபடி கலந்திருப்பனவாகத் தெரிகிறது. இவர் இயற்றிய திருவேங்கடக் கலம்பகத்தில் இருந்து ஒரு செய்யுளை அடியிற் காண்க.

"மேகந்தவழ் காவேவளர் நாகங்கமழ் பூவே
வேலைக்கெழு திரையேயறல் சாலத்திகழ் கரையே
ஏகும்பட வினமேகழி போகுங்களி யனமே
இளமைச்சிறு கயலேயென துளமிக்கது மயலே
ஆகந்துள வணிவார்தின மாகம்புவி பணிவார்
அணிபொற்றுகி லுடையாருயர் பணிவெற்பினையுடையார்
மாகந்தர வுருவார்வரு மோகங்கெட மருவார்
மனமுந்தெரி யாதேயவர் சினமுந்தெரி யாதே."

---

## ௬. வீரபத்திரப் புலவர்

### தோற்றம்

தங்கிய புகழ்சேர் கொங்கு மண்டலத்தில் திருச்செங்கோடு என்னும் ஊரில், ஏகாலியர் மரபில் ஏறக்குறைய முந்நூற்றைம்பது யாண்டுகட்கு முன்னர் வீரபத்திரப் புலவர் தோன்றினர்.

### கல்வி

பழம் பிறப்பின் நல்வினைப் பயனால் கல்வியை நன்கு கற்றுத் தேறிச் சிறந்த புலமையடைந்து விளங்கினர். பல ஊர்களுக்குஞ் சென்று தாம் பெற்ற கல்வி யறிவை எல்லோருக்கும் பயன்படுமாறு அறிவுரைகள் கூறிப் போதித்தார்.

### ஆணூர்ச் சர்க்கரையைக் காணுதல்

நொய்யலாற்றுக் கரையை அடுத்து ஆணூர் என்னும் சிற்றூர் ஒன்று இருக்கிறது. அவ் வூரிலே அந் நாளில் சர்க்

கரை மன்றாடியார் என்னும் செல்வர் ஒருவர் வாழ்ந்திருந்தார். அவர் வள்ளன்மையை மேற்கொண்டிருந்தபடியினால் அவருடைய பேரும் புகழும் எல்லாவிடங்களினும் பரவியிருந்தன. வீரபத்திரப் புலவர் ஆனூர்ச் சர்க்கரையைக் காணவிரும்பினார். புறப்பட்டு ஆனூரை யடைந்து சர்க்கரையைக் கண்டார் சர்க்கரை தம் பெயருக் கேற்பப் புலவரை இனிது போற்றினார். இருவரும் பல செய்திகளைக் குறித்து நீண்ட நேரம் உரையாடிக்கொண்டிருந்தார்கள். பிறகு உள்ளே சென்று புலவருக்கு உணவிடும் பொருட்டு ஆகவேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தார் சர்க்கரை.

**கோளன்வேலை**

சர்க்கரைமன்றாடியார் உள்ளே இருக்கும்போது புலவர் வெளியே அமர்ந்திருந்தார். அப்பொழுது கோளன் ஒருவன் உள்ளே இருந்து வெளியே வந்தான். அவன் மெதுவாகப் புலவரிடம்போய், "ஐயா! உங்களுக்கு உணவு படைப்பதற்கு இன்னுஞ் சிறிது நேரம் ஆகும் என்று எண்ணுகிறேன்," என்று கூறிவிட்டுச் சென்றான். புலவர் இந்தக் கோளனுரையைக் கேட்டார். அவருடைய மனம் பலவாறு எண்ணத் தொடங்கிவிட்டது. உள்ளே சர்க்கரைமன்றாடியார் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாரோ அல்லது நாம் வண்ணான் இருப்பதால் வெளியே வைத்துச் சாப்பாடு போடுவதற்கு ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறாரோ தெரியவில்லை. உள்ளே சென்றவர் வெகுநேரமாக வெளியே வராமலிருப்பதற்குக் காரணம் என்ன என்று எண்ணமிட்டார். அவருடைய உள்ளத்திலே வருத்தமும் சினமும் உண்டாயின. மதிப்பற்ற இடத்தில் புசிப்பதும், வசிப்பதும் இழிவு என்று முடிவு செய்தார். அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு வெளியே சென்றார்.

**புலவர் மாற்றம்**

சர்க்கரைமன்ருடியார் உணவுபடைத்த பின் புலவரை யழைத்தற்கு வெளியே வந்து பார்த்தார். புலவரைக் காண வில்லை; தேடினுர். புலவர் புறப்பட்டுச் செல்வதாகச் செய்தியறிந்தார்; விரைந்து ஓடினுர்; சென்றுகொண் டிருக்கும் புலவரைக் கண்டார். அவரைப் பார்த்து, "ஐயா! ஏன் இவ்வாறு புறப்பட்டுவிட்டீர்கள்? என்ன குறை நேர்ந் தது. என்னுடைய பிழையைப் பொறுத்துத் தெரிவியுங் கள்," என்று மிகவும் வருந்திக் கேட்டார். புலவர் மன்ருடி யாரைப் பார்த்து, 'எதிர்த்தோர்க்கு மிண்டன்; வித்துவான் களுக்குத் தொண்டன்,' என்னும் விருதை உங்களுடைய முன்னேர்கள் அடைந்திருக்கிருர்கள் என்று கேள்விப் பட்டு உங்களிடத்திற்கு வந்தேன். பேசிக்கொண்டிருந்து விட்டு உள்ளே சென்ற நீங்கள் உணவருந்திக்கொண்டிருப்ப தாக உங்களுடைய வேலைக்காரர்கள் மூலமாக அறிந்தேன். வந்த விருந்தினரைப் போற்றி உணவு ஊட்டிய பிறகு தாம் உண்ண வேண்டியது நல்ல குடிப் பிறந்தவர்களின் கடமை. இத்தகையோர்கள் தாம் விண்ணுலகப் பதவியைப் பெறு வார்கள். 'செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப் பான் நல்விருந்து வானத் தவர்க்கு,' என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனுர் கூறியிருப்பதைத் தாங்கள் கேள்விப்பட்டதில்லையா? அன்றியும், "உண்ணுங்கள் உண்ணுங்கள்," என்று சொல்லிப் போற்ருதவர்களுடைய இல்லத்திலே உண்ணலாமா? இவைகளை யெல்லாம் எண் ணிப் பார்த்துத்தான் உங்களுடைய இல்லத்தில் உண்பது தக்கது அன்று என்று எண்ணித் திரும்பி விட்டேன். ஒரு புலவன் ஒருவரிடஞ் செல்வது செல்லப்பெற்ற இல்லத் தானுக்குச் சிறப்பை விளைப்பதற்காம். இதற்கு முன் புல வர்கள் புகழ்ந்து பாடியிராவிடில் நான் ஏன் உங்களைத் தேடி

வருகிறேன்? வரும் வழியில் எத்தனை லட்சம் பேர் இருக்கிறார்கள்? அவர்களிடத்திற்கெல்லாம் சென்று தங்காமல் உங்களைத் தேடி வந்தது உங்களுடைய தமிழார் வத்தை முன்னிட்டுத்தானே?" என்று முகஞ் சோர்ந்து மொழிந்தனர்.

### சர்க்கரையார் சமாதானம் கூறுதல்

புலவர் புகன்றதைக் கேட்ட சர்க்கரையார் புலவரைப் பார்த்து, "ஐயா புலவர் திலகமே! புலவர்களின் குலம் பிறப்பு முதலியவைகளைப்பற்றி உசாவுதல் முறைமையல் லவே. முனிவர்களின் தவஞானங்களைத்தானே மக்கள் தெரிந்துகொள்கிறார்கள். புலவர்கள் தமது அறிவுரைக ளாலும் நூல்களாலும் உலகத்திற்கு உதவி செய்து பயன் விளைப்பவர்கள் என்பதை நான் நன்றாக உணர்ந்துள்ளேன். நான் தங்களைச் சிறிதும் இழித்துரைக்கவில்லை. இதனை எவ்வாறு வேண்டுமாயினும் நான் மெய்ப்பிப்பதற்குக் காத் திருக்கிறேன்," என்று கூறினர்.

### காய்ந்த நெய்யிற் கைவிடுதல்

இவ்வாறு சர்க்கரையார் இயம்பிய உரைகளைக் கேட்ட புலவர், "நீங்கள் என்னை இழித்துரைக்கவில்லையென்பது உண்மையாயின் நெய்யை நன்றாகக் கொதிக்கவைத்து அதிலே கையைத் தோய்த்துச் சத்தியஞ் செய்யுங்கள்," என்று கூறினர். உடனே சர்க்கரையார் நெய்யை ஓர் ஏனத் தில் நன்றாகக் கொதிக்க வைத்து, "நான் உங்களைச் சிறி தும் இகழவில்லை," என்று உரைத்தனர். கொதித்துக் கொண்டிருந்த நெய் சர்க்கரையார் கைக்கு எத்தகைய ஊறுபாட்டையும் செய்யாதிருத்தலைக் கண்ட புலவர் ஒரு வாறு மனநிறைவு கொண்டனர்.

**சர்க்கரை எச்சில்வாய் கழுவுதல்**

பிறகு இருவரும் ஒன்ருக அமர்ந்து உணவருந்தினர். மேலும் புலவர் சர்க்கரையாரைப் பார்த்து, "ஐயா சர்க்கரையாரே! நீங்கள் சத்தியஞ் செய்தும் என்னுடைய மனதிற்கு நன்ருக நிறைவுண்டாகவில்லை. எனது எச்சில் வாயையும் கழுவிவிடுவீராயின் முற்றுந் தெளிவேன்," என்று மொழிந்தனர். சர்க்கரையார் புலவர் உரையைக் கேட்டு மிகுந்த மகிழ்ச்சி கொண்டார். புலவருடைய எச்சில் வாயைக் கழுவிச் சுத்தஞ் செய்துவிட்டார்.

**காதல் நூல் இயற்றுதல்**

சர்க்கரைமன்ருடியாருடைய இச் செயல் புலவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அந்த வள்ளலின்மீது காதல் என்னும் பிரபந்தம் ஒன்றைப் பாடி அரங்கேற்றஞ் செய்தார். சர்க்கரைமன்ருடியார் மிக மகிழ்ந்து புலவருக்குப் பெரும்பரிசில் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

இந் நிகழ்ச்சியை இப் புலவர் தாமியற்றிய காதல் நூலில்,

"தூசர்குல வாணனுக்கோர் சோர்வுரைக்க இல்லையென
நேசமுடனேகாய்ந்த நெய்யதனிற் கையை விட்டோன்."

என்று பாடியுள்ளார். மேலும், இப் புலவரோ அல்லது வேறு யாரோ,

"மகிழ்ந்துகா ரைப்பதியில் வாழ்சர்க் கரைதான்
புகழ்ந்து திரிபுல வோரை—இகழ்ந்துநான்
வையவில்லை என்றுசொல்லி மண்டலமெ லாந்துதிக்க
நெய்யிலே கையைவிட்டான் நேர்ந்து."

என்று இந் நிகழ்ச்சியை அமைத்துப் பாடியுள்ளனர். மேலும் பலர் இந் நிகழ்ச்சியைத் தாம் பாடிய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். பொன்னுங்கால் அமுத கவிராயர்

இரகுநாத சேதுபதி சமத்தான தளவாய் அண்ணுமலைப் பிள்ளைமீது,

"சீரிலகு மான்மணிப் பாய்சுமந் தான்கம்பர்
சிவிகை பாண்டியன் ஏந்தினன்
செல்வமுயர் கச்சியப் பன்உதை பொறுத்தனன்
திகழ்சுட்டி சோமன் ஈந்தான்
தாரிலகு குமணனும் தலைகொடுத் தான்சிவன்
தானுமொரு தூது சென்றான்
சர்க்கரையும் எச்சில்வாய் கழுவினன் காளத்தி
தன திருகை புற்றில் விட்டான்
பேரிலகு கம்பனும் விரலாழி யீந்தனன்
பெரியவன் பெண் கொடுத்தான்
பிணிமுகத் தோன்கீர னைப்புரந் தான்பேதை
முதுகிலனம் ஒருவ னிட்டான்
பாருலகில் இத்தமிழ்க் குத்தொண்டு செய்தபேர்
பார்க்கில் கணக் கில்லையே
பராசர் பணிகின்ற அண்ணு மலைக்குரிசில்
பாதத்தை வருடி னனே."

என்று பாடிய செய்யுளிலும் இச் செய்தியைக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதி

இப் புலவர் சர்க்கரைமன்றாடியார்மீது பாடிய காதல் என்னும் நூலைத் தவிர வேறு நூல் இயற்றியதாகத் தெரியவில்லை. இவ் வரலாற்று நிகழ்ச்சியைக் கார்மேகக் கவிஞர் தாம் பாடிய கொங்குமண்டல சதகத்துள்,

"முகஞ்சோர்ந் தகன்றிடும் ஏகாலிப் பாவலன் முன்னநின்றே
இகழ்ந்தேன் இலையைய என்று சுடுநெயினிற் கையைவிட்
டுகந்தே யுணுமெச்சில் வாயைக் கழுவி உவப்பியற்றி
மகிழ்ந்தே புகழ்பெறு சர்க்கரை யுங்கொங்கு மண்டலமே."

என்று பாடியுள்ளார். வீரபத்திரப் புலவரைப்பற்றிய பிற செய்திகள் விளக்கமாகவில்லை.

---

## ரு. கார்மேகக் கவிஞர்

### தோற்றம்

கொங்குமண்டலத்திலே விசயமங்கலம் என்னும் ஊரிலே சைன அந்தணகுலத்திலே ஏறக்குறைய இருநூற்றைம்பது யாண்டுகட்கு முன் கார்மேகக் கவிஞர் தோன்றினார். இவருக்கு இடப்பெற்ற பிள்ளைப்பெயர் சினேந்திரன். இவருடைய தந்தையார் பெயர் பதுமநாப அய்யர். இந்தப் பதுமநாப அய்யர் அவ் வூரில் எழுந்தருளிய சந்திரப்பிரப தீர்த்தங்கரர் ஆலயத்தில் பூசைசெய்து வரும் வழிமுறையினர்.

### கல்வி

சினேந்திரன் தம்முடைய தந்தையாரிடத்தில் வடமொழி தென்மொழி எனுமிருமொழியையும் நன்கு பயின்றார். இவருடைய நினைவாற்றல் மிக வியக்கத்தக்கதாக இருந்தது. இருமுறை படித்தல் அல்லது கேட்டலால் எவ்வளவு கடினமான செய்யுட்களும் இவருக்கு மனப்பாடமாகிவிடும். இவர் தாம் படிக்கும் நூல்களில் இருந்து ஐயவினு வினவுவாராஞல் பெரிய அறிஞர்கள் தாம் ஆராய்ச்சி செய்து விடையளிக்குமாறு இருக்கும். இவருடைய அறிவுக்கூர்மையைக் கண்டவர்களனைவரும் வியந்து கொண்டாடினர்.

### செய்யுள் இயற்றல்

சினேந்திரர் கல்வி கற்றுச் சிறப்புடன் இருக்கும்போது நெருங்கிய பங்காளிகள் வாழ்ந்திருந்த பூந்துறை என்னும் ஊருக்குச் சென்றார். சிலர் இவருடைய கல்வித் திறமையை ஆராய்ந்துபார்க்க எண்ணினர். சைன சமயச் சார்பாக ஒரு வெண்பா இயற்றுமாறு கூறினர். உடனே இவர்,

"பச்சை மணிவடிவாய்ப் பார்விசுவ சேனனகம்
மெச்சு மகவாய் வெளிவந்த—உச்சிதனும்
பாரிச நாதன் பதநினைந்தோர் வாழ்வரே
சீரிசைநூல் இன்பஞ் சிறந்து."

என்று மனப்பாடஞ்செய்த பாடலைக் கூறுவதுபோல் மிகு விரைவாகக் கூறினர். இதிற் சமய உணர்ச்சி மிகப் பொதிந்துகிடத்தலைக் கண்டு அங்குள்ளவர்கள் மனங்களித்தார்கள். சைவம் முதலிய ஏனைய சமயநூல் ஆராய்ச்சியை அறிய விரும்பி முருகக்கடவுள்மீது ஒரு செய்யுள் பாடுமாறு கூறினர். இவர் உடனே,

"ஆறு விழியிலுறும் ஆறுபொறி நீர்க்கரையில்
ஆறுமக வாயொன்றாய் அன்னைசத்தி—வீறுகொடு
ஆறுபடை வீடுற் றசுரரறத் தேவர்தொழும்
ஆறுமுகன் நம்மையளிப் பான்."

என்று பாடினர். மிகு இளமைக்காலத்திலேயே பொருட்செறிவான செய்யுட்களை விரைவிற் கூறும் வன்மையோடு சமயப் பொறுமை இருத்தலையுங் கண்டு மனமகிழ்ந்தார்கள்.

### சேதுநாடு சேறல்

பிறகு சினேந்திரர் தம்முடைய தாயைப் பெற்றவர்கள் வாழ்ந்திருக்கும் சேதுநாட்டில் உள்ள அனுமந்தக்குடிக்குச் சென்றார். ஆருகத சமயநூல்களை முறையோடு கற்றுத் தேறினர். பிறகு பாண்டிநாடு, சோழநாடு, தொண்டைநாடு முதலிவைகளுக்குச் சென்றார். அங்குச் சைவம் முதலிய மற்றைச் சமயநூல்களையும் கருவி நூல்களையும் நன்றாகக் கற்றறிந்தார்.

### கார்மேகக் கவிஞர்

தாம் கற்றவைகளை ஆங்காங்கு எடுத்து உரைத்து உரைத்துச் சொன்மாரியும் பாமாரியும் பொழிந்தார். இவருடைய

கல்வித் திறத்தைக் கண்ட அறிஞர்கள் இவரைக் கார்மேகம் என்று புகழ்ந்துரைத்துக் கொண்டாடினர். அதுமுதல் இவருடைய பெயர் கார்மேகக் கவிஞர் என்றே எங்கும் வழங்கலாயிற்று.

திருமணம்

இளமைக் காலத்திலேயே செய்யுள் இயற்றல், பொருள் கூறல், சொற்பொழிவு செய்தல் ஆகியவைகளில் திறமை பெற்றுப் பல இடங்களினும் வாழ்ந்திருந்த இவர் மீண்டுந் தமது ஊராகிய விசயமங்கலத்தை அடைந்தார். அப்போது இவருக்கு அகவை இருபது நிரம்பியது. இவருடைய பெற்றோர்கள் இவருக்குத் திருமணஞ் செய்துவைக்க எண்ணினர். மைசூரைச் சார்ந்த கொல்லாபுரத்தில் சாந்தம் என்னும் பெண்ணைத் திருமணம் புரிந்தார். மாமனார் இல்லத்திற் சிலகாலம் தங்கியிருக்க நேர்ந்தது. பிறகு கொல்லாபுரத்தை விட்டுப் புறப்பட்டுத் தம்மூரான விசயமங்கலத்திற்கு வந்துசேர்ந்தார்.

நூல் இயற்றுதல்

நாம் பிறந்த இக் கொங்குமண்டலத்தின் பெருமைகளை யெல்லாம் நன்கு விளங்கி நூல் ஒன்று செய்யவேண்டும் என்று இவர் எண்ணினர். அந் நூலைச் செய்தற்பொருட்டுக் கொங்குநாட்டுப் பெருமைகளைக் காட்டுஞ் செய்திகளை யெல்லாம் தொகுத்து வைத்துக்கொண்டதன்றிப் பலரிடமும் உசாவி நாட்டினுடைய பழைய வரலாறு முதலியவைகளையும் அறிந்துகொண்டார். பிறகு கொங்கு மண்டல சதகம் என்னும் நூலைப் பாடி முடித்து அரங்கேற்றஞ் செய்தார். நூலைக் கேட்டவர்கள் மகிழ்ந்து பாராட்டிப் பலவாறு சிறப்புச் செய்தார்கள். கொங்கு மண்டல சதகத்தைத் தவிர இவர் வேறு நூல் செய்ததாகத்

தெரியவில்லை. தனிப்பாடல்கள் பலவற்றை அவ்வக் காலங் களில் பாடியுள்ளார்.

**தனிப் பாடல்கள்**

தளவாய் இராமப்பையர் என்பவர் முன்னிலையில் சத்திரியனுக்கும் நாவிதனுக்குஞ் சிலேடையாக,

"[1] முடிவாங்கி வைத்து முதுமங் கலனு
வடிகத்தி யத்த மருவிப்—படிபுகழச்
சத்திரம் வைத்துள்ள தரத்தால்ரா மையாகேள்
சத்திரியன் நேர்நாவி தன்."

என்னும் வெண்பாவைப் பாடினார். பிறகு ஒரு சமயத்தில் ஓலைச்சுவடிக்கும் ஒணானுக்கும் சிலேடையாக,

"வரிகள் கடுமையாய் வல்லவரை யுற்று
பெரியதலை கால்கொம்பைப் பெற்று—மருவுதலால்
கோணுமை வேயுத கொப்பணவே ளேசுவடி
ஒணானே ராமென் றுணர்."

என்று பாடினார். ஆணூர்ச் சர்க்கரையைப் புகழ்ந்து,

"நீர்ப்பா சனநன் னிலநிதியும்
நேரும் சாவு வாழ்வுகளில்
பார்ப்பார்க் களித்தோர் பேறெங்கே
பார்த்தோம் புலவர்க் கிழிபழங்கூழ்
வார்ப்பா ரேனும் பூமியுள
வரையும் புகழ்ச்சி யோங்குமெனும்
நேர்ப்பாக் கற்றோர்க் குதவுதமிழ்
நேயா ஆணூர்ச் சர்க்கரையே."

என்று பாடினார். வீமணக் கவிராயர் என்பவரைப் பாராட்டி,

"வீமணம ளாவுசிறு காலறுகா
லுழுதாது மென்றூட்டுவே
வீமணவி ழாவிழைபூம் பொழில்திகழும்
செங்கோட்டின் மேவிவீர

வீமணவோ வணனருளால் பகைநூறி
நிமிடகவி விளம்பவல்ல
வீமணநா வலநினது சல்லாப
மொழியமுது விரும்பினேனே."

என்று பாடினார்.

**வீமணக்கவிராயர்**

திருச்செங்கோட்டில் இருந்த வீமணக் கவிராயர் என்பவர் கார்மேகக் கவிஞரைப் பார்க்க வந்தார். அப்போது,

"தளையவிடா மரையொளித்த பேட்டடியில்
சூட்டனந்தன் தலைகீழாக
வளையவணங் கப்புலவி நீங்குவன
வயல்விசய மங்கையோங்கு
இளையசந் திரப்பிரப நாயகரை
யேத்திமனத் திடரையெல்லாம
களையவரு கார்மேகக் கவியரசே
வந்தனன்நின் காண என்றே."

என்னுஞ் செய்யுள் ஒன்றைப் பாடினார்.

**வெளியீடு**

கார்மேகக் கவிஞரால் இயற்றப்பெற்ற கொங்கு மண்டல சதகம் உரை கதைக் குறிப்பு முதலியவைகளோடு திருச்செங்கோடு தி. அ. முத்துசாமிக் கோனரால் வெளியிடப் பெற்றிருக்கிறது.

## ௩௰. ஆத்மநாத தேசிகர்

### தோற்றம்

சோழவள நாட்டிலே திருத்துறைப்பூண்டிக்கு வடக்கில் உள்ள வேளூர் என்னும் ஊரில் ஆத்மநாததேசிகர் 1650-க்கும் 1728-க்கும் இடைப்பட்ட காலத்திலே வாழ்ந்திருந்தார். இவருடைய குலம் பரம்பரைச் சைவ ஆசாரியர் குலம்.

### கல்வி

இவர் தக்க காலத்திலே தக்க அறிஞர்களிடத்திலே இலக்கண இலக்கிய நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுச் சிறந்த புலமையடைந்து விளங்கியிருந்தார்.

### சோழமண்டல சதகம்

வேளூருக்கு அண்மையில் உள்ள சித்தாய்மூர் என்னும் ஊரில் அந்நாளில் அருணசலவேள் என்னும் பெயருடைய செல்வன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அச் செல்வனும் ஆத்மநாத தேசிகரும் நெருங்கிய நண்பர்களாக விளங்கியிருந்தனர். செல்வன் புலவரைப் பார்த்து நமது சோழமண்டலத்தின் பெருமைகள் நன்கு விளங்குமாறு நூல் ஒன்று செய்யவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். ஆத்மநாததேசிகர் சோழமண்டலத்தில் வாழ்ந்திருந்த பெரியார்கள் செய்திகளை யெல்லாம் தொகுத்துச் சோழமண்டல சதகம் என்னும் பெயருடன் நூல் ஒன்று செய்தார். பிறகு பெரிய பேரவை ஒன்று கூட்டி அருணசலவேள் அந்நூலை அரங்கேற்றச்செய்து தேசிகருக்குப் பெரும்பொருள் வழங்கினன். இச் செய்திகள் மேற்படி சதகத்தின் நூறுவது பாட்டினலும் சிறப்புப் பாயிரத்தாலும் பெறப்படுகின்றன.

சிறப்புப்பாயிரம்

"கொண்டலங் கரத்தில் வேளாண்
குலத்தில்வந் துதித்த கோமான்
கண்டலம் பொழில்சூழ் சித்தைக்
கனவரு ணுச லேந்திரன்
அண்டலர் பரவுங் காளை
ஆத்மநா தன்செய் சோழ
மண்டல சதகங் கொண்டு
வண்புகழ் நிறுத்தி ஞனே."

நூருவது பாட்டு

"சுத்த குலசோ ழியருமுடி
சூட்டுங் காணி யாளர்களும்
கத்த ரெனவே வரவழைத்துக்
கவிக்குக் கனக மழைபொழிந்தே
நித்த ரெனும்பொன் வைத்தவர்சந்
நிதியிற் சதகம் அரங்கேற
வைத்த அருண சலராயன்
வாழ்வாம் சோழ மண்டலமே."

**பொருள்**

இச் சதகத்தினுள், சிதம்பரம், திருவாரூர், சீரங்கம் முதலிய பதிகள் பாராட்டப்பெற்றிருப்பதோடு இந் நாட்டில் வாழ்ந்திருந்த நாயன்மார் வள்ளல்கள் முதலியோரும் பாராட்டப் பெற்றிருக்கின்றனர். இந் நூல் பாடப்பெற்றோர் வரலாறு முதலிய குறிப்புக்களுடன் இலக்கண விளக்க பரம்பரை திருவாரூர் சோமசுந்தர தேசிகரால் 1916-ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளியிடப்பெற்றிருக்கிறது.

## எ. அழகுமுத்துப் புலவர்

### தோற்றம்

சோழவள நாட்டிலே தஞ்சை மாவட்டத்திலே நாகபட்டினத்திலே ஏறக்குறைய இருநூறு யாண்டுகட்கு முன் அழகுமுத்துப் புலவர் தோன்றினுர். இவர் தோன்றிய நாள் வைகாசித்திங்கள் விசாகம். தந்தையார் பெயர் அம்பலவாண செட்டியார்; தாயார் பெயர் சிவகாமசுந்தரி அம்மையார். இவரோடு நால்வர் உடன்பிறந்தார் தோன்றினர்.

### தந்தையார்

தந்தையாராகிய அம்பலவாண செட்டியார் நாகையில் உள்ள முருகக்கடவுள் திருக்கோயில் ஒன்றில் அலுவல் பார்த்துக்கொண்டிருந்தார். எக்காரணம் பற்றியோ அம்பலவாண செட்டியார் தம் புதல்வர் அழகுமுத்துவுக்கு நீண்டநாள் கல்விப்பயிற்சி யளிக்காமல் இருந்துவிட்டார்.

### முருகக்கடவுளிடம் அன்பு

அழகுமுத்து கல்வியறிவைப் பெருவிடினும் முருகக் கடவுளிடத்திலே பேரன்புடையவராக இருந்தார். எப்பொழுதும் ஆறெழுத்தருமறையை எண்ணி முருகனை வழிபட்டுக்கொண்டிருந்தார். இடைவிடாமல் முருகக் கடவுளுடைய திருமுன்னரே அமர்ந்திருந்தார். சிலகாலங் களுக்குப் பின் இவருடைய தந்தையார் காலமானுர். தந்தையார் பார்த்துவந்த வேலையை இவர் பார்க்குமாறு தருமத்தலைவர் சாற்றினுர். அழகுமுத்துவும் அவ்வாறே பார்க்கலானுர். இவரிடத்தில் தெய்வீகத்தன்மைகள் சில அடிக்கடி காணப்படலாயின. இதனைக் கண்டவர்கள் இவரிடத்தில் அச்சமும் அன்பும் கொண்டு ஒழுகலாயினர். இரவில் முருகக்கடவுளுக்குப் படைக்கப்பட்ட உணவை

யன்றி வேறு எதனையும் உண்ணுவிரதத்தையும் இவர் மேற்கொண்டிருந்தார்.

### முருகன் திருவருள்

ஒருநாள் இரவிற் பனிமிகுதியாகப் பெய்து கொண்டிருந்தது. அதனல் களைப்புற்ற இவர் குளிர் தாக்காத இடமாகப் பார்த்துச் சென்று ஊர்திகள் (வாகனங்கள்) வைக்கப்பட்டிருந்த இடத்தில் படுத்து நன்ருக உறங்கிவிட்டார். நள்ளிரவு வழிபாடு முடிந்தபின்னர் குருக்கள் முதலாயினேர் இவரைக் கூப்பிட்டுப் பார்த்தனர். இவர் யாதும் மறுமொழி கொடாமற் போகவே வீட்டிற்குப் போய்விட்டார் போலும் என்று எண்ணியவர்களாய்க் கோயிலைத் திருக்காப்பிட்டுக் கொண்டு தத்தம் இருப்பிடங்கட்குச் சென்று விட்டனர். வெகுநேரம் கழித்து அழகுமுத்து விழித்துக்கொண்டார். கோயிலைப் பூட்டிவிட்டு எல்லோரும் போய்விட்டதை அறிந்தார். இவருக்குப் பசி நோய் மிகுதியாக இருந்தது "முருகா பசி மிகுதியாக இருக்கிறதே யாது செய்வேன்?" என்று திருமுருகன் திருமுன்பு முறையிட்டுவிட்டுத் திருமுன்பே படுத்துக்கொண்டார். முருகப்பெருமான் அழகுமுத்துவுக்குத் திருவருள் செய்யத் திருவுளங்கொண்டார். அழகுமுத்துவுக்கு வழக்கம்போல் உணவு கொடுத்து வரும் கோயிற் குருக்கள் பிள்ளையைப்போல் வடிவங்கொண்டு அழகுமுத்துவுக்குமுன் தோன்றினர். "என்ன அழகுமுத்து?" என்று உசாவினர். அழகுமுத்து தாம் உறங்கிவிட்ட செய்தியை உரைத்தார். பசி மிகுதியாக இருப்பதால் உணவு கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

### திருவருள் பெறுதல்

குருக்கள் பிள்ளையைப்போல் வடிவங்கொண்டுவந்த முருகப்பெருமான் உணவும் தண்ணீரும் வழங்கினர். அழகு

முத்து அதனையுண்டு பசித்துன்பமும் பிறவித்துன்பமும் நீங்கப்பெற்றார். அழகுமுத்துவின் உள்ளம் மிகுந்த களிப்பினால் பூரிப்படைந்திருந்தது.

புலமை பெறுதல்

முருகக்கடவுள் அழகுமுத்துவைப் பார்த்து, "ஏ அழகுமுத்து! ஏதாவது பாட்டுப்பாடுவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளினார். அழகுமுத்து மானிடச்சட்டை தாங்கியுள்ள அறுமுகப்பரமனை நோக்கி, "ஐய! கல்வியறிவற்ற எளியேன் எக்கடவுளைக் குறித்து எவ்வாறு பாடுவேன்?" என்றார். உடனே ஐயராக வந்த மெய்யர், ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளுந் தோன்ற மயிலூர்தியின் மீது காட்சி கொடுத்தார். "அன்பனே! நான் தான் மெய் கண்டவேலவன்; என்னையே குறித்துப்பாடுவாயாக," என்று வரங்கொடுத்து மறைந்தருளினார். அக்கணமே இவருக்குச் செய்யுள் பாடும் ஆற்றல் உண்டாகியது. உடனே முருகன் மீது பாடத் தொடங்கி,

"பொன்பூத்த நூபுரப்பாதமும் புரிபூத்தமார் பீராறுதோள்
முன்பூத்தகணமுன் னுன்குடன்முடி யாறுகைவடி வேலுமாய்
கொன்பூத்தஎன் னிதயத்திலே குடிகொண்டருள் கூர்வாய்குற
மின்பூத்தபா காசண்முகா வேலாயுத வேலாயுதா."

என்று தொடங்கி நூறுபாடல்களை மெய்கண்ட வேலாயுத சதகம் என்னும் பெயருடன் பாடி முடித்தார். மறுநாள் காலையில் கோவில் திறக்கப்பட்டது. காளமேகம்போல் இவர் கவிமழை பொழிந்து கொண்டிருப்பதைக் கண்டு எல்லோரும் மிகுந்த வியப்படைந்தனர். இவர் திருவருள் பெற்ற செய்தியை அறிந்தவர்கள் எல்லோரும் இவரைப் பாராட்டிப் போற்றலானார்கள்; இவர் சிறப்பையெங்கும் சொல்லி வாழ்த்தலானார்கள்.

**புலவர்**

அதுமுதல் யாவரும் இவரை அழகு முத்துப்புலவர் என்று சிறப்பாகக் கூறலானுர்கள். ஒருவன் பொதுவான ஒரு மனிதனுக இருப்பானுயின் அவனை யாரும் திரும்பிப் பார்க்கமாட்டார்கள். அவனே அருள்பெற்று விடுவானுயின் உலகோர் அவனைத் தெய்வமாகவே போற்றி மதித்து வழிபடத் தொடங்கிவிடுவர். இஃது உலக இயற்கை. ஆகவே அருள்பெற்ற அழகுமுத்துப் புலவரைப் பலரும் போற்றுதலைக் குறித்துக் கேட்கவும் வேண்டுமோ?

**நூல்கள் பாடுதல்**

பிறகு அழகுமுத்துப் புலவர் முருகக் கடவுளின்மீது அருணகிரிநாதருடைய திருப்புகழ்ப் பாடல்களைப் போன்ற பாடல்கள் பலவற்றைப் பாடினுர். காயாரோகணப் பெருமான்மீது காயாரோகணக் குறவஞ்சி என்னும் நூலைப் பாடினுர்.

**இறுதி**

முருகக் கடவுளின் திருவருளைப் பெற்றபிறகு அழகு முத்துப் புலவருக்கு மெய்யறிவு மிகுதியாகியது. அடிக்கடி முருகனை எண்ணி அறிதுயிலில் அமர்ந்திருந்தார். திரு மணஞ் செய்து கொள்ளாமலே காலங்கழித்தார். சிவப் பதிகட்கு யாத்திரை செய்ய எண்ணி வடநாடு சென்றுர். வடநாட்டு யாத்திரையை முடித்துக் கொண்டு திரும்பிச் சீர்காழியை அடைந்து இறைவழிபாடு செய்து கொண் டிருந்தார். ஒரு மடத்தில் தங்கியிருந்தபோது இவருக்கு முடிவு காலம் நெருங்கியது. உயிர் உடலைவிட்டுச் சென் றது. இதே சமயத்தில் நாகையில் மெய்கண்ட வேலவ மூர்த்தியின் கோயிலில் மாலைக் காலம் நடந்துகொண்டிருக் கும்போது குருக்கள் முதலிய பலர் அழகுமுத்துப் புலவர்

திருக்கோயிலுக்குள் முருகனை நோக்கிச் சென்றதைப் பார்த்தார்கள். ஆனால் அவர் மீண்டு வெளிப்படாமல் மறைந்ததை யுணர்ந்து பெருவியப்படைந்தார்கள். பின்னர் நன்றாக உசாவியதில் அதே வேளையில் அழகுமுத்துப் புலவர் சீர்காழியில் இறைவன் திருவடி நீழலிற் கலந்ததையும் உணர்ந்து திருவருளைப் போற்றிப் புகழ்ந்து மகிழ்ந்திருந்தார்கள். இவருடைய உடல் சீர்காழியில் சமாதிவைத்துக் கோயில் கட்டப்பட்டது.

**இவர் இயற்றிய நூல்கள்**

க. மெய்கண்ட வேலாயுத சதகம்.
உ. காயாரோகணக் குறவஞ்சி.
ந. மெய்கண்ட வேலாயுத உலா.
ச. திறப்புகழ்.

இவருடைய திறப்புகழ்ப் பாடலில் ஒன்றை அடியிற் காண்க.

"அருமை தந்தருள் பெருமை தந்தருள்
புலமை தந்தருள் நிலைமை தந்தருள்
அழகு தந்தருள் குழவி தந்தருள் அதல்லாதே
அறிவுதந்தருள் பொறுமை தந்தருள்
இளமை தந்தருள் வளமை தந்தருள்
அரசு தந்தருள் தவசு தந்தருள் அநுகூலா
ஒருமை தந்தருள் மகிமை தந்தருள்
இருபு யங்களில் அகில் வரைந்தவர்
உறவு தந்தருள் உணர்வு தந்தருள் எனவேதான்
உரைசெய் யுந்தொறும் இனிய தொண்டர்கள்
அகம கிழ்ந்திட முகம லர்ந்திட
உதவும் உன்செயல் விதர ணங்களை அறியேனே
தரும சுந்தர வருண பங்கய
வதன மண்டலம் இலகு குண்டல
தருவெனுந் தொடை யொடுக டம்பணி இருதோளா

சமர புங்கவ விசய சம்பிரம
அமரர் தன்சிறை விடும சஞ்சல
சரவணந் திகழ் கருணை யங்கடல் எனும் வீரா

செருமு கந்தொறும் அசுரர் தன்கிளை
மடிய வென்றவ இமைய வம்பிகை
சிவனி டம்பெறு கௌரி சுந்தரி தருபாலா

சிகரை யம்பதி தணிகை யம்பதி
மயிலை யம்பதி கதிரை யம்பதி
திருவி ளங்கிய வுரகை யம்பதி முருகோனே.

---

## அ. மதுரகவி பாரதியார்

**தோற்றம்**

இவர் ஏறக்குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் பாண்டிவள நாட்டிலே பெருங்கரை என்னும் ஊரிலே மறையவர் குலத்திலே தோன்றினர். இவருக்கு இடப் பெற்ற பிள்ளைப்பெயர் கணபதி சுப்பையர்.

**மதுரகவியாதல்**

பிறகு கணபதி சுப்பையர் மதுரைமா நகரையடைந்து அங்கயற்கண்ணியையும் சொக்கலிங்கப் பெருமானையும் போற்றி வழிபட்டுக்கொண்டு அவ்விடத்திலேயே தங்கி யிருந்தார். அங்கயற்கண்ணியம்மையின் திருவருளால் இசைப் பாடல்கள் பாடும் ஆற்றல் உண்டாயிற்று. அது முதல் இசைப்பாடல்கள் பலவற்றைப் பாடிக் கொண்டிருந் தார். ஒரு சமயத்தில் இராமநாதபுரத்தில் இருந்து சேது பதியின் அமைச்சர் முத்திருளப்பபிள்ளை என்பவர் கடவுள் வழிபாட்டிற்காக மதுரைக்கு வந்தார். அப்போது அவர் மீது இவர் சில இசைப்பாடல்களைப் பாடினர். அவ் வமைச்சர் இவருடைய இசைப் பாட்டை வியந்து பாராட்டி

மதுரகவி என்னும் பெயரைக் கொடுத்ததோடு பலவகையான நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச் செய்தார்.

**வாழ்க்கையும் இறுதியும்**

பிறகு இவர் சிவகங்கை இராமநாதபுரம் முதலிய இடங்கட்குச் சென்று அரசர்கள்மீதும் பெருஞ்செல்வர்கள் மீதும் இசைப் பாடல்கள் பாடி நன்கொடை பெற்றுச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார். பிறகு ஆயிரத்து எண்ணூறும் ஆண்டுத் தொடக்கத்தில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலைபடைந்தார். இவர் பாடிய இசைப்பாடல்களில் பெரும்பாலானவை மறைந்து போயின. சிலவற்றை மட்டும் தொகுத்து "மதுரகவி பதங்கள்" என்னும் பெயரோடு அச்சிட்டு வெளியிட்டிருக்கின்றனர்.

---

## ௬௦. கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள்

**தோற்றம்**

பாண்டிவளநாட்டிலே திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள கங்கைகொண்டான் என்னும் ஊரிலே ஆங்கிலம் 1831-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் மூன்றும் நாளுக்குச் சரியான கர ஆண்டு கார்த்திகைத் திங்கள் இருபதாம் நாள் கோடகநல்லூர்ச் சுந்தர அடிகள் என்னும் பெரியார் தோன்றினர். இவர் தோன்றிய குலம் அந்தணாளர்குலம். தந்தையார் பெயர் எக்ஞேசுவர சிவன். தாயார் பெயர் காமாட்சியம்மையார்.

**கல்வி**

இப் பெரியார் இறைவன் திருவருளைப் பெரிதும் பெற்றவர். முற்பிறப்பின் தவக்குறைவால் உலகத்தில் தோன்றி

யவர். இப் பெரியாருக்கு அகவை இரண்டு நிரம்புவதற்கு முன்னரே தாய்தந்தையர் இறைவனடி சேர்ந்தனர். இப் பெரியாரையும் இவருடன் பிறந்தார்களையும் மாமன் வேங்கட சுப்பையர் என்பவர் அழைத்துச் சென்று வளர்த்தார், ஐந்தாம் ஆண்டில் இப்பெரியார் பள்ளிக்கு அனுப்பப் பெற்றார். ஆசிரியர் ஒருவர் இப் பெரியாருக்கு உலக வழக்கப்படி வடமொழி தென்மொழி ஆகியவைகளைக் கற்பித்தார். தாம் கற்கத் தொடங்கிய நூல்களையெல்லாம் இப்பெரியார் மிக எளிதாகக் கற்றுக்கொண்டார். ஏழாம் ஆண்டில் உபநயனம் நடைபெற்றது. பின்னர் கிருட்டிண கனபாடிகள் என்னும் பெரியாரிடத்தில் மறை நூல்களையும் அற நூல்களையும், தருக்கம், இலக்கணம், ஆராய்ச்சி, இதிகாசம் முதலியவைகளையும் நன்கு கற்றுணர்ந்தார். தென்மொழிப் புலமை வடமொழிப் புலமை என்னும் இருமொழிப் புலமையும் நன்கு அமைந்தது.

### மெய்யறிவு பெறல்

எவ்வளவு கல்வி கற்கினும் மெய்யறிவைப் பெறுதவரையில் எல்லாம் பொய்யறிவாகவே முடியும். இதனை நன்குணர்ந்த இப் பெரியார் ஞானசிரியரை யடைந்து மெய்யறிவைப் பெற விரும்பினர். வீரவநல்லூரில் சிறந்துவிளங்கிய சுந்தர சாத்திரிகள் என்னும் பெரியாரை யடைந்து வேதாந்த நூல்கள் பலவற்றைக் கற்றுணர்ந்தார். சூதசம்மிதை என்னும் நூலை நாள்தோறும் பாராயணஞ் செய்தார்.

### திருமணம்

மறைகளையும் மறைமுடிவுகளையும் நன்கு கற்றுணர்ந்த இவர் சீரிய ஒழுக்கமுறையில் தலைசிறந்து நின்றார். இவருடைய நல்லொழுக்கம் முதலிய உயரிய பண்புகள் எல்லோருடைய உள்ளங்களையும் கவர்ந்தன. ஒழுக்கம் மனித

னுக்கு மேன்மையைத் தருவதன்றோ? இவருடைய மாமன் இவருக்குத் திருமணஞ் செய்துவைக்க விரும்பினார் எல்லா நலங்களும் ஒருங்கமைந்த சானகி என்னும் மாதை மறைமுறைப்படி மணஞ்செய்துவைத்தார். மனைவியாரோடு இல்வாழ்க்கையை நடத்தப் புகுந்த இவர் விருந்தினர்ப் பேணல், சிவபூசை புரிதல் முதலிய நற்செயல்களையெல்லாம் மேற்கொண்டு இல்வாழ்வார்க்கோர் எடுத்துக்காட்டாக விளங்கலானார்.

### மேலும் மெய்யறிவு பெறல்

இல்வாழ்க்கையை மேற்கொண்ட இப் பெரியார் மேலும் மெய்யறிவுபெற விழைந்தார். அடைச்சாணி என்னும் சிற்றூரில் இருந்த விசுவேசுர சாத்திரிகள் என்னும் பெரியாரை அடைந்து வணங்கிப் போற்றினார். அப்பெரியார் நன்றாக மெய்யறிவு கைவரப் பெற்றவர். உண்மை ஞானி. அவர் இப் பெரியாருக்கு மெய்யறிவு கைவருமாறு அறிவுரை வழங்கியருளினார். அதனால் சுந்தர அடிகளாருக்கு ஆன்ம ஞானம் உண்டாகியது. அறிதுயிலில் அமரும் உயரியநிலை மிக எளிதாகக் கைகூடியது. அதன்பின் இப் பெரியாருக்கு உலகப்பற்று நீங்கியது. தம்முடைய மனைவியாருக்கும் வீடுபேற்றுநெறியை விளக்கி அருள்புரிந்தார். அவ்வம்மையாருக்கு மிக எளிதாகவே தத்துவஞானம் கைகூடியது.

### சிவப்பதிகட்குச் செல்லுதல்

பிறகு இப்பெரியார் சிவப்பதிகட்கு இறைவழிபாட்டின் பொருட்டுச் செல்லுதற்கு எண்ணினார். அன்பர் கூட்டத்துடன் புறப்பட்டார். பொதிகைமலை, திருச்செந்தூர் முதலிய இடங்கட்குச் சென்றார். ஆங்காங்குள்ள புண்ணிய தீர்த்தங்களில் முழுகினார்; இறைவழிபாடு செய்தார்.

செல்லுமிடங்களிலெல்லாம் சூதசம்மிதைச் சொற்பொழிவும் இறைவனைப் போற்றி இன்னிசை பாடுதல் முதலியனவும் அன்பர்களின் முயற்சியால் நடைபெற்றன. தமது ஊருக்குத் திரும்பிச் சிலகாலந் தங்கியிருந்தபின் இறைவழிபாட்டின் பொருட்டு வடநாட்டிற்குச் செல்ல எண்ணினார். நல்லடியார்களோடு புறப்பட்டார். மதுரை, திருவானைக்கா, திருவையாறு, மாயூரம், சீர்காழி, திருத்தில்லை, பழமலை, திருக்காளத்தி முதலிய சிவப்பதிகளைப் போற்றி வழிபட்டுக்கொண்டு காசியை அடைந்தார். அங்குக் கங்கையாடுதல், இறைவழிபாடுசெய்தல் முதலியவைகளைச் செய்து கொண்டு சிலகாலம் தங்கியிருந்தார். பிறகு புறப்பட்டுப் பாண்டி நாட்டுக்கு வந்து சேர்ந்தார்.

### சூதசம்மிதைச் சொற்பொழிவு

சிவபெருமானுடைய பெருமையை நன்கு விளக்குவதாகிய சூதசம்மிதையினிடத்திலே இப் பெரியாருக்கு மிகுந்த பற்றுண்டு. நாள்தோறும் அதனைப் பாராயணஞ் செய்ததுடன் பலவிடங்களினும் சூதசம்மிதைச் சொற்பொழிவுகள் நடத்திக் கொண்டிருந்தார்.

### துறவு

அடிகளார் சுத்தமல்லி என்னுஞ் சிற்றூரிலே சூதசம்மிதைச் சொற்பொழிவு நடத்திக்கொண்டிருந்தார். அச் சொற்பொழிவு இரண்டு மூன்று நாட்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஒருநாள் அடிகள் வெளியே வந்தார். பூணூல் குடுமி இரண்டையுங் களைந்தெறிந்துவிட்டு உள்ளே சென்றார். அவையினர் வியப்படைந்து திகைத்துப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அடிகளார் அவையோரைப் பார்த்து “எப்பொழுது ஒரு மனிதனுக்கு மனவுறுதி யுண்டாகிறதோ அப்பொழுதே துறவை மேற்கொள்ளவேண்டும்”

என்று மறை நூல்கள் கூறுவதை அவர்களுக்கு எடுத் துரைத்தார். இக் காலத்தில் அடிகளார்க்கு அகவை இரு பத்து மூன்றுதான்.

### வியக்கத்தக்க புதுமைகள்

பத்தமடையில் ஐந்தாண்டு நிரம்பப் பெற்றிருந்த ஒரு சிறுவன் வாய்க்காலில் வீழ்ந்து இறந்து போனான். சிறுவ னுடைய பெற்றோர் குழந்தையைக் காணாமல் இரவெல்லாம் தேடினர். மறுநாள் பிற்பகலில் வாய்க்காலில் வீழ்ந்து இறக்கும் தறுவாயில் கிடந்ததைக் கண்டனர். எவ்வளவோ மருத்துவஞ்செய்து பார்த்தும் சிறுவன் பிழைத்தெழ வில்லை. அதனால் அவர்கள் மிகுந்த துன்பப்பட்டு வருந்திக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சுந்தர அடிகள் அங்கு வந்தார். வருந்தியழுது கொண்டிருப்பவர்களைப் பார்த்து வருந்தவேண்டாம் என்றார். சிறுவனின் உடலைத் தனியிடம் ஒன்றுக்குக் கொண்டு சென்று மந்திரத் தண் ணீரை உடலில் தெளித்தார்; நெற்றியில் திருநீறிட்டார்; சிவபிரானைச் சில பாடல்களால் போற்றி வணங்கினார். சிறுவன் உறங்கி விழிப்பவன்போல் பிழைத் தெழுந்தான். அந்நிகழ்ச்சியைக் கண்டவர்கள் எல்லோரும் அடிகளாரிடத் தில் அச்சமும் பேரன்புங் கொண்டனர்.

### இறைவன் உணவிடுதல்

அடிகளார் சிறிதுகாலம் பரநிட்டையில் இருக்க எண்ணினார். கோடகநல்லூருக்குச் சென்றார். தாமிர பருணி யாற்றின்கரையில் உள்ள நாணற் காடுகளில் தங்கி நிட்டைபுரிந்து வந்தார். இப் பெரியாரின் இருப்பையறிந்து அன்பர்கள் உணவு கொடுத்துக் கொண்டிருந்தனர். ஒரு நாள் எவரும் உணவு கொண்டுபோய்க் கொடுக்கவில்லை. இறைவன் ஓர் அந்தணக்கோலம்பூண்டு நாணற்புதருக்குச்

சென்றார். அடிகளாரைக் கூப்பிட்டார். உணவு கொடுத்து உண்ணச்செய்து இன்னுரையாடிக் கொண்டிருந்தார். அந் நிலையிலேயே திடீரென்று மறைந்துபோனார். வந்தவர் அன்னம் பாலிக்குந் தில்லைப் பொன்னம்பலவன் என்பதை உணர்ந்து போற்றி மகிழ்ந்தார் நம் அடிகளார்.

**உள்ளங்கையில் தீ**

ஒருநாள் பல அன்பர்கள் அடிகளாரோடு உரையாடிக் கொண்டிருந்தனர். அடிகளார் உணவு உண்ணும் முறையைக் குறித்து அன்பர்கட்கு உரைத்துக் கொண்டிருந்தார். "உள்ளங்கையில் தீ இருக்கிறது. ஆகவே உள்ளங்கையில் படுமாறு உணவு உண்ணுதல் கூடாது. அவ்வாறு உண்பது இழிவானவர்களுடைய உணவுக்கு ஒப்பானதாகும்," என்று உரைத்தார். அச்சமயத்தில் மிக முதியரான ஆதிசைவக் குருக்கள் ஒருவர் அவ்விடத்திற்கு வந்து, "அடிகாள்! கோயிலில் அடுப்பு மூட்டுதற்குத் தீக் கொண்டுவந்தேன். மழையினால் தீயணைந்து விட்டது, தங்களுடைய அடியார்களில் யாரையேனும் தெருவுக்கு அனுப்பிச் சிறிது தீ வாங்கிக் கொண்டு வந்து கொடுக்குமாறு சொல்லுங்கள்," என்று சொன்னார். அடிகளார் தம்முடைய அடியார்களில் ஒருவரைப் பார்த்து, "தடிவீரன் கோவில் தெருவிற்குச் சென்று நெருப்பு எடுத்துக் கொண்டு வந்து கொடு" என்று சொன்னார். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த ஓரன்பர் அடிகளாரைப் பார்த்து, "அடிகாள்! தாங்கள் சிறிது நேரத்திற்கு முன் உள்ளங்கையில் தீ இருப்பதாகத் திருவாய் மலர்ந்தருளினீர்களே; அதன்படி உள்ளங்கை நெருப்பை வரவழைத்துக் கொடுக்கக்கூடாதா?" என்று கேட்டார். அடிகளார், "அவ்வாறே வரவழைத்துக் கொடுப்போம். தாங்கள் மேலே போட்டிருக்கிறீர்களே மேல்துண்டு

அதனைக் கொடுப்பீர்களா?" என்று கேட்டனர். அந்த அன்பர், "அப்படியே கொடுக்கிறேன்" என்று சொல்லி மேலே போட்டிருந்த புதுச் சரிகைத்துண்டை எடுத்துக் கொடுத்தார். அன்று தீபாவலியாகையால் விலையுயர்ந்த புதிய கோடித்துண்டு ஒன்றை அவர் மேலே போட்டிருந் தார். அடிகளார் அத் துண்டை வாங்கித் தமது உள்ளங் கையில் தேய்த்தார். துண்டில் தீப்பிடித்துக்கொண்டது. தமது துண்டில் தீப்பிடித்துக்கொண்டதைக் கண்டதும் அந் நண்பர் 'அந்தோ விலையேறப்பெற்ற துண்டாயிற்றே' என்று எண்ணித் துண்டில் பிடித்த தீயை அணைக்கமுயன் றார். அடிகளார், "அத் துண்டைத் தீக்கடவுளுக்கே கொடுத்துவிடுக" என்று கட்டளையிட்டனர். துண்டு முழுவதும் எரிந்தது. குருக்கள் அதில் இருந்து தீயெடுத் துக்கொண்டு சென்றார். அடிகளாரிடம் வாய்கொடுத்துத் துண்டிழந்த நண்பர் தம்முடைய குற்றத்தைப் பொறுக்கு மாறு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்.

### சகத்குருவும் அடிகளாரும்

அடிகளார் திருநெல்வேலியில் தங்கியிருக்கும்போது சிருங்கேரி மடாதிபதி சகத்குரு சங்கராச்சாரியார் திரு நெல்வேலிக்கு எழுந்தருளினர். சகத்குருவின் அடியார் கள் திருநெல்வேலியில் இருந்த அன்பர்கட்கெல்லாம் சகத் குருவின் வருகையைக்குறித்துத் திருமுகம் அனுப்பி வர வழைத்தார்கள். அவர்கள் சுந்தர அடிகளாரிடம் மாறு பாடான மனப்பான்மை கொண்டிருந்தபடியால் அடிக ளார்க்குமட்டும் திருமுகம் அனுப்பாமல் விட்டுவிட்டனர். சகத்குரு சுந்தர அடிகளார் தம்மைக் காணவராமையை உணர்ந்தார். சில அன்பர்களை அனுப்பி வரவழைத்தார். அடிகளார் வந்ததும் தகுந்த இருக்கை கொடுத்து அதில்

அமரச் செய்ததுடன், அடிகளார் இறைவனுடைய திருவருட் செல்வம் பெற்ற மெய்ஞ்ஞானி என்பதை அங்குள்ளவர்கட்கு எடுத்துரைத்தார். கேட்டவர்கள் அடிகளாரின் பெருமையை உணர்ந்துகொண்டு தமது மடமைக்கு நாணினர்.

**அகத்தியர் காட்சி**

அடிகளார் பொதியமலைக்குச் சென்று சிறிது காலம் அருந்தவம் இயற்றிக்கொண்டிருந்தனர். ஒருநாள் முனிவர் ஒருவர் அடிகளாருக்குக் காட்சி தந்து சென்றனர். அவர் அகத்திய முனிவரே என்று அடிகளார் பிறகு ஒருவாறு உணர்ந்து கொண்டனர்.

**பல நிகழ்ச்சிகள்**

அடிகளார் பல வியக்கத்தக்க புதுமைகளைச் செய்துகொண்டு பலவிடங்களிலும் சுற்றிக்கொண்டிருந்தனர். பல அன்பர்கள் அடிகளாருடைய தொண்டர்களாகி அருளுரை பெற்று யோகநிட்டை கைவரப்பெற்றனர். இறைவன் பலமுறை அடிகளாருக்கும் அடிகளாருடைய மாணவர் கூட்டத்திற்கும் உணவு நல்கித் திருவருள் புரிந்து காப்பாற்றியருளினர். அடிகளாருடைய பெருமையை நன்குணர்ந்த மக்கள் அடிகளாரின் சொல்வழியொழுகிச் சிறப்புப் பெற்றனர். திருவையாறு முதலிய ஏழு சிவப்பதிகட்கு அடிகளாருடைய முயற்சியினால் ஒரே நாளில் குடமுழுக்கு நடைபெற்றது. அக் குடமுழுக்கிற்குப் பொருள் பெறும் பொருட்டு அடிகளார் திருவாவடுதுறை சென்றபோது அங்கிருந்த பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களைக் கண்டனர். அடிகளாரைக் கண்டவுடன் புலவர் அவர்கள் போற்றிப்பணிந்து திருநீறு பெற்று அளவளாவி மகிழ்ந்தனர். மனோன்மணீய நூலாசிரியராகிய

சுந்தரம் பிள்ளையவர்கட்கு ஞானசிரியராக அமைந்து அருளுரை வழங்கியருளிய பெரியாரும் சுந்தர அடிகளே யாவர்.

**நூல்கள்**

அடிகளார் தம்மையடைந்த அன்பர்கட்குப் போதித்தருளும் பொருட்டு நூல்கள் சிலவற்றை இயற்றினர். மகா வாக்கியச் சுருக்கம், வேதாகமம், சம்பிரதாயப் பிரகரணம், மனோநாச மார்க்கம், சுவானுபூதி ரசாயனம், சுவாநுபவரச மஞ்சரி என்பன அடிகளாரால் இயற்றப்பெற்றவை. இவைகளுள் சுவானுபூதி ரசாயனத்தில் உலகத்தின் தோற்றம், ஆசிரிய மாணவ முறைமை, மெய்யறிவு பெறுதற்குரிய வழிகள், சுவானுபவத்தில் வரும் சச்சிதானந்தத்தின் நிரூபணம், துவைத சமயம், விசிட்டாத்துவைதம், வேதாந்தத்திற்கும் சைவசித்தாந்தத்திற்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமை ஆகியன விளக்கப்பட்டுள்ளன. சுவாநுபவரச மஞ்சரியில் பஞ்சகோசங்களின் இலக்கணம் முதலிய பல செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

**இறுதி**

அடிகளார் பலவிடங்களினும் சுற்றிக்கொண்டு இறுதியில் செட்டிமார் நாட்டிலே உள்ள அரிமளம் என்னும் ஊரையடைந்தனர். அங்கு அடிகளாருக்கு அடியார்கள் பலர் இருந்தனர். அங்குச் சிலகாலம் தங்கியிருந்தனர். ஆண்டே தமது உடலை மறைக்கவேண்டுமென்பது அடிகளார் எண்ணம். அதன்படி 1878-ஆம் ஆண்டு (ஆங்கிலம்) ஐப்பசித் திங்கள் ஆறும்நாள் பிரமசொரூபத்தில் கலந்தார். அப்பொழுது அடிகளாருக்கு அகவை நாற்பத்தேழு. பிறகு அடிகளாரின் அன்பர்கள் அங்கு உடலைச் சமாதி வைத்துக் கோயில் முதலியன அமைத்து வழிபட்டு வரலாயினர். இசைப்புலவர்களாக விளங்கியிருந்த மகா வைத்தியநாத

ஐயர், அவருடைய தமையனார் இராமசாமி ஐயர் முதலியோர் அடிகளாருடைய அடியார்களாவர். அடிகளாருடைய சமாதிக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடைபெற்றபோது இராமசாமி ஐயர் பல பாடல்களைப் பாடினார். அவற்றுள் சில:

**கலிவிருத்தம்**

பொன்பொழி அரிமளமாம் பொன்புரி நிகர்புரியில்
முன்பொழி அருண்மிகுநின் முண்டக மலரடியில்
அன்பொழி கொடியனுநின் அன்பர்க ளொடுவரலால்
தின்பொழி தரவருள்வாய் சுந்தர குருமணியே. (௧)

எந்தைநின் வடிவுறவே எங்கணும் இசைபெறவே
இந்திர நகர்வளமே இங்குறும் அரிமளமே
சந்தநின் அடியிணையே சந்ததம் ஒருதுணையே
சுந்தர குருமணியே சுந்தர குருமணியே. (௨)

புன்செயல் பலபுரிவேன் புந்திசெல் வழிதிரிவேன்
உன்செயல் எனநினையேன் உய்ந்தெழு நிலைபுனையேன்
என்செயல் இவையொழியேன் இங்குன திசைமொழியேன்
துஞ்சலில் நெறிபணியேன் சுந்தர குருமணியே. (௩)

**கட்டளைக்கலித்துறை**

பொன்னார் கயிலை மலைமேல் அமர்ந்து புவிபுகழப்
பின்னாவ லூரில் உதித்தரன் தோழரென் பேருமடைந்
தந்நாளிற் கோடக நல்லூரில் தோன்றி அரிமளமாம்
தென்னாட் டினிலமர்ந் தாயருள் சுந்தர தேசிகனே. (௪)

கல்வித் திருவையும் செல்வத் திருவையும் காதலர்க்குச்
சொல்வித் தடைவித் தருளவல் லாய்என் துயர்களைவாய்
நல்வித் தியாநிதி யாகிய மேலவர் நாடுமுத்திச்
செல்விக் கினிய தலைவாஎன் சுந்தர தேசிகனே. (௫)

வான்மாரி நோக்கும் பயிரெனத் தாய்தன் மதுரமுலைப்
பான்மாரி நோக்கும் மகவென உள்ளம் பதைத்துவிழி
தான்மாரி பெய்ய உடல்புள கிப்பநின் தண்ணருளாம்
தேன்மாரி நோக்கும் எனக்கருள் சுந்தர தேசிகனே. (௬)

---

## ௧0. சோணாசல பாரதியார்

### தோற்றம்

சோணாசல பாரதியார் காஞ்சிமாநகரிலே தோன்றினார். இவர் வாழ்ந்திருந்த காலம் திட்டமாகத் தெரியாவிடினும் அணிமைக் காலத்திலேதான் வாழ்ந்திருந்தார். இவருடைய வரலாற்றுக் குறிப்பைத் தமிழ்க்கலையில் எழுதிய திரு. அருணைவடிவேல் முதலியார் காலம் முதலியவைகளை விளக்கமாக எழுதாத காரணம் தெரியவில்லை.

### கல்வி

பாரதியார் பழங்கால முறைப்படி இலக்கண இலக்கிய நூல்களையும் சமய நூல்களையும் தக்காரிடத்தே நன்கு கற்றுத் தேறினார். இனிய செய்யுட்களை விரைந்துபாடும் திறமை இவர்பால் சிறந்து விளங்கியது. இவர் பாடல் இயற்றும் விரைவு மனப்பாடஞ் செய்த பாடலைச் சொல்லுவதுபோல் இருக்கும் என்பர். கற்றாருடன் உரையாடுவது இன்பம் பயக்கும் என்பதைப் பலரும் நன்கு அறிவர். இவருடன் உரையாடுதல் உவகையை விளைப்பதாக இருக்கும். இவர் புராண விரிவுரைகளும் பிற சொற்பொழிவுகளும் கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய் அமைந்திருந்தன.

### குமரகோட்டப் புலவர்

கல்வியைக் கற்றவர்கள் பொருளீட்டுவதிற் பெரும்பாலும் உள்ளத்தைச் செலுத்துவது வழக்கம். ஆனால் பாரதியார் இதற்கு நேர்மாறாக இருந்தார். மக்களைப் பாடும் வழக்கத்தை இவர் மேற்கொள்ளவில்லை. கடவுளைப் பாடும் வழக்கத்தையே மேற்கொண்டிருந்தார். காஞ்சியில் உள்ள குமரகோட்டத்து முருகப் பெருமான்மீது பேரன்

புடையவர். அத் திருக்கோயிலுக்குப் பலவகையான தொண்டுகளைச் செய்து கொண்டிருந்தமையின் மக்களால் "குமரகோட்டப் புலவர்" என்று கூறப்பெற்ருர்.

அருணுசலத்திடம் அன்பு

பாரதியாருடைய குடியினர் அருணையம்பதி இறைவனுக்கு அடிமைத்திறம் பூண்டவர்கள். பாரதியாரும் அவ்வாறே அடிமைத்திறம் பூண்டு விளங்கினர். அரியபாடல்களை அண்ணுமலையார்மீது பாடி அச்சியற்றிப் பலருக்கும் விலையிலாதளிக்கும் திருத்தொண்டினையும் மேற்கொண்டு விளங்கினர்.

நூல்கள் இயற்றுதல்

காஞ்சிமாநகரில் எழுந்தருளிய ஏகாம்பரநாதர் மீதும் காமாட்சியம்மை மீதும் முருகப் பெருமான்மீதும் புகழ்நூல்கள் பல இயற்றிப் பரவினர். அந் நூல்களிற் சில அச்சேறி வெளிவந்தன. சில அச்சேருமல் எழுத்துப்படியாகவே இருக்கின்றன.

கம்பைச் சந்நிதிமுறை

பாரதியார் குமரகோட்டப் பெருமானது பூசை வழிபாட்டிற்குச் சிற்றூர் ஒன்று வாங்கிவைக்க எண்ணினர். அதன்பொருட்டு நாட்டுக் கோட்டைச் செட்டியார்களிடம் பொருள் திரட்ட எண்ணினர். புறப்பட்டுப் பர்மாவுக்குச் சென்ருர். அங்குக் கம்பை என்னும் நகரத்தில் எழுந்தருளிய முருகப் பெருமான்மீது புகழ்நூல்கள் சில இயற்றவேண்டுமென்று செட்டியார்கள் சிலர் விரும்பினர். அவர்களுடைய விருப்பப்படி நூல்கள் சிலவற்றை இயற்றிக் கம்பைச் சந்நிதிமுறை என்னும் பெயரிட்டு அரங்கேற்றினர்.

**இயற்றிய நூல்கள்**

1. திருக்கச்சியேகம்பர் திரிபந்தாதி
2. கச்சிக்கம்பர் வெண்பா
3. கம்பைச் சந்நிதிமுறை

முதலிய பலநூல்கள் இவரால் இயற்றப் பெற்றனவாம்.

**கம்பை பிள்ளைத்தமிழ்**

"ஒண்சார்ங்க பாணியும் கரகபா ணியும்விண்ணில்
உறுகுலிச பாணி யுந்தாழ்ந்(து)
ஓவாமல் அஞ்சலிசெய் பாணியொடு துதிகயிலை
உற்றகல் லால்நி ழற்கீழ்
எண்சார்ந்த சனகாதி நால்வருக் கறநெறி
யினைப்பாணி காட்டி யிசையா(து)
இசைசூல பாணிக்கு மகவாயும் உபதேசம்
இனிதுரைசெய் வடிவு மாற்றி
மண்கூர்ந்த கிழவுருத் தண்டபா ணியினண்மி
மகிழுமங் குசபா ணியா
மால்யானை யான்மருட் டித்தெளித் தருள்கூர்ந்து
மற்றுமொர் இராவள் ளிமான்
தண்காந்த ளம்பாணி பற்றுவன சப்பாணி
சப்பாணி கொட்டி யருளே
சம்பகா டவிமருவு கம்பைமா நகர்முருக
சப்பாணி கொட்டி யருளே."

**கம்பையலங்காரம்**

"அத்தனை வேலணி அத்தனைத் தோகைவை யத்தனைமெய்ச்
சத்தனைக் கோழித்து சத்தனைப் பத்திவ சத்தனைச்சீர்க்
கத்தனை அன்பர கத்தனைக் கம்பைய கத்தனைமா
சித்தனை முன்னருச் சித்தனை யோதரி சித்தனையே."

---

## கக. கவிகுஞ்சர பாரதியார்

### தோற்றம்

கவிகுஞ்சர பாரதியார் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற பிறகு இயற்பெயர் மறையப்பெற்ற இவர், இராம நாதபுரம் மாவட்டம் சிவகங்கை நாட்டைச் சேர்ந்த பெருங் கரை என்னும் ஊரில் 1810-ஆம் ஆண்டு (ஆங்கீரச) ஆடித் திங்களிலே பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய பாரதியார்.

### முன்னோர்கள்

சுப்பிரமணிய பாரதியாருடைய முன்னோர்கள் முத லில் திருநெல்வேலி மாவட்டத்திலே வாழ்ந்திருந்தவர்கள். இவருடைய முன்னோர்களுக்கு அந்நாளில் இருந்த இராம நாதபுரம் அரசர் இரகுநாத சேதுபதி என்பவர் பெருங் கரை என்னும் ஊரைத் தானமாக வழங்கியபடியால் அதில் வந்து குடிபுகுந்தார்கள். இவர்களுடைய வழிமுறையில் தோன்றியவர்களிற் பெரும்பாலோர் புலவர்களாகவே விளங் கிச் சிறந்திருந்தார்கள். இவர்களுள் கோடீசுர பாரதி என்பவர் ஒருவர் தென்மொழி வடமொழி எனும் இரு மொழியிலும் சிறந்த புலமை பெற்றுத் திகழ்ந்திருந்தார். அவருடைய மகனாகத் தோன்றியவர்தாம் கவிகுஞ்சர பாரதியின் தந்தையாகிய சுப்பிரமணிய பாரதியார்.

### முருகன் திருவருள்

சுப்பிரமணிய பாரதியாருக்கு நீண்டகாலமாக மகப் பேறு உண்டாகவில்லை. அதனால் அவர் மிகுந்த மனவருத் தங்கொண்டார். தமது ஊருக்கு அண்மையில் உள்ள கொடுமளூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய முருகப் பெருமானைத் தம்முடைய எண்ணம் நிறைவேற வேண்டுமென்று போற்றி வழிபட்டு வந்தார். பாரதியா

ருடைய மனைவியாரும் பலவகையான நோன்புகளை மேற்கொண்டு முருகக் கடவுளைப் போற்றிவந்தார். முருகக் கடவுளுடைய திருவருளினாலே முற்கூறிய ஆண்டில் கவிகுஞ்சர பாரதியார் பிறந்தார்.

**கல்வி**

இவர் தகுந்த பருவத்தில் கல்விகற்கத் தொடங்கினார் மிகு இளமையிலேயே தமிழிலும் வடமொழியிலும் நல்ல புலமை பெற்றார். செய்யுள் பாடுந் திறமையும் நன்றாக அமைந்தது. இசை பாடுவதிலும் மிகுந்த தேர்ச்சி பெற்றிருந்தார். அக்காலத்தில் பெரும் புகழ்பெற்று விளங்கிய மதுரகவி என்பவரோடு மிகநெருங்கிப் பழகி வந்தமையால் இவருக்குப் பன்னிரண்டாம் அகவையிலேயே இசைப் பாடல்கள் பாடும் பேராற்றல் உண்டாயிற்று.

**மக்களைப்பாடாத மாண்பு**

முருகக் கடவுள் அளித்த புலமையை இவர் நல்ல வழியில் பயன்படுத்தினார். தமது குலதெய்வமான முருகக் கடவுள்மீதும் மீனாட்சி சுந்தரேசுரர்மீதும் மற்றைக் கடவுளர்மீதும் பாடுவதில் பயன்படுத்தினாரேயல்லாமல் மக்களைப் பாடுவதிற் சிறிதும் பயன்படுத்தவில்லை. இவருடைய உள்ளம் பக்குவப்பட்டிருந்தபடியால் மக்களைப் பாடி மடமைக்கு உள்ளாகவில்லை.

**தருமசாத்தாமீது பள்ளு**

இவருடைய பதினெட்டாவது அகவையில் இவருக்குக் கடுமையான காய்ச்சல்நோய் உண்டாயிற்று. இதனால் உடல்மெலிந்து பலங்குன்றி வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். ஓர் இரவில் அச் சிற்றூர்க் கடவுளான தருமசாத்தா இவருடைய கனவில் தோன்றினார், தன்மீது ஒரு நூல்

பாடினால் காய்ச்சல் நோய் தீரும் என்று கூறினர். மறு நாட் காலையில் கவிகுஞ்சரம் விழித்தெழுந்தார். முன் உண்டாகியிருந்த தளர்ச்சி சோர்வு முதலியன குறைந்து உள்ளக் கிளர்ச்சியும் தென்பு வளர்ச்சியும் நன்றாக உண்டாகியிருப்பதைக் கண்டார். தமக்கு உடல் தெளிவடைந்திருப்பதற்குக் காரணம் தருமசாத்தாவினுடைய தண்ணளி என்று எண்ணினர். அக் கடவுள்மீது பள்ளு என்னும் நூல் ஒன்றை இரண்டொரு நாட்களுக்குள் பாடி முடித்தார். பிறகு அக் கடவுளுக்குச் சிறப்பான முழுக்கு, பூசை முதலியவைகளை நடத்தி அக்கடவுளின் திருமுன்பு அரங்கேற்றினர். காய்ச்சல் நோய் இரண்டொரு நாட்களில் அடியோடு நீங்கிவிட்டது. அதுமுதல் இவர் காலத்திலும் பிறகு வழிமுறையினர் காலத்திலும் அக் கடவுளுக்குச் சிறப்பான பூசை வழிபாடு முதலியன செய்து வருகிறார்கள்.

### நூல்கள் இயற்றல்

தெய்வத்தின்மீது பாடல்கள் இயற்றுவதால் சிறந்த பயனுண்டாவதைக் கண்ட இவர் மதுரை அங்கயற்கண்ணி மீது "அடைக்கல மாலை"யும் "கயற்கணி மாலை"யும் பாடினர். திருப்பதி வேங்கடாசலபதிமீது "திருவேங்கட மாலை"யும் திருமாலிருஞ் சோலைமலை அழகர்மீது ஒரு "குறவஞ்சி"யும், "திருமுக விலாசமும்" இன்னும் பல தனிப்பாடல்களும் இசைப்பாடல்களும் பாடினர். தமது வீட்டில் அடிக்கடி சிறப்பான பூசை வழிபாடு முதலியன செய்தார்.

### கவிகுஞ்சரம்

இவருடைய பாடல்களையும் இசைகளையும் கேட்டவர்கள் அனைவரும் மகிழ்ந்து கொண்டாடினர். நாளடைவில்

இவருடைய சீர்த்தி எல்லாவிடங்களினும் பரவலாயிற்று. அந்நாளில் சிவகங்கை நாட்டுக்குத்தலைவராக இருந்த கௌரி வல்லப மகாராசா என்பவர், இவருடைய இசைப்பாடல்கள் சிலவற்றைத் தமது நாட்டு இசைப்புலவர்கள் பாடக் கேட்டார். பாரதியவர்களைத் தமது அவைக்கு வரவழைத்தார். இவரியற்றிய பாடல்களைத் தம்முடைய புலவர்களுக்கு முன்னே பாடி யரங்கேற்றஞ் செய்யச்செய்தார். அரசருக்கு மிகுந்த மகிழ்ச்சி யுண்டாயிற்று. தகுந்த நன்கொடை வழங்கிச் சிறப்புச்செய்தார். மேலும் "கவிகுஞ்சரம்" என்னும் சிறப்புப் பெயரும் வழங்கினர். தமது அவைக்களப் புலவர்களுக்குள் ஒருவராக இருக்குமாறும் வேண்டிக்கொண்டார். அரசருடைய வேண்டுகோளுக்கிணங்கிய கவிகுஞ்சர பாரதியார் சிவகங்கையிலேயே வந்து தங்கி வாழலானர். கௌரிவல்லப அரசர் காலத்திலும், அவருக்குப்பிறகு பட்டத்திற்கு வந்த சத்ரபதி போதகுரு அரசர் காலத்திலும் ஆதரிக்கப்பெற்று அவ்விடமே தங்கியிருந்தார்.

**வேங்கைக்கும்மி**

ஒருசமயம் அரசர் வேட்டைக்குச் சென்றார். பதினறடி வேங்கையொன்றைக் குத்திக்கொன்றார். அத் தீரச் செயலைக் குறித்து அந் நாட்டுப் புலவர்கள் எல்லோரும் புகழ்ந்து பாடினர்கள். அப் பாடல்கள் எல்லாவற்றினுள்ளும் பாரதி பாடிய "வேங்கைக்கும்மி" என்னும் பாடலே ஒன்பான்வகை இனிமைகளும் பொதிந்து மிக வியக்கத் தக்கதாக அமைந்திருந்தது. அதனை அரசர் நன்கு மதித்துத் தமது அவையில் அரங்கேற்றஞ்செய்து அதற்கு நன்கொடையாகக் "கொட்டக்கச்சியேந்தல்" என்னும் ஒரு சிற்றூரைத் தானமாகக் கொடுத்தார். ஆடையணிகலன்கள்

முதலியவைகளும் வழங்கிச் சிவிகையிலேற்றி நகர்வலமுஞ் செய்வித்தார்.

**இராமநாதபுரஞ் செல்லுதல்**

இவ்வாறு சிவகங்கையில் சில ஆண்டுகள் சென்றன. இவர் இங்கிருந்த காலத்தில் இராமநாதபுரத்தில் முத்து ராமலிங்க சேதுபதி அரசு புரிந்திருந்தார். அவர் கவிகுஞ் சரத்தின் பெருமைகளையெல்லாம் கேள்விப்பட்டார். தமது அவைக்கு வரவழைத்து இவர் இயற்றிய பாடல்கள் நூல்கள் முதலியவைகளைச் சொல்லக்கேட்டு மகிழ்ந்தார். வியந்து பாராட்டிப் பலவகையான நன்கொடைகள் வழங்கிச் சிறப்புச்செய்தார். தமது அவைக்களப் புலவர்களில் ஒருவ ராக இருக்கச் செய்து தம்மிடமே வைத்துக்கொண்டார். முத்துராமலிங்க சேதுபதியின் தமையனாராகிய பொன்னுச் சாமித்தேவரும் பலவாறு பாராட்டிப் பெருமைப்படுத்தினர். இவ்வாறு இவர் இரண்டிடங்களினுஞ் சிறப்புப்பெற்று விளங்கியிருந்தார்.

**கந்தபுராணக் கீர்த்தனை**

இவருடைய அறிவாற்றலும் கடவுளன்பும் தெளிந்த கல்வியறிவும் பொன்னுசாமித் தேவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தன. இவரைக் கொண்டு சிறந்த நூல் ஒன்றை இயற்றுவிக்கவேண்டுமென்று எண்ணினர். இராமாயண இசைப்பாடல்களைப்போல் கந்தபுராணத்தை யும் இசைப்பாடலாகச் செய்யவேண்டுமென்று எண்ணினர். தமது எண்ணத்தைக் கவிகுஞ்சரத்திற்குத் தெரியப் படுத்தினர். தமது காலத்தை முருகப்பெருமான் திருப் பணியில் செலவிடுதற்கு இது மிகவும் வாய்ப்பு என்று எண்ணிய பாரதியார் மிகுந்த மகிழ்ச்சியுடன் இணங்கினர். தமது உடன்பாட்டைத் தெரிவித்தார். அப்பொழுதே

தேவர் கந்தபுராணச் சுருக்கம் ஒன்றைப் பாரதியிடம் கொடுத்தார்.

### ஊருக்குச்சென்று பாடுதல்

பலவகையான ஆரவாரங்கள் இடையறாது நிறைந்துள்ள முகவையில் இருந்தால் இக் காரியத்தை நன்றாகச் செய்து முடிக்க முடியாது என்று எண்ணினர். தமது எண்ணத்தைச் சேதுபதிக்கும் தேவருக்கும் தெரியப்படுத்தினர். அமைதியான இடத்தில் தனித்திருந்தால்தான் நூல் செம்மையாக அமையும் என்பதை உணர்ந்த அவர்கள் இவருடைய எண்ணத்திற்கு இணங்கினர்கள். பாரதி இருவரிடமுஞ் செலவு பெற்றுக்கொண்டு தமது ஊரான பெருங்கரையை அடைந்து அங்கே தங்கினர். அப்பொழுது இவருக்கு அகவை ஐம்பத்தைந்து. ஐந்தாண்டுகளில் கந்தபுராணக்கீர்த்தனையைப் பாடிமுடித்தார். இவருடைய உள்ளம் மேலும் பண்பட்டு அமைதியை அடைந்திருந்தது. அதற்குப்பின் அரச அவைக்குப் போகாமல் இல்லத்திலேயே இருந்து தெய்வ வழிபாடு முதலியவைகளைச் சிறப்பாகச் செய்துகொண்டிருந்தார். இசைப் பாட்டை இராமநாதபுரஞ் சென்று அரங்கேற்றவும் இல்லை.

### புகழ்

இவருடைய மருகர் ஆத்மநாத பாகவதர் என்பவரும் சிறந்த இசைப்புலவராக விளங்கியிருந்தார். அவர் கந்த புராணக் கீர்த்தனையைப் பலவிடங்களினும் பாடி இசைப் பொழிவு செய்தார். அதனல் தென்னடுகளில் கந்தபுராணக் கீர்த்தனை பலவிடங்களினும் பரவிக் கவிகுஞ்சரத்திற்கு மிகுந்த புகழை யுண்டாக்கியது. தமது இசைப்பாட்டைப் பலரும் புகழ்ந்து கொண்டாடுதலைக் கேள்வியுற்ற இவர் புகழ்ச்சியையே பெரிய நன்கொடையாக மதித்து மிக

மகிழ்ந்திருந்தார். இவருடைய வாக்கை அருள்வாக்கு என்று எல்லோரும் மதித்துப் போற்றினர்கள்.

மழை பொழியப் பாட்டு

எத்தனையோ பெரியோர்கள் இறைவன்மீது பாட்டுப் பாடி மழை பொழியச் செய்திருக்கின்றனர். இவருடைய ஊரில் ஒருமுறை மழை பெய்யாமல் பயிர்கள் வாடின. அப்பொழுது கவிகுஞ்சரபாரதி,

"கந்தநீ தந்தகொட்டக் கச்சி யேந்தல்
கணையைமறிச் சான்வயலின் கதிர்களுக்கு
வந்துமழை பொழிந்துசெந்நெல் விளைந்து நன்றாய்
மனைநிறைந்து பரிபூர்ண மாக என்றன்
சிந்தைமகிழ்ந் தினதுசங்கீர்த் தனங்கள் பாடித்
தினந்தினமும் பசனைசெய்து சேம மாகச்
சந்ததிகள் மேன்மேலும் குறைவில் லாமல்
சகலவள முந்தழைக்கத் தயைசெய் வாயே."

என்னும் பாடலைப் பாடினர். உடனே மிகுந்த மழைபெய்து ஊரின் குறை தீர்ந்தது.

எருமை பிழைக்கப் பாட்டு

ஒருமுறை இவருடைய வீட்டில் இருந்த எருமை ஒன்றுக்கு நோய்கண்டு சாகக்கிடந்தது. எந்தச் சிறிய காரியத்திற்குந் தெய்வத் திருவருளையே துணையாக நம்பியிருந்த இவர் தமது வழிபடு கடவுளாகிய முருகப் பெருமானை நோக்கி,

"வேலவனே செம்பொன் விலைகொடுத்து வாங்கியவென்
பாலெருமைக் குற்றிடுந்துன் பங்களைத்தீர்த்—தேலுவையாய்
வாலெடுத்து வீசி மடிசுரந்து மேன்மேலும்
பால்கறக்கச் செய்வாய் பரிந்து."

என்னும் வெண்பாவைப் பாடினர். எருமை நோய் நீங்கிப் பிழைத்துக்கொண்டது. இத்தகைய தனிப்பாடல்கள் பலவற்றை இவர் பாடியிருப்பதாகத் தெரிகிறது.

**பிச்சுவையர்**

கவிகுஞ்சரபாரதியின் காலத்தில் வாழ்ந்திருந்த புலவர்களும் இவரைத் தெய்வமாகவே கொண்டாடினார்கள். காளமேகம் போல் யாண்டும் பாமழை பொழிந்துகொண்டு திரிந்த வேம்பத்தூர்ப்பிச்சுவையர் ஒருசமயம் இவரிடத்தில் திருநீறு வாங்கி நெற்றியில் அணிந்து கொண்டவுடனே,

"நெற்றி தனில்அணிந்தேன் நீங்கினேன் கன்மவினை
எற்றிவிட்டேன் இன்பநிலை எய்தினேன்—முற்றுணர்ந்த
கந்தனருள் பெற்ற கவிகுஞ் சரமறையோன்
தந்த விபூதி தனை."

என்னும் வெண்பாவைப் பாடினார்.

**இறுதி**

1894-ஆம் ஆண்டில் (ஆயிரம் பிறைகண்ட எண்பத்து நான்காவது அகவையில்) இவருக்குச் சதாபிடேகம் நடைபெற்றது. அதன்மேலும் இரண்டு ஆண்டுகள் சென்றபின் (1896) ஏவிளம்பியாண்டு கார்த்திகைத் திங்களில் தமது எண்பத்தாறுவது அகவையில் இறைவனடி சேர்ந்தார்.

**இயற்றிய நூல்கள்**

1. தருமசாத்தா பள்ளு
2. அங்கயற்கண்ணி அடைக்கலமாலை
3. கயற்கணிமாலை
4. திருவேங்கடமாலை
5. அழகர் குறவஞ்சி
6. திருமுக விலாசம்
7. வேங்கைக் கும்மி
8. கந்தபுராணக் கீர்த்தனை

என்பன. இவருடைய கந்தபுராணக் கீர்த்தனையைப் பாராட்டி, தஞ்சாவூர் சதாவதானம் சுப்பிரமணிய ஐயர், முறையூர் கிருட்டிண பாரதியார், உ. வே. சாமிநாதையர், மதுரை வித்துவான் சுந்தரேசுவர ஐயர், மு. ரா. கந்தசாமிக் கவிராயர், சிவகங்கை கணபதியா பிள்ளை முதலியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர்.

## கஉ. மதுரைச் சபாபதி முதலியார்

### தோற்றம்

மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் என்னும் இப் பெரும் புலவர் 1837-ஆம் ஆண்டில் திருக்குளந்தை நகரில் சைவ வேளாளர் மரபிலே பிறந்தார்.

### கல்வி

தக்க காலத்தில் பள்ளிக்கல்வியை நன்கு கற்றுத் தேறினர். பிறகு அறிஞர்களையடுத்துப் புலமைக் கல்வியையும் நன்கு கற்றுத் தேறினர்.

### பெரும்புலவர்

சபாபதி முதலியார் இலக்கண இலக்கியங்களையும் சங்க நூல்களையும் சைவசித்தாந்த நூல்களையும் ஆழ்ந்து கற்றுச் சிறந்த பேரறிவு பொருந்தி விளங்குதலைக் கண்ட தக்கார் சிலர் முதலியாருக்கு மகாவித்துவான் என்னும் பட்டம் வழங்கினர்.

### ஆசிரியத் தொழில்

முதலியாரின் புலமைத் திறத்தைக் கண்ட அரசினர் இவரை அரசாங்கப் பள்ளியில் தமிழாசிரியராக அமர்த்தினர். முதலியார் அவ் வேலையை இருபத்திரண்டு யாண்டுகள் பார்த்துப் பிறகு அரசினரின் உதவி பெற்றார். இவர் வேலையை விட்டு விலகியது 1889-ஆம் ஆண்டில் என்பர். வேலையை விட்டு விலகியபின் ஓய்வு எடுத்துக் கொண்டு தமது காலத்தை வீணகப் போக்கவில்லை. நூலாராய்ச்சி செய்வதிலும் மாணவர்கட்கு அருங் கல்விச் செல்வத்தை யளிப்பதிலும் தமது காலத்தைச் செலவிட்டார். தமிழ் மொழியை அன்றி ஆங்கில மொழியிலும் வடமொழியிலும் இவருக்குத் தக்க பயிற்சி இருந்தது.

**மாணவர்கள்**

இவர் ஓய்வு பெற்று மாணவர் பலருக்குக் கைம்மாறு கருதாது கல்வி போதிக்கத் தொடங்கியதும் இவரிடத்தில் பலபேர் கல்வி கற்கத் தொடங்கினர். பின்னாளில் தமிழ்ப் புலமைத் திறத்தில் தனித்தலைமை பெற்று விளங்கிய வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் 1885-ஆம் ஆண்டில் இவரிடம் கல்வி கற்கத் தொடங்கினார். அப்போது இவரோடு இருபதின்மருக்கு மேற்பட்டவர்கள் கல்வி கற்றுக் கொண்டிருந்தனர். அவர்களிற் பெரும்பாலார் சிறந்த புலவர்களாயினர்.

**நூல்கள்**

இவர் தமது ஊராகிய திருக்குளந்தையில் இருந்தபோது அவ்வூர் முருகக் கடவுள்மீது, "திருக்குளந்தை வடிவேலன் பிள்ளைத் தமிழ்," என்னும் நூலை இயற்றினார். இந் நூல் 1896-ஆம் ஆண்டில் வடகரை பெருநிலக்கிழார் இராமபத்திர நாயுடு என்பவருடைய பொருளுதவியால் அச்சிடப்பட்டு வெளியாகியது. மதுரையில் இருந்த காலத்தில் திருப்பரங்குன்றம் முருகக் கடவுள்மீது "திருப்பரங்குன்றத் தந்தாதி" என்னும் நூலை யமகம் பொருந்தியதாக இயற்றினார். மதுரைப் பெருமான்மீது "மதுரைமாலை" என்னும் நூலைப் பாடினார். இந் நூல் முதல் ஐம்பது பாடல்களும் முன்னீரடிகளும் பின்னீரடிகளும் தனித்தனி யமகமடக்கு வாய்ந்துள்ளன. இறுதி ஐம்பது பாடல்களும் முன்னீரடிகள் சிலேடையும் பின்னீரடிகள் யமகமடக்கும் அமைந்து விளங்குகின்றன. இந் நூலைக் குறித்து இவருடைய மாணவராகிய பரிதிமாற் கலைஞர் (வி. கோ. சூ. சாத்திரியார்),

"மாமதுரை மாலை மடக்கோ டியமகமும்
காமர் சிலேடையும் காட்டிமுதற்—பாமருவத்

தண்டமிழா சான்எம் சபாபதிப்பேர் வள்ளல்சுவைக்
கண்டமிழ்தாத் தந்தான் கனிந்து."

என்று பாராட்டிப் பாடியுள்ளார்.

### யமகமடக்கு

"மஞ்சரங்க மாவேய் மணிக்கொடிசேர் மன்றுதொறு
மஞ்சரங்க மாவேய் மதுரையே—விஞ்சுசடா
பாரத்து வாசத்தார் பற்றுடையார் வீடுபெறும்
பாரத்து வாசத்தார் பற்று."

### சிலேடை

"காவலருஞ் சோலைக் கருங்குயிலும் யோகினரு
மாவிரதங் கொள்ளு மதுரையே—மேவுகற்ப
மாநீற்றி ஞனிறைவன் மாயனயன் போற்றிடுபெம்
மாநீற்றி ஞனிறைவன் வைப்பு."

### இறுதி

அறிவுக் கடலாக விளங்கிய இவர் 1898-ஆம் ஆண்டில் தமது அறுபத்தோராவது அகவையிலே (ஆனித் திங்களிலே) இறைவன் திருவடி நீழலை அடைந்தார்.

## கரு. முத்துச்சாமி அய்யர்

### தோற்றம்

மதுரையில் இருந்த இவர் ஆங்கிலக் கல்வியும் தமிழ்க் கல்வியும் நன்கு கற்றுத் தேறினர். ஆங்கிலத்தில் எம். ஏ. என்னும் பட்டம் பெற்றார். இருமொழிப் புலமையும் இவரிடத்தில் நன்கு அமைந்திருந்தது. இனிய தமிழ்ச் செய்யுட்களை விரைந்து பாடுவதில் நல்ல திறமை இவருக்கு அமைந்திருந்தது.

### அலுவல்

நல்ல புலமை பெற்று விளங்கிய இவர் பாடசாலைப் பரிசோதகர்க்குத் துணையாளராகத் தொழில்புரிந்தார். மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரையில் தமிழ்ப்புராதன சரித்திர ஆராய்ச்சிச் சங்கம் ஆகியவைகளில் உறுப்பினராக இருந்தார். பாண்டித்துரைத் தேவரால் தோற்றுவிக்கப் பெற்ற மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் மிகுந்த கருத்துச் செலுத்தி வாணுள் முழுவதும் உழைத்தார். மக்கட்கு இவர் புரிந்த நன்மைகள் பல.

### அறிஞர்கள் தொடர்பு

இவர் காலத்தில் வாழ்ந்திருந்த அறிஞர்கள் எல்லாருடைய நட்பும் இவருக்கிருந்தது. தமிழ்க்கலை வல்லார்க்கு இவர் எழுதுங் கடிதங்கள் முழுவதுமோ அன்றி ஒரு பகுதியோ அல்லது தொடக்கமோ செய்யுள் வடிவமாக இருக்கும். காலமான அறிஞர்கள் பலர்மீது இரங்கற் பாக்கள் பாடியுள்ளார்.

### தனிப்பாடல்கள்

இவர் அவ்வச்சமயங்களில் பாடிய தனிப்பாடல்கள், திருமண வாழ்த்து, இரங்கற்பா, பொதுவான செய்திகள்

அமைந்த பாடல்கள் ஆகியவை பல. அவைகளை யெல்லாம் தொகுத்து வகைப்படுத்தி, "தனிப்பாக்கோவை," என்னும் பெயருடன் நூலாக வெளியிட்டுள்ளார். இவர் பாடிய சிலேடைப் பாடல்கள் சிலவற்றை அடியிற் காண்க,

[கடலுக்குங் குழந்தைக்குஞ் சிலேடையாகப் பாடியது]

"எண்ணிலா தெங்கும் இரைந்தே அலைதரலால்
நண்ணுபன் முத்தநனி நல்கலால்—விண்ணுலகம்
தண்மதிகண் ணுற்றக்கால் தாமெழுச்சி கொள்ளலால்
ஒண்மதியும் ஆர்கலியும் ஒப்பு."

(அ-ரை.) எண்ணிலாது - எண்ணமில்லாமல், கணக்கில் லாமல். அலைதரல் - அலைதல், அலைவீசுதல். எழுச்சி - உவகை; பொங்கிமேலெழுதல். ஆர்கலி - கடல்.

[காப்பிக்குங் கணிகைக்குஞ் சிலேடையாகப் பாடியது]

"முன்னரெளி திற்பழக்கம் முற்றுவித்துச் சார்ந்தோரைத்
தன்னடிமை யாக்கித் தளைப்படுத்துப்—பின்னர்ப்
பிணிமல்கச் செய்விக்கும் பெற்றியால் பொல்லாக்
கணிகையொடு காப்பியொப்பாங் காண்."

(அ-ரை.) தளைப்படுத்து - பிணித்து. பெற்றி - தன்மை, பெருமை.

[தாமரைக்கும் அறிவிலிக்குஞ் சிலேடையாகப் பாடியது]

"சீராரும் தாமரையும் செந்தமிழ்நூல் கல்லானும்
நேராகு மாறு நிகழ்த்தக்கேள்—நேரிழாய்!
விற்றிகழும் தாமரையும் முட்டாள் விரிதமிழ்நூல்
கற்றிலனு முட்டாளே காண்."

(அ-ரை.) நேராகுமாறு - ஒப்பாகுந் தன்மையை. நேரிழாய்!- (மகடூஉ முன்னிலை) பெண்ணே! முட்டாள் - முள்ளோடு கூடிய தாள், அறிவிலி.

இயற்றிய நூல்கள்

1. பதுமினி
2. பொருளதிகார ஆராய்ச்சி
3. தற்காலப் பெரியோர் வரலாறு
4. கதையும் பாட்டும்
5. தனிப்பாக்கோவை.

முதலியன இவருடைய நூல்கள். இந் நூல்களை இவரே அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்.

இறுதி

அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த இவருடைய பிற செய்திகளும் காலமான ஆண்டு முதலியவைகளும் விளக்கமாகவில்லை. இவர் து. அ. கோபிநாத ராயர் காலமான போது பாடிய இரங்கற்பாக்களை, கோபிநாத ராயர் வரலாற்றில் காண்க.

---

## கசு. சிதம்பர பாரதியார்

தோற்றம்

பாண்டிமா நாட்டில் திருப்பூவணத்திற்குத் தென் கிழக்கேயுள்ள மழவராயனேந்தலிலே மறையவர் குலத்திலே நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னே சிதம்பர பாரதியார் தோன்றினர். இவருடைய தந்தையார் பெயர் சுப்பிரமணிய தீட்சிதர்.

சுப்பராமையர்

சிதம்பர பாரதியாரோடு உடன் பிறந்தவர்கள் நால்வர். அவர்களுள் சுப்பராமையர் என்பவர் மூத்தவர். இந்தச் சுப்பராமையர் தமிழ்க்கல்வியை நன்றாகக் கற்றுணர்ந்து சிறந்த புலமையடைந்து திகழ்ந்தார். நூறு அவதானங்களைப் புதுக்கோட்டை அரசர்முன்பு செய்து அவரால்

தோடா, வீரசங்கிலி, சால்வை, பல்லக்கு முதலிய பரிசுக ளடைந்து சிறந்தவர்.

**சிதம்பர பாரதி**

சிதம்பர பாரதியார் இயலிசை நாடகம் என்னும் முத்தமிழ்ப் புலமையையும் பெற்றுச் சிறந்த புலவராகத் திகழ்ந்திருந்தார். அடிக்கடி புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் ஆகிய இடங்களுக்குச் சென்று தமது புலமையைக் காட்டிச் சிறந்த பரிசுகள் பெற்றுவந்தார். திரிபு, யமகம், சிலேடை, சந்தம் முதலியவைகளைப் பாடுவதில் இவர் மிகவல்லவர். இவர் பல இசைநூல்கள் இயற்றினர்.

**துறவு**

இவர் கல்வியறிவிற் சிறந்து விளங்கியமையின் உள்ளம் தூய்மையடைந்து விளங்கியது. அதன் பயனாகத் துற வறத்தையடைந்து சிதம்பர அடிகள் என்னும் பெயருடன் விளங்கியிருந்து ஏவிளம்பியாண்டு ஆடித்திங்களில் இறை வன் திருவடிநீழலை யடைந்தார்.

**இயற்றிய நூல்கள்**

1. பெரியபுராணக் கீர்த்தனை
2. உருக்குமணி கலியாணம்
3. துருவ சரித்திரம்
4. குசேல சரித்திரம்
5. அம்பரீட சரித்திரம்
6. ஞானனந்தப் பேரின்பக் கீர்த்தனை
7. மதுரை மீனாட்சியம்மை பலசந்தக் கும்மி
8. திருக்கோகர்ணம் பிரகதாம்பாள் பலசந்தக் கும்மி
9. மயூரகிரிநாதர் வண்ணம்

இவர் இயற்றிய பெரியபுராணக் கீர்த்தனைப் பாடல் ஒன்றைக் அடியிற் காண்க:

விருத்தம்

“பெரும்பவனி வந்துமணித் திருக்கோயில்
புகுந்துசிங்கப் பிடரால் தாங்கி
விரும்பவனி அரசர்பணி ஆதனத்தில்
பாநுகுல வேந்தன் பத்திக்
கரும்பவனி தயமகிழ்ந்துற் றுலகமெலாம்
காக்கவன்பர் களைக்காத் தின்பம்
தரும்பவனின் னயவுலகை எறிபத்தர்
காணியெனச் சார்ந்தார் தாமே.”

---

## கரு. பிச்சை இபுராகிம் புலவர்

### தோற்றம்

திரிசிரபுரத்திற்கு அண்மையில் உள்ள அரசங்குடி என்னும் சிற்றூரில் 1863-ஆம் ஆண்டில் இபுராகிம் புலவர் பிறந்தார். இவருடைய சமயம் முஸ்லீம் சமயம். தந்தையார் பெயர் காதிருசா ராவுத்தர். தாயார் பெயர் மதார்பீபீ அம்மையார்.

### வளர்ப்புத் தந்தை

இவருடைய மூன்றுவது அகவையில் தந்தையார் இறந்தார். தாயார் இவரை அழைத்துக்கொண்டு 1866-ஆம் ஆண்டில் திரிசிரபுரத்திற்கு வந்து சேர்ந்தார். அதிராம் பட்டினத்தைச் சேர்ந்த ஆசியார் இராவுத்தர் என்பவர் அந்நாளில் திருச்சியில் வாணிகஞ் செய்துகொண்டிருந்தார். இபுராகிம் புலவரின் தாயார் ஆசியார் இராவுத்தரை மறு மணம் புரிந்துகொண்டார். ஆகவே ஆசியார் இராவுத்தர் இபுராகிம் புலவருக்கு வளர்ப்புத் தந்தையானர். ஆசியாரிடம் செல்வம் மிகுதியாக இருந்தது.

**கல்வி கற்றல்**

ஆசியார் இராவுத்தர் தம்முடைய வளர்ப்பு மைந்தனைப் பள்ளியில் வைக்கத்தொடங்கினர். வீட்டிற்குப் பக்கத்தில் இருந்த ஒரு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்தார். பின்னாளில் பெரும்புலவர்களாக விளங்கிப் புகழ்பெற்ற அறிஞர்களிற் சிலர், முன்னாளில் பள்ளிக்கூடம் போகாத சண்டிகளாகக் குறும்புசெய்து கொண்டு திரிந்தவர்களென்று அவர்களுடைய வரலாறுகள் கூறும். பிச்சைஇபுராகிம் புலவரும் அக் கூட்டத்தில் சேர்ந்தவரானர். பள்ளிக்கூடத்திற்கு ஒழுங்காகச் செல்லமாட்டார். வலுக்கட்டாயமாகப் பள்ளிக்கூடத்தில் கொண்டுபோய்த் தள்ளினல் மற்றைப் பிள்ளைகளுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருப்பார். ஊரார் இவரைக், "குறும்பன்" என்றும், "முரடன்" என்றும், "அடங்காப்பிடாரி" என்றும் கூறுமாறு நடந்துகொண்டார். மற்றைப் பிள்ளைகளுக்கு இரத்தக் காயங்களை உண்டுசெய்து மகிழ்வார். இவருடைய வளர்ப்புத் தந்தையார் செல்வராகச் சிறந்து விளங்கியபடியால் இவரை யாரும் கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் அஞ்சினர்.

**புலமைக் கல்வி**

முதலில் முரடர்களாகவும் பொல்லாதவர்களாகவும் இருப்பவர்கள் காலப்போக்கில் நல்லவர்களாக மாறிவிடுவது உலக இயற்கை. இபுராகிம் புலவரும் மிகு விரைவில் நல்லவராக மாறிவிட்டார். அந் நாளில் உறையூரில் முத்துவீர ஆசாரி என்பவர் ஒருவர் சிறந்த புலவராக விளங்கியிருந்தார். அவர் முத்துவீரியம் என்னும் பெயரோடு இலக்கண நூல் ஒன்றுஞ் செய்தவர். சிலருடைய தூண்டுதலின்மீது பிச்சைஇபுராகிம் முத்துவீர ஆசாரிபிடஞ் சென்று இலக்கண இலக்கியங்களை முறைமையாகவும் ஒழுங்

காகவும் பயின்றார். அகவை பதினைந்து நிரம்புவதற்குமுன் சிறந்த தமிழ்ப்புலவரானார்.

**வாழ்க்கை**

புலவரின் வளர்ப்புத் தந்தையார் மிகுதியாகச் செல்வந் தேடியிருந்தபடியால் புலவருடைய வாழ்க்கை இனிதாக நடந்துகொண்டிருந்தது. இவர் தாங் கற்ற கல்வியைத் தமது ஆண்டவன்மீது புகழ்நூல்கள் பாடுவதில் செல விட்டார். இவர் இருவகைச் செல்வமும் பெற்று விளங்கு வதைக் கண்ட புலவர்கள் பலர் இவர்மீது செய்யுள்கள் இயற்றிக் கொண்டுவந்து பரிசுபெற்றுச் சென்றனர். புலவருக்குத் திருமணம் அடுத்தடுத்து நடைபெற்றது. மனைவியர் மூவர். ஆண்மக்கள் ஐவர்; பெண்மக்கள் எழுவர். பெருங் குடும்பத்தை உண்டாக்கிக்கொண்டு வள்ளலாக வாழ்க்கை நடத்திக்கொண் டிருந்தபடியினாலும், தன் மருமகள் வாழ்ந்திருந்தபடியினாலும் திருமகள் புலவரை விட்டுப் பிரியத் தொடங்கினாள்.

**ஆசிரியத் தொழில்**

புலவர், வாழ்க்கையை மேற்கொண்டு நடத்துதற் பொருட்டுத் தமது முப்பத்தாறுவது அகவையில் எஸ். பி. சி. கல்லூரியில் தமிழாசிரியராகத் தொழில்புரியத் தொடங்கினார். ஒன்பதாண்டுகள் தமிழாசிரியராகப் பணி புரிந்தார்.

**மன்னர்கள் நன்கொடை**

புலவரின் புகழ் திக்குகள்தோறுஞ் சென்றது. இராம நாதபுரம் அரசர், எட்டையபுரம் அரசர் முதலியோர் இவரை வரவழைத்து இவருடைய புலமைத்திறத்தை நன்கு கண்டுணர்ந்து தக்கவாறு பரிசில்கள் வழங்கிப் பாராட்டினர்.

**தமிழ்ச்சங்க உறுப்பினர்**

இவர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து அச் சங்கத்தின் முன்னேற்றங் கருதிப் பல வேலைகள் செய்தார். இறுதிவரை தமிழ்ச்சங்கத்தின் உறுப்பினராக இருந்தார்.

**தமிழ்த்தொண்டு**

இவர் கிறித்துவக் கல்லூரியில் வேலை பார்க்கத் தொடங்குவதற்குமுன் அஃதாவது தமது பதினெட்டாவது அகவை முதல் இலக்கண இலக்கியங்களைப் பலருக்குங் கற்பித்தார். இவரிடம் ஏறக்குறைய நூற்றைம்பது மாணவர்கள் படித்தார்கள். இலக்கணப்புலமையை நன்றாகப் பெற்றிருந்தபடியால் மாணவர்கட்கு இலக்கணத்தை இனிமையும் எளிமையும் அமைந்த முறையில் தக்கவாறு போதித்தார். இலக்கணத்தைக் கண்டு அஞ்சிய பலர் இப் புலவருடைய போதனைத்திறனால் அவ்வச்சம் ஒழிந்து இலக்கணத்தை எளிதாகக் கற்றுக்கொண்டனர். தொண்டி மவுனகுரு மஸ்தான், சின்னத்தம்பி இராவுத்தர், மீனாட்சி சுந்தரப்பண்டிதர், சந்தக்கவி சாமிநாதப் பிள்ளை, மதுரை முத்துப்பண்டிதர், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், சோமசுந்தரப்பண்டிதர், கம்பம் பீர்முகம்மதுப் பாவலர், உறையூர் சித்திரகவி சையது இமாம்பாவலர், வித்துவான் அமிர்தசுந்தரநாதப் பிள்ளை, மதுரகவி சுப்பராயப்பிள்ளை, வைத்தியலிங்கம் பிள்ளை, விசயரங்கம் பிள்ளை, கண்ணுடிப் புலவர் முதலியோர் இவரிடம் தமிழ் கற்றுத் தேறியவர்கள்.

**இறுதியும் ஊதிய உயர்வும்**

இவர் கிறித்துவக் கல்லூரியில் ஆசிரியராகப் பணி புரிந்துகொண்டிருக்கும்போது தமது நாற்பத்தைந்தாவது அகவையில் 1908-ஆம் ஆண்டில் இவ்வுலக வாழ்வைத்

MADURAI UNIVERSITY LIBRARY

துறந்தார். தமிழறிஞர்களும் பிறரும் இவருடைய மறைவு குறித்துப் பெரிதும் வருந்தினர். அறிஞர்கள் இரங்கற் பாப் பாடி இரங்கினர். இவர் இவ்வுலக வாழ்வைத் துறந்து பிணமாகக்கிடக்கும்போது சென்னைக் கிறித்துவ சங்கப் போர்டில் இருந்து "உமது தமிழ்த்தொண்டைப் பாராட்டி ஊதியத்தை 150-ல் இருந்து 250 ஆக உயர்த்தியிருக் கிறோம்" என்று அறிவிப்பு வந்ததாம்.

**இயற்றிய நூல்கள்**

1. பகுதாது பாமாலை
2. ஆதமலை திருப்புகழ்
3. வெள்ளாங்குளத்தூர் அவுலியாமாலை
4. திருமதீனத்துக் கலம்பகம்
5. திருமதீனத்துப் பதிற்றுப்பத்தந்தாதி
6. நாகூர் பிள்ளைத்தமிழ்
7. மகபூப் சுபகானிமாலை
8. நாயகத் திருப்புகழ்
9. நத்தகறுைலி யாண்டவர்கள் பிள்ளைத்தமிழ்
10. சீதக்காதிப்பதிகம்
11. மொகிதீன் ஆண்டவர் மாலை
12. திருமதீனத்து வெண்பா வந்தாதி
13. திருமதீனத்து மாலை
14. திருமதீனத்து யமக வந்தாதி

என்பன இவரால் இயற்றப் பெற்றவைகளில் சில.

## கசு. சாதுநாராயண தேசிகர்

### தோற்றம்

வேதாந்தப் புலமையையும் இலக்கண இலக்கியப் புலமையையும் ஒருங்கே பெற்று விளங்கிய இவர், வடார்க்காடு மாவட்டம் இராயவேலூரிலே, 1851-ஆம் ஆண்டு சனவரித் திங்களுக்குச் சரியான சாதாரண ஆண்டு தைத் திங்களிற் பிறந்தார். தந்தையார் பெயர் இலட்சுமைய நாயகர். தாயார் பெயர் சேடம்மாள்.

### கல்வி

இவருக்கு அகவை ஒன்பது நடந்துகொண்டிருக்கையில் தந்தையார் விண்ணுலகடைந்தனர். தாயார் இவருடைய உடலை வளர்த்தலோடு அறிவை வளர்ப்பதிலும் கருத்துச்செலுத்தினர். சுப்பைய ரெட்டியார் என்பவரைக் கொண்டு தெலுங்கு கற்பிக்கச் செய்தார். இவர் மிகு விரைவாகத் தெலுங்கு மொழியைக் கற்றுக்கொண்டார். இவர் மிகு விரைவாகத் தெலுங்கு கற்றுக்கொண்டதைக் கண்ட இவருடைய தெலுங்கு ஆசிரியர் இவரைத் தம்முடைய ஆசிரியரான இராமசாமி நாயுடுவிடம் அனுப்பித் தமிழ்க்கல்வி கற்பிக்குமாறு வேண்டிக்கொண்டார். இராமசாமி நாயுடு இவருக்குப் போதிய அளவு தமிழ்க்கல்வி கற்பித்தார்.

### வேதாந்த நூல் கற்றல்

இவருடைய பதினாறுவது அகவையில், இவர் குடியிருந்த வீட்டில் உள்ளவர்கட்கு வைணவாச்சாரியார் ஒருவர் திதிசெய்து வைத்தலைக்கண்ட இவர், "வீடுபேறு இதனால் உண்டாகமாட்டாது" என்று கூறி எள்ளி நகையாடினார். இவரது செயலைக்கண்டு இவருடைய தாயார் இவரைச்

சினந்து வைது கண்டித்தனர். அப்பொழுது எதிர்வீட்டுத் திண்ணையிலே அதிதியாக ஒரு பெரியவர் வந்து தங்கியிருந்தார். அவர் அகத்திய முனிவரின் வழியடியார். ஞானந்த நாதமுனி அடிகள் என்னும் பெயருடையார். இவரை இவருடைய தாயார் வைது கண்டித்தலைக்கண்ட அப் பெரியார் இவருடைய தாயாரைப் பார்த்து, "அம்மா! இவனை எளிமையான பையனாக எண்ணாதே. இவன் சிறந்த அறிவாளி. இவன் இயம்புவது உண்மைதான். இவனுக்கு அரையணாக் கொடுப்பாயாயின் நான் ஒரு புத்தகம் வாங்கிக் கற்பிக்கிறேன்," என்று கூறினார். பெரியவர் கூறியதற்கு அம்மையார் உடன்பட்டனர். அடிகளார் நானா சீவ வாதக் கட்டளை என்னும் வேதாந்த நூலை வாங்கிக் கற்பித்துச் சிலகாலம் உடனிருந்தனர். பிறகு வேதாந்தத்தின் உண்மைப்பொருளை உணர்த்திவிட்டுச் சென்றனர்.

மேலுங்கற்றல்

அதுமுதல் இவர் மேன்மேலும் வேதாந்த நூலை நன்கு கற்றுணரலானார். தெலுங்கு மொழியின் துணையால் வடமொழியையும் அதில் உள்ள வேதாந்த நூல்களையும் கற்றுணர்ந்தார். தமிழ்மொழியில் கற்காமலிருந்த நூல்களையெல்லாம் தாமே ஓதியுணர்ந்து தெளிந்தார்.

அலுவல்

வேதாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் நன்கு கற்றுச்சிறந்த புலமையடைந்திருந்த இவர் திருவள்ளூர் உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்து மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

திருமணம்

இவருடைய தாயார் இவர் திருமணஞ்செய்துகொண்டு குடும்பவாழ்க்கையில் ஈடுபடவேண்டும் என்று எண்ணினார்.

தமது நோக்கத்தை மைந்தனுக்குத் தெரியப்படுத்தினர். உற்ருர் உறவினர்களும் அவ்வாறே செய்யுமாறு வற்புறுத்தினர்கள். வேதாந்த நிலையில் உள்ளத்தைச் செலுத்திய இவர் "தொல்லைக் குடும்பத் துயரதனில் தொலைத்தேன் அந்தோ காலமெலாம்" என்று காலத்தைத் தொலைக்க விரும்பாதிருக்கும் நிலையினராயினும் மற்றவர்களுடைய வேண்டுகோளுக்காக ஒருவாறு இணங்கினர். திருமணம் புரிந்து திருவள்ளுவர்போல் இல்வாழ்க்கையை நடத்தினர்.

சொற்போர்

முகமதிய சமயத்தினரோடும் கிறித்துவ சமயத்தினரோடும் வைணவ சமயத்தினரோடும் சொற்போர்கள் நிகழ்த்தி, அவர்களைச் சொற்போரில் வென்று மிகுந்த புகழ் பெற்றனர்.

ஞானசிரியர்

யாண்டும் அத்வைத சமயத்தை நன்ருகப் பரப்ப வேண்டுமென்பது இவருடைய நோக்கமாக இருந்தது. பலவிடங்களினும் வேதாந்தச் சொற்பொழிவுகள் பல செய்தார். மெய்யன்போடு தம்மையடைந்தவர்களுக்கு வேதாந்த வித்தையைக் கற்பித்தார்.

பண்பு

இவர் கற்ருங்கொழுகும் நற்றிறம் முற்றும் அமையப் பெற்றவர். யாண்டும் பொறுமையையே மேற்கொள்பவர். பொய்ம்மொழி புகலுதலையறியாப் புனிதர். எஞ்ஞான்றும் பிரமவடிவமாகவே இலங்கியிருந்தார். இவருடைய ஒவ்வொரு மொழியும் வேதாந்தத்தின் நுண்பொருளை விளக்கும்.

**நூல் இயற்றல்**

அநுபவாநந்த தீபிகை என்னும் வேதாந்த நூலை இவர் இயற்றினர். அந் நூல் வேதாந்தப்பொருள் நன்கு அமையப்பெற்றது. இரண்டு மூன்று பகுதிகளாக ஆயது. அந்நூலைப்பாராட்டி, காஞ்சிபுரம் இராமாநந்தயோகி, திருமயிலை சண்முகம் பிள்ளை, மணிமங்கலம் திருவேங்கட முதலியார், பவழை தங்கவேலையர், சீயபுரம் வேலாயுத முதலியார் என்னும் பலர் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். முதற்பகுதி சருரு செய்யுட்களையும், இரண்டாவது பகுதி ருஅஅ செய்யுட் களையும் கொண்டு விளங்குகின்றன.

"அண்டடகி ரண்டமிசைந் தமிழ்வர்எங்கள் பெருமாள்
அநுதினமும் சாட்சியறி வாயிலகும் பெருமாள்
தண்டகுண அசுரர்குடி மாளவைத்த பெருமாள்
தூயகுணச் சுரர்தமக்குத் துணையிருக்கும் பெருமாள்
பண்டைமலத் திமிரமிறப் பதமளிக்கும் பெருமாள்
பரந்தாம னுய்ப்பிறவிப் பயமறுக்கும் பெருமாள்
தொண்டர்தமக் கருள்வான்பல் வடிவெடுக்கும் பெருமாள்
துரிசறவெற் கருளவெளி தோன்றுபெரு மாளே."

என்பது இரண்டாந் திருமுறையில் ஒரு பாட்டு.

**இறுதி**

இப்பெரியார் தமது அறுபதாம் அகவையில் 1911-ஆம் ஆண்டு சனவரித்திங்கள் 25-ஆம் நாள் (சாதாரண ஆண்டு தை கஉ) வீடுபேற்றை யடைந்தனர்.

## கஎ. பொன்னையா முதலியார்

**தோற்றம்**

இவர் ஏறக்குறைய நூற்றைம்பது யாண்டுகளுக்குமுன் புதுவையில் தோன்றிக் கல்வி கேள்விகளில் சிறந்தவராக விளங்கினர். இவருடைய தந்தையார் பெயர் முத்து முதலியார். இலக்கண இலக்கியங்களையன்றி வேதாந்த சித்தாந்த நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றறிந்தார். வடமொழி உணர்ச்சியும் இவரிடம் நன்றாக அமைந்திருந்தது.

**ஆசிரியர்**

தம்மையடைந்த மாணவர்கட்கு வேதாந்த சித்தாந்த நூல்களையும் இலக்கண இலக்கியங்களையும் போதிப்பதிலேயே இவர் தமது காலத்தைப்போக்கினர். இவரிடம் கல்விகற்ற பலர் சிறந்த புலமை நலத்தையடைந்தனர்.

**நூல்கள் இயற்றல்**

இவர் தமது காலத்தைப் பெரும்பாலும் நூல்கள் இயற்றுவதில் செலவிட்டார்.

1. விநாயகர் அநுபூதி
2. விநாயகர் அலங்காரம்
3. விநாயகர் திருப்புகழ் போற்றிக்கலிவெண்பா
4. மயிலாசல முருகர் மும்மணிக்கோவை
5. குருத்தோத்திர பஞ்சகம்
6. இலக்குமியந்தாதி
7. சிவாநந்த லகரி
8. தேவிமானத பூசை
9. சிற்சத்தியட்டகம்
10. தட்சணாமூர்த்தியட்டகம்
11. சுகாட்டகம்
12. மோட்ச சாதன பஞ்சகம்
13. சிவோக பஞ்சகம்

14. மகீடா பஞ்சகம்
15. திருக்குத்திருசிய விவேகம்
16. ஆத்மபோதம்

முதலியன இவரால் இயற்றப்பெற்ற நூல்கள். இவருடைய நூல்களைப் பாராட்டி, சிவசுப்பிரமணிய தேசிகர், சிதம்பரம் சண்முக அடிகள், குணமங்கலம் பச்சையப்ப நயினர் என்னும் பலர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளார்கள்.

"தேகமிந் தியங்கள் புந்தி திகழ்மனம் பகுதி யாதி
பாகமாம் இவற்றி னென்றும் பகர்விலட் சணமாய் நின்று
சோகமாம் அவற்றின் விர்த்தி சாட்சியாய்த் துலங்கு கின்ற
ஏகமாம் பிரத்யக் கான்மா இறைவன்போன் றுணரவேண்டும்."

என்பது இவர் இயற்றிய ஆத்மபோதப் பாடலுள் ஒன்றாகும்.

### இறுதி

பிறகு இவர் துறவறத்தை மேற்கொண்டு சிவாநந்த மூர்த்தி என்னும் பெயருடன் விளங்கியிருந்தார். இவர் காலமான நாள் முதலியன விளக்கமாகவில்லை.

---

## கஅ. ஆ. முத்துத்தம்பி பிள்ளை

### தோற்றம்

ஈழவளநாட்டிலே உள்ள மானிப்பாய் என்னும் ஊரில் 1858-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் பதினெட்டாம் நாள் ஆ. முத்துத்தம்பி பிள்ளை பிறந்தார். தந்தையாருடைய பெயர் ஆறுமுகம் பிள்ளை. இவருடைய குலம் வேளாளர் குலம். தந்தையாராகிய ஆறுமுகம் பிள்ளை கடவுளிடத்தில் அன்பும் நல்லொழுக்கமும் அமையப்பெற்றவர். இச்சீரிய குணங்கள் முத்துத்தம்பி பிள்ளையிடமும் அமைந்

திருந்தன. முத்துத்தம்பி பிள்ளையின் முன்னோர்கள் சில தலைமுறைகளாக உயர்ந்த நிலையில் விளங்கியிருந்தனர்.

### கல்வி

மானிப்பாய்க்கு அண்மையில் உள்ள சிற்றூர் ஒன்றில் இவருடைய கல்விப்பயிற்சி தொடங்கியது. தொடக்கப் பள்ளியில் கற்கவேண்டியவைகளைக் கற்றுக்கொண்டபின் யாழ்ப்பாணம் நடுநிலைப்பள்ளியில் இவருடைய மேற் படிப்புத் தொடங்கியது. இங்கு இவருடைய கல்விப் பயிற்சி பலவழிகளினும் முன்னேறிச் சிறந்தோங்கியது. ஒரு துறையில் பணிபுரிதற்கான திறமையை அடைந்தார்.

### அலுவல்

இலங்கை எஸ்டேட் கம்பெனியாரால் நாவலப்பிட்டி மலையில் நடத்தப்பெற்ற பள்ளி ஒன்றில், 1876-ஆம் ஆண்டு தமிழாசிரியராகப் பணிபுரியத்தொடங்கினார். ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் பணிபுரிந்தார். அத் தொழிலில் இவருக்குப் போதிய ஊதியம் கிடைத்தது. ஆயினும் இவர் இந்தியநாட்டிற்கு வரவேண்டும் என்னும் எண்ணத்தை மேற்கொண்டிருந்தார். 1880-ஆம் ஆண்டு இலங்கையை விட்டுப் புறப்பட்டு இந்தியாவுக்கு வந்து சேர்ந்தார்.

### இந்தியாவில் வேலை

"தான் சென்ற திசைக்குப் பாழ்நட்டோரை இன்மை" என்று அறநூல் முறையிடுகின்றது. இதன்பொருள் நண்பர்களில்லாத ஊருக்குச்சென்றால் தொல்லையேற்படும் என்பது. நண்பர்களையும் உறவினர்களையும் தம்மையறிந் தவர்களையும் பெற்றிராத இந்தியாவுக்கு வந்த இவர் தொடக்கத்தில் மிகத் தொல்லைப்பட்டார். ஆயினும் அத் தொல்லைகளைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. தமது உழைப்பினாலேயே முன்னுக்கு வரவேண்டும் என்னுந்திடம்

படைத்த உள்ளத்தோடு மிக ஊக்கமாக ஆக்க வேலைகளில் ஈடுபட்டார். பலவகையான தொல்லைகளுக்கு இடையிலுந் தமிழை மறக்கவில்லை. எப்பொழுதும் தமிழ் நூல்களைப் படிப்பதிலேயே தமது காலத்தைப் பெரிதுஞ் செல விட்டார்.

### திருத்துறைப்பூண்டியில் வேலை

தஞ்சை மாவட்டத்திலேயுள்ள திருத்துறைப்பூண்டியில் அழகியநாதன் செட்டியார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருடைய மக்களுக்குத் தமிழ் பயிற்றும் ஆசிரியராக இவரை ஏற்படுத்தினார்கள். இத் தொழிலால் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு வாழ்க்கையை நடத்துவதற்கு இயலாது என்பதை இவர் நன்ருக உணர்ந்திருந்தும் சிறிது காலம் அந்த வேலையை ஏற்றுக்கொண்டு பார்த்தார்.

### நாகபட்டினத்தில் வேலை

மேற்கூறிய வேலையில் இருந்து விரைவில் நீங்கினர். நாகபட்டினத்தையடைந்தார். அங்கிருந்த ஆண்டர்சன் கம்பெனியில் நல்ல ஊதியத்தில் எழுத்தாளராகவும் கணக்காளராகவும் தொழில் புரியத்தொடங்கினர்.

### ஆசிரியத் தொழில்

அந்நாளில் பொறையாற்றில் "சத்தியாபிமானி" என்னும் பெயருடன் பத்திரிகையொன்று தொடங்கப்பெற்றது. பத்திரிகையைத் தொடங்கிய உரிமையாளர், முத்துத்தம்பி பிள்ளையை அழைத்து, அப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணிபுரிய வேண்டிக்கொண்டார். அவருடைய வேண்டுகோளுக்கு இசைந்து இவரும் ஆசிரியராக இருந்து நல்ல பணிபுரிந்தார். உரிமையாளருடைய உளம் உவக்குமாறு இவர் தமது கடமையை நிறைவேற்றியபடியால், அவர் உளம் மகிழ்ந்து பெரிய தொகையை நன்கொடையாக

வழங்கினார். அத் தொகையைத் தமிழ் இலக்கியப் பணிக்குப் பயன்படுத்துமாறும் கேட்டுக்கொண்டார்.

**சென்னையில் அச்சகம்**

முத்துத்தம்பி பிள்ளை 1885-ஆம் ஆண்டு சென்னை மாநகருக்குக் குடியேறினார். ஆண்டர்சன் தெருவில் "சூபிலி அச்சகம்" என்னும் பெயருடன் அச்சகம் ஒன்றைத் தொடங்கி நூல்களைப் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டார். காளிதாசன் வாழ்க்கை வரலாற்றை வடமொழியில் இருந்து மொழிபெயர்த்துப் பல பதிப்புகள்வரை வெளியிட்டார். சீரிய முறையில் நூல்கள்பல இவ்வச்சகத்தில் பதிப்பிக்கப்பட்டு வெளிவந்தன. 1890-ஆம் ஆண்டில் விக்டோரியா இயற்கை வரலாற்றுக் கழகத்தின் உதவியாணையாளராக இலங்கைக்கும் சென்னை மாகாணத்திற்கும் ஏற்படுத்தப்பெற்றார்.

**தாய்நாடடைதல்**

1893-ஆம் ஆண்டில் இலங்கைக்குத் திரும்பி யாழ்ப்பாணத்தை யடைந்தார். வண்ணார் பண்ணையில் இருந்த ஆறுமுக நாவலரின் வீட்டை விலைகொடுத்து வாங்கி அதற்கு "நாவலர் கோட்டம்" என்று பெயரிட்டார். வார்டு அண் தேவி என்னும் பெயரோடு மருந்துக்கடையும் புத்தகக் கடையும் ஒருங்கு அமைய ஒரு கடையைத் தொடங்கினார். ஓழிவு வேளைகளில் மருத்துவத்தைக் கற்று வல்லவராகவும் ஆனார். "நாவலர் அச்சகம்" என்னும் பெயருடன் அச்சுக்கூடம் ஒன்றையுந் தொடங்கினார்.

**தமிழ்த் தொண்டு**

இவர் பல நூல்களைப் பதிப்பித்தார். இலகுபோதம் என்னும் தலைப்பில் பல பாடப்புத்தகங்களை வெளியிட்டார். இவருடைய உரைநடை எளிமையும் இனிமையும் அமையப்

பெற்றதாக விளங்கும். இவர், அபிதான கோசம் என்னும் பெயரோடு அகரவரிசை நூல் ஒன்றை எழுதிவெளியிட்டார். இந்நூல் பெயர் விளக்கம் தெரிந்துகொள்வதற்கு உறுதுணையாக அமைந்து விளங்குகிறது. 1883-ஆம் ஆண்டில் "இலங்கை வரலாற்றுச் சுருக்கம்" என்னும் நூலை எழுதி வெளிப்படுத்தினார். ஆங்கிலத்திற்கு ஆங்கிலமும் தமிழும் பொருளாக அமைந்த அகரவரிசை நூல் ஒன்றை எழுதி வெளிப்படுத்தினார். இந்நூல் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பேருதவியாக அமைந்து அவர்களால் புகழப்படுவதாயிற்று. மற்றும் பல நூல்களை இயற்றியும் மொழிபெயர்த்தும் வெளியிட்டார். பாரதச் சுருக்கம் என்னும் நூல் மக்கள் அனைவரும் பாரதக் கதையை எளிதாக உணர்ந்து இன்புறுவதற்கு ஏற்றவாறு அமைந்து எல்லோராலும் போற்றப்பெற்றது. மாணவர்கள் எளிய நடையில் தமிழ் இலக்கண இலக்கியப் புத்தகங்களைப் படித்துணர்ந்து கொள்ளுமாறு, எளிய நன்னூல், சிவிலியன் இலக்கண நூல் என்னும் நூல்களை எழுதினார்.

**பரிசு**

அச்சகத்துறையில் இவருடைய பெருமையைப் பாராட்டி 1912-ஆம் ஆண்டில் அகில இலங்கைப் பொருட்காட்சி, வெள்ளிப் பதக்கத்தை இவருக்குப் பரிசாக வழங்கியது.

**மருத்துவப் பத்திரிகை**

"தமிழ் மருத்துவச் செய்தி" என்னும் மாதவெளியீடொன்றையும் இவர் நடத்தினார்.

**பலபணிகள்**

மதுரைத் தமிழ்ச் சங்கம் தொடங்கிய காலத்தில் இருந்து அதன் வளர்ச்சியின் பொருட்டும் இவர் உழைத்

தார். தேர்வாளராகவுஞ் சிலகாலம் பணியாற்றினர். சென்னை அரசாங்கத்தார் வெளியிட்ட அகரவரிசை நூலுக்கும் உதவி செய்தார். பொதுவாழ்விலும் இவர் ஈடுபட்டார். சைவப்பற்று, சிவவழிபாடு, செந்தமிழ்த் தொண்டு முதலியன இவரிடஞ் சிறந்தோங்கின.

**இறுதி**

1917-ஆம் ஆண்டில் நோய்கொண்டு ஆறுதிங்கள் வருந்திய இவர், ஐம்பத்தொன்பதாவது அகவையில் அதே ஆண்டில் நவம்பர்த் திங்கள் மூன்றாம் நாள் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

**இயற்றிய நூல்கள்**

1. அபிதான கோசம்
2. இலங்கை வரலாற்றுச் சுருக்கம்
3. ஆங்கில—ஆங்கிலத் தமிழ் அகரவரிசை
4. யாழ்ப்பாண வரலாறு
5. பாரதச் சுருக்கம்
6. இலக்கண நூல்கள் முதலியன இவரால் இயற்றப் பெற்றன.

---

## கசுல. து. அ. கோபிநாதராயர்

**தோற்றம்**

சோழவள நாட்டைச் சேர்ந்த துறையூரில் இருந்து சீரங்கத்திற்கு வந்து வாழ்ந்த மகாராட்டிர மாத்துவ அந்தணரது உயர்ந்த குடும்பம் ஒன்றில் கோபிநாதராயர் 1872-ஆம் ஆண்டிற் பிறந்தார்.

**கல்வி**

திருச்சிராப்பள்ளியில் உள்ள ஆங்கிலக் கல்லூரியிற் கல்விபயின்று இளமைப் பருவத்திலேயே பி. ஏ. த் தேர்வில்

தேறினர். பிறகு இரசாயன நூல் கல்வியைக் கற்று எம்,ஏ என்ற பட்டத்தை 1899 ஆம்-ஆண்டில் பெற்றார். வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பிற மொழிகளையுங் கற்றார்.

**ஓவியக்கலை உணர்வு**

ஓவியத் துறையிலும் இவருக்குச் சிறந்த புலமை இளமைப் பருவத்திலேயே அமைந்திருந்தது. இவர் தாம் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலத்தே பலநிறந் தீட்டிய ஓவியம் ஒன்றை எழுதினர். அதன் அழகுஞ் சிறப்பும் பலரானும் பாராட்டப் பெற்றது. ஓவியக்கலைவல்ல அவையினர் அப் படத்தைப் புகழ்ந்து பொன்பதக்கம் ஒன்றை நன்கொடையாக வழங்கினர். அப் படம் சென்னைப் பொருட்காட்சிச் சாலையில் இன்றும் விளங்கிக் கொண்டிருத்தலைக் காணலாம்.

**அலுவல்**

மேற்கூறப்பட்ட கலைவன்மைகளுடன் சாசன பரிசோதனைத் திறமும் இவருக்குச் சிறப்பாக அமைந்திருந்தது. பழைய கல்வெட்டுகள் முதலிய பண்டைக் காலச் செய்திகளை ஆராய்ந்தறிவதிலும் அதைக் குறித்து மேலும் ஆராய்ச்சி செய்வதிலும் விருப்பமும் ஊக்கமும் இவருக்கு மிகுதியாக இருந்தன. ஆகவே அரசாங்க சாசன இலாகாவில் 1902 ஆம் ஆண்டில் ஓர் அலுவலைப்பெற்று அமர்ந்தார். ஆயினும் இவர் அவ்வலுவலை நெடுங்காலம் மேற்கொண்டிருக்கவில்லை. ஊக்கமும் உழைப்பும் உள்ள சிறுவராக இருந்தமையின் அவ்வலுவலை விட்டு நீங்கித் தமது மன விருப்பம்போல் ஆராய்ச்சியை நடத்தலானர்.

### ஆராய்ச்சியும் உழைப்பும்

ஆராய்ச்சியில் அவாவும் ஊக்கமுங்கொண்ட இவர் தமது கைப்பொருளைச் செலவிட்டு நாட்டின் பல பாகங்களுக்குஞ் சென்று கல்வெட்டுகள் செப்புத் தகடுகள் முதலியவைகளைக் கண்டு பிடித்து ஆராய்ச்சி நடத்தினர். அவ்வாறு செய்த ஆராய்ச்சியில் வரலாற்று நுட்பங்கள் பல தெரியலாயின. அவ் வாராய்ச்சிச் செய்திகளை ஆங்கிலப் பத்திரிகை தமிழ்ப் பத்திரிகை முதலியவைகளில் வெளிப்படுத்தினர். இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல மதுரைச் செந்தமிழ் வெளியீட்டில் வெளியாயின. தமிழ் நாட்டின் பழைய வரலாறுகளை ஆராய்ச்சி செய்து வெளியிடுவதில் இவருக்கிருந்த ஊக்கமும் உள்ளக் கிளர்ச்சியும் மிகப்பெரிது. வடமொழி, தெலுங்கு, மலையாளம், கன்னடம் முதலிய பலமொழிப் பயிற்சிகள் இவருக்கிருந்தது இவருடைய சாதன ஆராய்ச்சிக்குப் பெருந்துணையாயின. பிறரால் கண்டுபிடிக்க முடியாதவாறு வடிவு சிதைந்தும் எழுத்துக் குளறியும் கிறுக்கலாகவும் இருந்தவைகளை யெல்லாம் எளிதாக இவர் கண்டுபிடித்த திறமையைக் கண்ட பலர் இவர் இத் துறை ஆராய்ச்சிக்கென்றே இவ்வுலகில் உடலெடுத்தவர் என்று பாராட்டிப் பேசினர்.

### ஓவியப்பயிற்சியின் உதவி

இவர் பெற்றிருந்த ஓவியப்புலமை இவருடைய சாசன வரலாற்று ஆராய்ச்சித் துறையைப் பெரிதும் அழகுபடுத்தி நின்றது. பழைய செய்திகளைக் குறிக்கும் உருவங்களையோ சிலைகளையோ இவர்கண்டால் அவற்றின் படிகள் எடுத்தற்குரிய கருவிகளின் உதவியில்லாமலே உள்ளது உள்ளபடி தமது கையினுலேயே எழுதிவிடும் ஆற்றல் இவருக்கு அமைந்திருந்தது. மேலும் நிழற்படம் எடுக்குந் துறையிலும் இவருக்குப் பழக்கம் மிகுதியாக இருந்தது.

### திருவநந்தபுரத்தில் வேலை

1902-ஆம் ஆண்டில் திருவநந்தபுரம் அரசாங்கத்தினர் சாசன இலாகா ஒன்றைப் புதிதாக ஏற்படுத்தினர். திருவாங்கூர் அரசர் இராயருடைய சாசன ஆராய்ச்சிப் புலமையைப் பற்றிப் பலராலும் கேள்விப்பட்டார். அவ்விலாகாவின் தலைவராக இராயரை அரசரே ஏற்படுத்தினுர். இராயர் அவ்வலுவலைத் தமது ஆயுள்வரை பார்த்துக்கொண்டிருந்து கண்டுபிடித்த ஆராய்ச்சி உண்மைகள் பல. தாமிர சாசனங்களும் கல்வெட்டுகள் பலவும் இவரால் கண்டறியப்பட்டன.

### நூல் எழுதுதல்

“மலையாள மொழி சில நூற்றுண்டுகளுக்கு முன் அந்நாட்டில் இல்லை; தமிழ்மொழியே அந் நாட்டுக்குரிய மொழியாக இருந்தது. காலப்போக்கில்தான் மலையாளமொழி தமிழ்மொழியில் இருந்து மாறுபாடுகளோடு தோன்றிற்று. அந்நாட்டுத் தலைவர்களும் மக்களும் தமிழ் மக்களில் இருந்து வேறுபட்டவர்களல்லர்,” என்னும் இத்தகைய முடிவுகளைத் தாம் ஆராய்ச்சியாற் கண்டறிந்து, “திருவாங்கூர்ச்சாசனத் தொடர்” என்னும் நூலாக ஆங்கிலத்தில் எழுதினுர். பண்டைத் தமிழ் எழுத்துக்கள் காலந்தோறும் வேறுபட்டு வழங்கிய முறையை விவரப்படங்களுடன் நன்கு விளக்கி இவரால் அந் நூல்தொகுதியில் எழுதப்பெற்ற சிறந்த ஆராய்ச்சியுரை எல்லோரும் போற்றிப் பாராட்டத்தக்க தாகும்.

### விக்கிரகதத்துவம்

திருவாங்கூரில் அலுவலில் இருக்கும்போதே சிற்பத் துறையினும் இவர் மிகுந்த ஊக்கமெடுத்து உழைத்தார். இதன்பொருட்டுக் கிடைத்தற்கரிய சிற்ப நூல்களையும்

ஆகமங்களையும் தொகுத்து ஆராய்ச்சி செய்தார். "விக்கிரக தத்துவம்" என்னும் பெருநூல் ஒன்றை ஆங்கிலத்தில் எழுதி வெளிப்படுத்தினர். நம் நாட்டுக் கோயில்களிலும் கற்கட்டிடங்களிலும் அமைந்த உருவங்கள் சிலைகள் முதலியவற்றின் சிற்ப உண்மைகளை அவற்றின் வரலாற்றுக் குறிப்புகளுடனும் உருவப் படங்களுடனும் எழுதிப் பதிப்பிக்கப்பெற்ற இந்நூல் உலகம் முழுவதும் போற்றத் தக்க சிறப்புடையதாகும். சிற்ப வரலாறு ஓவியக்கலை முதலியவைகளில் வல்ல இவரைப்போன்ற பெருஞ் சிறப் புடையோர்க்கல்லது மற்றையோர்க்கு இத்தகைய அருஞ் செயல்கள் செய்து முடித்துப் புகழ்பெறற்கு மிக அருமை யாகும்.

**சமயத்திறன்**

திருவரங்கத் திருப்பதியிற் பிறந்து வளர்ந்த இவர் வைணவசமய வரலாறுகளிலும் பழக்க வழக்கங்களினும் சிறந்த புலமை பெற்றிருந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் தகுந்தவர்களைக்கொண்டு நடப்பிக்கப்பெறும் "மணியையர் உபந்யாசத்தொடர்" என்னும் சொற் பொழிவை அச் சங்கத்தார் விருப்பப்படி இவர் செய்யத் தொடங்கியபோது வைணவசமய வரலாற்றைப்பற்றி விரிவாகச் சொற்பொழிவு செய்த செய்தியைப் பலரும் அறிவர்.

**பிறர் மதிப்பு**

இராயருடைய பேரறிவையும் பரந்த ஆராய்ச்சித் திறமையையும் நன்குணர்ந்த பிறநாட்டறிஞர்களும் இவ ரிடத்தில் பெருமதிப்புக் காட்டிப் புகழ்ந்து போற்றினர்.

**சோழ வமிச சரித்திரம்**

மதுரைத் தமிழ்ச்சங்கத்தை ஏற்படுத்திய பாண்டித் துரைத்தேவர் இராயரிடத்தில் பெருமதிப்பும் பற்றும்

வைத்திருந்தார். இராயரைக்கொண்டு சோழமன்னர்களது குலமுறை வரலாற்றை எழுதி வெளியிடவேண்டும் என்னும் நோக்கம் தேவருக்கிருந்தது. தமது எண்ணத்தை இராயருக்கு அறிவித்தார். இராயர் தமது முழுத்திறமையையும் ஆராய்ச்சித்திறத்தையுங்காட்டிச் சோழவமிச சரித்திரச் சுருக்கத்தை எழுதிக்கொடுத்து வெளியிடச்செய்தார்.

**இவருடைய பண்புகள்**

தம்மோடு பழகும் எல்லோருடைய உள்ளத்தையுங் கவரும் நற்றிறம் இராயரிடம் அமைந்திருந்தது. அருங்கலை விநோதராகிய இவருடைய ஒளி முகத்தில் எப்போதும் அறிவுச்சுடர் ஒளிவிட்டுக்கொண்டிருந்தது. ஓயா உழைப்பென்பது இவருடன் பிறந்து வளர்ந்த குணங்களுள் ஒன்று. இவர் தம்முடைய உழைப்புக்குப் பிறர் பார்த்து மகிழும் மகிழ்ச்சியையே ஊதியமாக எண்ணியிருந்தார். சாசனங்களில் இருந்து எழுதப்பெறும் வரலாற்றுச் செய்திகள் ஒரு பக்கமாகச் சாய்வுபெறாது நேரிய முறையில் அமையுமாறு கருத்துச்செலுத்தியே இவர் பெரும்பாலும் எழுதுவார். பிறர் எழுதுவதில் தவறுகண்ட விடத்தில் அதனைக் கண்டித்தெழுதுவதற்குச் சிறிதும் பின்வாங்கார். இவருடைய உழைப்புச் சென்னை மாகாணத்திற்குப் பயன் பட்டிருக்குமாயின் எத்தனையோ கல்வெட்டும் தாமிர சாசனங்களும் ஆராயப்பட்டு வெளிவந்திருக்கும். அவ்வாறு நடவாமற் போனது குறித்துப் பலர் மனங்கவன்றனர்.

**இறுதி**

சாசனப் புலவராகிய இவர் தொடர்ந்து தமது வேலையை இவ்வுலகிற் செய்யுமாறு கூற்றுவன் விடவில்லை. 1919-ஆம் ஆண்டில், இவருடைய நாற்பத்தேழாம் அகவையிலே தன்னூருக்கழைத்துக் கொண்டனன். அப்

பொழுது அறிஞர்கள் பலரும் அடைந்த வருத்தம் அளவிட்டுரைத்தற் கரியது. பலர் இரங்கற்பாக்கள் பாடி வருந்தினர். மதுரையில் இருந்த முத்துச்சாமி ஐயர் என்பவர் பாடிய இரங்கற்பாக்களிற் சிலவற்றை அடியிற் காண்க.

"அந்தோ தமிழகத்துக் கந்தகக்கூற் றின்றிழைத்த
சிந்தா குலக்கொடுமை செப்புந் தரமன்றே
நந்தாக் கலைக்கோபி நாதா! எம் ஏதமில்சீர்
முந்தார் மறையோய்! முடிந்தாய் நடுவயதில்
மூதறிஞ சற்குணநீ முடிந்தாய் நடுவயதில்." (க)

[அ - ரை. சிந்தாகுலம்—துன்பம். நந்தா—அழியா.]

"தேசசரித்திரத் துறையில் தேர்ச்சியொடா ராய்ச்சிமிகும்
ஆசைசலி யாவூக்கம் ஆமிவற்றிற் குன்போல்வார்
மாசறநீ செய்சோழ வம்சசரித் திரநூல்போல்
தேசுறுவோய் ஆசறுபன் னூல்தருமுன் சென்றனையே
சிலைக்கலையாய் சிறப்பிற்பன் னூல்தருமுன் சென்றனையே."

[அ - ரை. மாசற—குற்றமற. சிலைக்கலை—கல்வெட்டு.]

"வண்டமிழாங் கிலந்தெலுங்கு வடமொழிக்கே ரளமுரிமை
கொண்டுளகன் னடப்புலமை கூர்ந்துகல்வெட் டாராய்ச்சி
எண்டகுசித் திரங்கீதம் படம்பிடித்தல் என்பவற்றில்
பண்டிசி காமணியே! பார்துறந்தெங் குற்றனையோ
பாவலர்கா வலரேங்கப் பார்துறந்தெங் குற்றனையோ." (௨)

[அ - ரை. வண்டமிழ்—வளப்பம் பொருந்திய தமிழ். கேரளம்—மலையாளம்.]

"திருவனந்த புரநாட்டில் சிலாசா சனத்தலைமை
மருவிநந்தம் பெரியோர்கள் வாழ்காலந் துருவியெழில்
உருவநந்தாச் செல்வாக்கோ டுறுபொருள்நுண் மதிநட்பாம்
திருவநந்தம் பெருகுகையில் செம்மால்நீ சென்றனையே
தெருமரலுற் றியாமழுங்கச் செம்மால்நீ சென்றனையே."

[அ - ரை. சிலாசாசனம்—கல்வெட்டு. துருவி—தேடி. அநந்தம்—மிகுதியாக.]

**இராயருடைய நூல்கள்**

இராயர் பெரும்பொருள் செலவிட்டுப் பல அரிய நூல்கள் தொகுத்துவைத்திருந்தார். அந் நூல்களையும் அவர் தம் ஆராய்ச்சியில் கண்டெழுதி வைத்திருந்த குறிப்புக்களையும் இவருடைய குடும்பத்தாரிடம் இருந்து தகுந்த விலைகொடுத்து வாங்கிச் சாசன இலாகாவில் சேர்த்துவைத்துள்ளனர்.

---

## உ0. வீரசைவக் கனகசபைக் கவிராயர்

**தோற்றம்**

வீரசைவக் கனகசபைக் கவிராயர் சோழவளநாட்டிலே திருவேரகம் என்னும் சுவாமிமலையிலே வீரசைவ மரபிலே தோன்றினர். இவருடைய முன்னோர்களும் நூல்களியற்றிய சிறந்த புலவர்களாக விளங்கியிருந்தனர்.

**கல்வி**

இவர் பள்ளிக் கல்வியைப் பாங்குறப் பயின்ற பின்னர் சபாபதி ஐயர் என்பவரிடத்தில் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் தேறிச் சிறந்த புலமையடைந்தார். இவருடைய ஆசிரியர் சபாபதி ஐயர் என்பது,

“ துறையறியா எளியேனுக் கிலக்கியமும்
இலக்கணமும் துலக்க மேவு
நிறையதுவுந் தமிழறியுங் கவிஞர்கண்முன்
சார்வுறுமிந் நெறியு நல்கிக்
குறையகற்றி யெனையாளுங் கோமானாய்
எழுந்தருள்செய் குருவாய் வந்த
மறையவர்சி காமணியாம் சபாபதிஐ
யன் திருத்தாள் மன்னி வாழ்வாம்.”

என்று உடையார்பாளையத் தலபுராணத்தில் ஆசிரிய வணக்கங் கூறியிருத்தலால் பெறப்படுகிறது.

### சமத்தானப் புலவர்

கல்வி கேள்விகளிற் சிறந்து விளங்கிய இவருடைய புகழ் யாண்டும் பரவியது. இவர் காலத்தில் உடையார் பாளையத்தில் கச்சி உவரங்க பூபதி என்னும் பெருநிலக் கிழார் சிறந்து விளங்கியிருந்தார். கவிராயர் பெருநிலக் கிழார்மீது பல அரிய செய்யுட்களை இயற்றிக்கொண்டு போய் அரங்கேற்றினர். இவருடைய கல்வித் திறமையைக் கண்டு களித்த பெருநிலக்கிழார் இவரைத் தமது சமத்தானப் புலவராக ஏற்படுத்தினர். அந்நாள் தொட்டுக் கவிராயர் பெருநிலக்கிழாருடைய அவைக்களத்திற் சொற்பொழிவுகள் பல செய்து சிறந்த புகழுடன் விளங்கியிருந்தார்.

### கம்பராமாயணச் சொற்பொழிவு

கம்பராமாயணத்தைக் கேட்போர் மனமகிழுமாறு சுவையுடன் சொற்பொழிவு செய்வதில் இவர் சிறந்து விளங்கியபடியால், இவருக்குக், 'கம்பராமாயணப் பிரசங்கி' என்னும் பெயரும் வழங்கியது. பலவிடங்கட்குஞ் சென்று கம்பராமாயணச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

### புராணம்

உடையார்பாளையம் என்னும் முற்கபுரிக்குப் புராணம் இயற்றவேண்டும் என்று பெருநிலக்கிழார் விரும்பினர். வடமொழியில் இருந்த புராணத்தை, இராசாச் சாத்திரி என்னும் வடமொழி அறிஞரைக்கொண்டு தமிழில் மொழி பெயர்க்கச் செய்து எண்ணூற்று இருபத்தைந்து செய்யுட்களில், நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, நைமிசாரணியப் படலம், முற்கபுரி கேள்விப் படலம், பிரமா பூசித்த

படலம், அங்காரகன் பூசனைப் படலம், இராகவன் பூசனைப் படலம், அருச்சுனன் பூசனைப் படலம், வேதாள உரு நீத்த படலம், தார்ச்சகன் பூசனைப் படலம், செமதக்கினி முனிவர் பூசனைப் படலம் என்னும் பதினாறு படலங்களமைந்த புராணமாகப் பாடினார். இந் நூலைப் பாராட்டி, உ. வே. சாமிநாதையர், தில்லைநாயக முதலியார், சோமசுந்தரம் பிள்ளை முதலிய பலர் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

இறுதி

அண்மைக் காலத்தில் வாழ்ந்திருந்த இவருடைய காலம், பிற செய்திகள் முதலியன விளக்கமாகவில்லை.

இயற்றிய நூல்கள்

1. கங்கைகொண்ட சோளேச்சரத் தலபுராணம்
2. குழுமூர்த் தலபுராணம்
3. உடையார்பாளையத் தலபுராணம்
4. பெண்ணையாற்றுத் தலபுராணம்
5. திருப்புன்கூர்த் தலபுராணம்
6. திருக்களப்பூர்த் தலபுராணம்
7. பெரியபுராணச் சுருக்கக் கலிவெண்பா
8. கடம்பர்கோயில் பிள்ளைத்தமிழ்
9. மணத்தட்டைப் பிள்ளையார் பிள்ளைத்தமிழ்
10. சிவஞானபாலைய சுவாமிகள் மாலை
11. குருநமசிவாய மாலை
12. திருவேரக மாலை
13. தையலுயகி மாலை
14. கணக்கர் மாலை
15. தருமகர்த்தா மாலை
16. சண்டீஸ்வரியம்மன் பதிகம்
17. சாமிநாதசாமி பதிகம்
18. சுப்பிரமணியர் பதிகம்
19. பந்தணைநல்லூர் அம்மன் பதிகம்

ஆகியவை இவரால் இயற்றப்பெற்ற நூல்கள். இவைகளிற் பெரும்பாலானவை அச்சாகி வெளிவந் தலவுகின்றன.

# உக. ஆறுமுக அடிகள்

## தோற்றம்

ஆறுமுக அடிகள் என்னும் இப் பெரியார் கொல்லம் 1050-இல் நிகழ்ந்த யுவ ஆண்டுச் சித்திரைத் திங்கள் இருபத்திரண்டாம்நாள் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராசபாளையம் தோப்புப்பட்டியில் பிறந்தார். தந்தையார் பெயர் நெல்லிக்குமார மூப்பனர். தாயார் பெயர் சிவநாயகி அம்மையார்.

## பாலகவி

இவர் நான்காவதாண்டிலேயே கல்வி கற்கத் தொடங்கினர். செய்யுள் பாடுந்திறம் கருவிலேயே அமைந்திருந்தது. அகவை ஏழு நடந்துகொண்டிருக்கும்போதே செய்யுள்கள் இயற்றத் தொடங்கிவிட்டார். பன்னிரண்டாவது அகவையில் பூசை, இறைவழிபாடு முதலியன செய்யலானர்.

## திருமணம்

இருபத்துநான்காவது அகவையில் பேய்ச்சிமுத்து அம்மையார் என்னும் பெண்மணியைத் திருமணம் புரிந்து இல்லறம் நடத்தத் தொடங்கினர். ஐந்தாறு ஆண்டுகள் வரையில் இல்வாழ்க்கையை இனிது நடத்தினர். இவருடைய உள்ளம் இல்வாழ்க்கையில் படியவில்லை. இல்லந் துறந்து துறவியாகி வெளிப்படுதற்கு எண்ணமிட்டுக்கொண்டிருந்தார்.

## துறவு

"துறப்பார்மன் துப்புர வில்லார் உறற்பால
ஊட்டா கழியு மெனின்"

என்பது தெய்வப்புலமைத் திருவள்ளுவர் திருவாக்கு. இருபத்தெட்டாம் அகவையில் இல்லந் துறந்து வெளியே

புறப்பட்டார். அந் நாளில் தொண்டைவள நாட்டிலே காஞ்சிமா நகரிலே நிச்சல இராமாநந்த சுவாமிகள் என்னும் பெரியார் சிறந்த மெய்யறிவாளராகத் திகழ்ந்திருந்தார். ஆறுமுகனார் இராமாநந்தரை அடுத்து அருளுரை பெற்றுத் துறவியானார்.

**நூல்கள் இயற்றல்**

வடலூர் இராமலிங்க அடிகளிடத்தில் பேரன்பு கொண்ட இவர், திருவருட்பிரகாச வள்ளலாராகிய அவரிடத்தில் பெரும் பற்றுக்கொண்டார். வள்ளலாருடைய வரலாற்றைப் புராண முறையாக முந்நூறு பாடல்களாகச் செய்துமுடித்தார்.

"ஆதிவா ரத்திற் சித்திரை ஆகுநட் சத்தி ரத்தில்
சோதியோர் உருவம்ஆகித் துயரறத் தந்தை தாய்க்கு
நீதியும் அளியும் என்றும் நிலைத்திட மருதூர் என்னும்
கோதிலா ஊரில் வந்து குழவியாய் உதித்தார் வள்ளல்."

என்பது வள்ளலார் பிறப்புக் கூறும் பாடலாகும். மற்றும் இவர் மூவாயிரம் பாடல்களடங்கிய சிதாநந்த சாகரம், குருவருட்புகழ் என்னும் நூல்களையும் இயற்றியருளினார். வள்ளலார் புராணத்தைப் பாராட்டித் தருக்கவேதாந்த போதகாசிரியராயிருந்து காலஞ்சென்ற கோ. வடிவேல் செட்டியார்,

"கொள்ளுநெறி தள்ளுநெறி குவலயத்தோர்
தமக்குணர்த்தக் குருவாய் வந்த
தெள்ளியசீர் வள்ளலார் புராணமொன்று
சிறப்பனைத்துஞ் செறிந்து தோன்றக்
கள்ளநெறி காணாத ஆறுமுக
சாமியென்பான் கனக்கச் செய்தான்
எள்ளலிலா இந்நூலை எற்றுணர்வார்
பளகினெறி எய்து வாரே."

என்று பாடியுள்ளார்.

**கருத்துக்கள்**

இவர் பாடியுள்ள சிதாநந்த சாகரம், வள்ளலார் புராணம், குருவருட்புகழ் ஆகிய நூல்களில் வேதாந்தக் கருத்துக்களும் ஆத்மாநுபவ இரகசியங்களும் மிகத் தெளிவாக அமைந்துள்ளன. சொன்னோக்கு, பொருணோக்கு, தொடைநோக்கு முதலியவைகளும் நன்கு அமைந்துள்ளன.

**இறுதி**

மெய்யறிவுப் புலமையுஞ் செந்தமிழ்ப் புலமையும் நிறைந்து விளங்கிய இவர் தொண்டை வளநாட்டிலே, ஆறுகாட்டை யடுத்த தாசர்புரம் என்னுஞ் சிற்றூரில் தம்மால் உண்டாக்கப்பட்ட திருமடத்தில் ஏறக்குறைய முப்பதாண்டுகளுக்கு முன் இறைவன் திருவடி நீழலையடைந்தார்.

---

## உஉ. பிச்சையா நாவலர்

**தோற்றம்**

இப் புலவர், ஈண்டிய புகழ்சேர் பாண்டி மாநாட்டில் பொதியமலையை அடுத்து விளங்கும் மலையடிக் குறிச்சி என்னும் சிற்றூரிலே சைவவேளாளர் குலத்திலே ஏறக்குறைய நூற்றிருபது யாண்டுகட்கு முன்னர்த் தோன்றினார். தந்தையார் பெயர் அருணாசலம்பிள்ளை.

**கல்வி**

அக்கால முறைப்படியே கல்விகற்கத் தொடங்கிய இவர் இலக்கண இலக்கியங்களையும் கணக்கு முதலியவைகளையும் தக்காரிடத்திலே கற்றுச் சிறந்த புலமையடைந்து திகழ்ந்தார். இவருடைய முன்னோர்கள் தலைவன் கோட்டை என்னும் நாட்டில், தாருகாபுரம் என்னுஞ் சிற்றூரிலே கணக்கப்பிள்ளை வேலை என்னும் அலுவலைப் பார்த்

துக் கொண்டிருந்தனர். நாவலர் தாமும் அவ்வேலையை மேற்கொண்டு கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். கணக்குவேலை ஒன்றிலேயே தமது முழு நேரத்தையுஞ் செலவிட்டு விடாமல் மேலும் மேலும் நூல்களை ஆராய்ந்து தமது அறிவினை வளர்த்துக்கொண்டு வந்தார்.

**முருகன் திருவருள்**

இவர் முருகப்பெருமானிடத்தில் பேரன்புடையவர்.

"எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கு மோனத்தே—வித்தகமாய்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்"

என்னும் பட்டினத்துப் பிள்ளையார் திருவாக்கிற் கேற்பத் தாம் கணக்கப்பிள்ளைவேலை முதலியவைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாலும் முருகன் திருவடிகளிடத்திலேயே தமது முழுக்கருத்தையுஞ் செலுத்தியிருந்தார். அக் கடவுள்மீது அடிக்கடி பாடல்கள் பல இயற்றிப் புகழ்ந்து பாடினர். ஒருநாள் முருகன் இவருடைய கனவிலே தோன்றித் திருவருள் புரிந்து மறைந்தான். இந் நிகழ்ச்சிக்குப் பிறகு செய்யுளை இனிமையாகவும் விரைவாகவும் பாடும் ஆற்றல் இவருக்கு மிகுதியாயிற்று. பெரும்பாலும் கடவுளைப் பாடுதலையே தமது கடமையாகக் கொண்டார். சிறிது காலத்தில் தமது கணக்கப்பிள்ளை வேலையையும் வெறுத்து மறுமைக்கான வழியிலேயே தமது முழுநேரத்தையும் போக்கினர்.

**தலபுராணம்**

இவருடைய அருட்புலமையை நன்குணர்ந்த பலர் தாருகாபுரத்திற்குப் புராணம் பாடவேண்டுமென்று வேண்டிக்கொண்டனர். அப் புராணச் சுவடி வடமொழியில்

இருந்ததைத் தக்கவர்களைக் கொண்டு தமிழில் மொழி பெயர்க்கச் செய்து பிறகு தாம் அதனை எண்ணூற்று முப்பத்தாறு செய்யுட்கள் கொண்ட புராணமாகப் பாடி முடித்தார். இப் புராணம், பாயிரப் படலம், நாட்டுப் படலம், நகரப் படலம், நைமிசாரணியப் படலம், புராண வரலாற்றுப் படலம், பதிகப் படலம், தல விசேடப் படலம், தீர்த்த விசேடப் படலம், மூர்த்தி விசேடப் படலம், திருக் கயிலாயப் படலம், பராசர முனிவர் தவம்புரி படலம், சேர சோழ பாண்டியர் பிணக்குத்தீர்த்த படலம், சேர சோழ பாண்டியர் காட்சிப் படலம், நாரதமுனிவர் தவம்புரி படலம், மானுபரன் வழிபடு படலம், மானுபரன் மகப்பேறு பெற்ற படலம், மானுபரன் உபதேசம்பெற்று முத்தி யடைந்த படலம், வேதோத்தமன் குட்டரோகந் தவிர்ந்த படலம், முனிவர்கள் அருச்சனைப் படலம் என்னும் பத்தொன்பது படலங்கள் அமையப்பெற்றது. சொற் சுவை பொருட்சுவைகளில் சிறந்து விளங்குவது :

"பத்தியுடன் அகம்நெகிழ்ந்து கமழ்ந்திடுபன்
மலர்தூவிப் பரவி யாடித்
தத்திவரும் அருவியெனத் தன்செழுங்கண்
ணீர்சொரிந்து தனிமே லோரும்
நத்திடவே நல்லளியின் இன்னிசையால்
துதிபுரிந்து நாடி நின்று
மத்திசனுர் அடிபரவு மெய்யடியார்
போல்விளங்கி மல்குஞ் சூதம்."

என்பது இப் புராணத்தின் தல விசேடச் செய்யுளில் ஒன்ருகும். இந் நூலைப் பாராட்டிச் சுப்பிரமணியக் கவிராயர், சிவகிரி மகாலிங்கக் கவிராயர், கோட்டையூர் கந்தசாமிப் புலவர், பொய்கைநகர் திருமலையாண்டிக் கவிராயர், சேற்றூர் சிவசிதம்பர தேசிகர், புளியங்குடி முத்துவீருக் கவிராயர் முதலிய பல புலவர்கள் சிறப்புப்பாயிரம் பாடியுள்ளனர்.

**வெளியிடுதல்**

நூலை இயற்றியோர் முயற்சிசெய்து அதனை வெளிப்படுத்தாதொழியின் அந்நூல் அப்படியே சிலகாலம் இருந்து பிறகு மறைந்தொழிந்து போதலும் உண்டு. இதனை நன்கு உணர்ந்த இவர் பல ஊர்கட்குஞ் சென்று பெருமுயற்சி செய்து பொருள் திரட்டி அச்சிற் பதிப்பித்து வெளியிட்டார்.

**மதுரை யாதீன வித்துவான்**

இவருடைய புலமைத் திறத்தை நன்கறிந்த மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனத் தலைவர், இவரைத் தமது ஆதீன வித்துவானுக்கிப் பெருமைப்படுத்தினுர்.

**தனிப்பாடல்**

நாவலர் தமது நூலை வெளியிடுதற்காகப் பொருண் முயற்சிசெய்து கொண்டிருந்த காலத்தில் திருவாரூர்க்குச் சென்றூர். அங்கு அப்பொழுது துடிசைக்கிழார் அ. சிதம்பரனுர் அலுவலில் இருந்தார். நாவலரும் துடிசைக் கிழாரும் நெருங்கிய நண்பர்கள். நாவலர் திருவாரூர்க்குச் சென்றசமயத்தில் அங்குக் கந்தர்சட்டி விழா நடைபெற்றுக்கொண்டிருந்தது. முருகக்கடவுளின் ஊர்வலத்தைக் குறித்து ஒரு செய்யுள் இயற்றவேண்டும் என்று ஓரன்பர் வேண்டிக்கொண்டார். அச் செய்யுள் இயற்றுதலைக் குறித்து நாவலர் சிறிதும் எண்ணிக்கொண்டிருக்கவில்லை. மனப்பாடஞ்செய்துள்ள பழைய பாடலைப் பாடுவதைப் போல்,

“ திருத்த மனத்தின் கௌரியம்மை
சிந்தைமகிழத் தந்தை கொண்ட
விருத்த வடிவைத் தாமெடுத்து
விளங்கும் உலகோர் வியப்புறவே

பொருத்த குறத்தி வள்ளிமணம்
புரிவான் கருதி ஆரூரில்
கருத்தன் முருகன் பவனிவரக்
கண்டோம் பிறவி விண்டோமே."

என்னும் செய்யுளை விரைந்து பாடினர். இவர் விரைந்து செய்யுள் பாடியதைப் பலரும் பாராட்டினர்.

**ஆசிரியர்**

செய்யுளியற்றல் முதலிய பல வேலைகளோடு, தமிழ் கற்க விரும்பிய அன்பர்கட்குத் தமிழ்நூல்கள் பலவற்றைப் பாடஞ்சொல்லி அவர்கட்குத் தமிழறிவையும் ஊட்டினர். இவரிடம் கல்வி கற்றுத் தேர்ந்து சிறந்தவர்கள் பலர்.

**மகன்**

இவருடைய மகனாகத் தோன்றிய சங்கரநாராயண பிள்ளை என்பவரும் நன்கு கல்விகற்றுச் சிறந்த தமிழ்ப் புலமையடைந்து விளங்கினர். தம் தந்தையார் இயற்றிய தாருகாவனப் புராணத்தைப் பாராட்டி,

" தந்தைதாய் குருதெய்வம் கருணை வேந்தும்
தானாகி எனைப்புரக்கும் தவத்தோர் போற்றும்
எந்தைதிரு வாக்காலிச் சூதக் காவின்
இறைமகிழப் புராணமினி திசைத்தான் தேர்ந்து
விந்தையென யான்புகழ்தல் மடமைச் சம்பு
வியந்துசிங்கந் தனக்கரசாம் மேன்மைப் பட்டம்
தந்ததொக்கும் இதன்பெருமை உணர்ந்து மெச்சும்
தரங்கலைமா மகளரிய தக்கோர்க் காமே."

என்னுஞ் செய்யுளைச் சாற்றுக்கவியாகப் பாடினர்.

**இறுதி**

இந் நாவலர் காலமான ஆண்டு முதலியன விளக்கமாகத் தெரியவில்லை.

**இவர் இயற்றிய நூல்கள்**

இவரால் இயற்றப்பெற்ற நூல்கள் பல. அவற்றுள் :

1. தாருகாபுரத் தலபுராணம்
2. நாதகிரிப் பதிகம்
3. நாதகிரிமாலை
4. நாதகிரி யந்தாதி
5. நாதகிரி மான்மியம்
6. நெஞ்சறி விளக்கம்
7. வண்ணக்கவி

என்னுஞ் சிலவற்றின் பெயர்மட்டும் நமக்குத் தெரிகின்றன.

---

## உ௩. வீரசுப்பைய ஞான தேசிகர்

**தோற்றம்**

நியாயச் சந்திர வேதாந்த பாஸ்கர மகாமண்டலேசுர வீரசுப்பைய ஞான தேசிகர் எனப் பெயர் வழங்கிய இப் பெரியார், கொங்குமண்டலத்திலே கோயம்புத்தூருக்கு அண்மையில் உள்ள வேட்டைக்காரன்புதூர் என்னுஞ் சிற்றூரிலே ஏறக்குறையத் தொண்ணூறு ஆண்டுகட்கு முன் தோன்றியருளினர். தந்தையார் பெயர் மருதாசலம் பிள்ளை. தாயார் பெயர் அம்மணி யம்மாள்.

**கல்வி**

உரிய பருவத்தில் பள்ளிக்கனுப்பப்பெற்ற இவர் ஆங்கிலமுந் தமிழும் நன்கு கற்றுணர்ந்தனர். பிறகு மருத்துவத் துறையில் தொழில்புரிந்துகொண்டு சிறப்புடன் இருந்தனர்.

**ஆனைமுகக் கடவுள் வழிபாடு**

இவர் இளமைதொட்டே ஆனைமுகக் கடவுளிடத்தில் அன்பு கொண்டு அக் கடவுளைப் போற்றி வழிபடுதலை மேற்

கொண்டனர். தொடக்கத்தில் பள்ளித் தேர்வுகளில் இடையூறில்லாமல் வெற்றியடைதல் வேண்டும் என்னும் நோக்கத்தோடு வழிபடத் தொடங்கிய வழிபாடு நாள்தோறும் வளர்ந்துகொண்டே வந்தது. ஆனைமுகப்பெருமான் இவருக்கு எல்லா நன்மைகளையும் இனிது வழங்கியதோடு அழிவிலாப் பேருகிய வீடுபேற்றையும் அருளத் திருவுளங் கொண்டார். இல்லந் துறந்து துறவியாக வெளிப்படச் செய்தார்.

**துறவியாதல்**

இல்லத்தைத் துறந்து வெளிப்பட்ட இவர் பொதிய மலையை அடைந்து ஆங்குத் தவஞ் செய்ய எண்ணினர். அவ்வாறே பொதியமலையை அடைந்து ஆனைமுகக் கடவுளை எண்ணிச் சிறிது காலம் அருந்தவம் புரிந்துகொண்டிருந்தார். ஆனைமுகக்கடவுள் இவர் மெய்யறிவு நூல்களைக் கற்று வீடுபேற்றை அடைதற்காம் வழியைக் காட்டினர்.

**கோவிலூர் செல்லுதல்**

அந் நாளில் கோவிலூர் மடாலயத்திலே வீரசேகர ஞான தேசிகர் என்னும் பெரியார் மெய்ஞ்ஞானச் செல்வராக விளங்கியிருந்தார். அவரிடம் அருளுரைபெற்று மெய்ஞ்ஞானச் செல்வம் பெற்றவர் பலர். அத்தகையோரில் ஒருவராகிய பழையூர்ப்பட்டி அருணசல அடிகள் என்னும் பெரியார் பல சிவப்பதிகளிலும் இறைவழிபாடு செய்து கொண்டு குற்றாலத்தையடைந்து அங்குத் தங்கியிருந்தார். இவர் சுப்பைய ஞான தேசிகரின் நற்குண நற்செயல்களையும் கல்வியறிவுச் சிறப்பையுங் கண்டு மகிழ்ந்தார். மெய்யறிவு நூல்களைக் கற்கச்செய்தால் மேலுஞ் சிறப்படைவார் என்று எண்ணினர். இவரைப் பார்த்துக், “காரைக்குடிக்கு அண்மையில் கோயிலூர் என்னும் ஊர் ஒன்று இருக்கிறது.

அங்கு வேதாந்த மடாலயம் எனப் பெயரிய மடம் ஒன்று உள்ளது. அம் மடத்தில் இந் நாளில் வீரசேகர ஞான தேசிகர் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர் ஒருவர் ஞாஞ சிரியராக அமர்ந்திருக்கின்றனர் நீவிர் அப் பெரியாரை யடைந்து அறிவுநூல்களைக் கற்றுணர்ந்து அருந்தவம் புரிவீராகில் பிறவிக்கடலைக் கடந்து வீடுபேற்றை யடைந்து பிறவாப்பேற்றை யடையலாம்," என்று இன்னுரை இயம்பினர். அப் பெரியார் உரை நல்லுரையாக இருந்தபடியால் இவர் உடனே புறப்பட்டு வழியில் உள்ள திருநெல்வேலி மதுரை முதலிய இடங்களில் இறைவழிபாடு செய்து கொண்டு கோவிலூரையடைந்து ஞானதேசிகரைப்போற்றி வழிபட்டுக்கொண்டு தங்கியிருந்தனர்.

**அறிவு நூல் கற்றல்**

வீரசேகர ஞானமா முனிவர் இவருடைய தகுதியறிந்து அறிவுநூல்களாகிய கட்டளை, கைவல்லிய நவநீதம், பகவத்கீதை, ஞானவாசிட்டம் முதலிய நூல்களைக் கற்பித்தருளினர். இவ்வாறு கோயிலூரில் சில ஆண்டுகள் தங்கிய பின் காசி முதலிய வடநாட்டுப் பதிகளைக் காணவும் வடமொழி இந்தி முதலிய மொழிகளைத் தெரிந்துணரவும் எண்ணிக் குருவின் உடன்பாடுபெற்றுக் காசியை அடைந்து சில ஆண்டுகள் தங்கி வடமொழி இந்தி முதலிய மொழிகளை யுணர்ந்து, அம் மொழிகளிலுள்ள அறிவு நூல்களையும் ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தார். பிறகு தென்னாடடைந்தார். பிறகு பலவிடங்களினும் அறிவுநூற்பொருளை விளக்கிச் சொற்பொழிவுகள் பல செய்து மக்கட்கு நல்லறிவூட்டினர்.

**நூல்கள் இயற்றல்**

அந் நாளில் சென்னைமாநகரில் கரபாத்திர சிவப்பிரகாச அடிகள் என்னும் மெய்ஞ்ஞானச் செல்வர், வடமொழி

இந்தி முதலிய மொழிகளில் உள்ள வேதாந்த நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்துத் தமிழ்நாடெங்கும் பரவச் செய்தல் வேண்டும் என்னும் பெரு நோக்கங்கொண்டிருந் தனர். அப் பெரியார் இவரைக் கொண்டே நூல்களை மொழிபெயர்க்கச் செய்தனர். அது முதல் இவர் மொழி பெயர்ப்பு நூல்களைச் செய்வதினும் நூல்கட்கு உரைகள் வரைவதினும், உரைநடை நூல்கள் செய்யுள் நூல்கள் முதலியன இயற்றுவதினும் தமது காலத்தை யெல்லாம் செலவிட்டனர். சென்னை சூளையில் ஆநந்தாசிரம சாது மகா சங்கம் என்னும் இருப்பிடத்தில் தங்கி நூல்கள் இயற்றும் வேலையில் ஈடுபட்டிருந்தனர்.

**மடாலயத் தலைமை**

திருவாரூரில் மடப்புறம் என்னும் இடத்தில் உள்ள தட்சணாமூர்த்தி சுவாமிகள் மடத்தின் தலைமைப் பதவியை யும் ஏற்று அம் மடாலயத்தின் கட்டிடங்கள் முதலியவை களைச் சீர்திருத்தியமைத்து அம் மடாலயத்தைச் சிறப் புடன் விளங்கச் செய்தனர்.

**மாணவர்கள்**

அடிகளார் அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்திக் கொண்டிருந்தமையின் எண்ணற்றபேர் அடிகளாருடைய அருளுரைகளைக் கேட்டு மாணவர்களாயினர். மற்றும் அடிகளாருடன் உறைந்து கணேசாநந்த அடிகள், அநந்தா நந்த அடிகள், சண்முகாநந்த அடிகள் முதலிய பலர் அறிவு நூல்களை நன்கு கற்றுணர்ந்தனர்.

**இறுதி**

வேதாந்த சமயத்திற்கு அரும்பெரும் பணி புரிந் திருந்த அடிகளார் 1931-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்க ளிலே வீடுபேற்றை யடைந்தனர். அடிகளாருடைய உடல்

தங்கியிருந்த இடத்திற்குப் பக்கத்தில் அடக்கஞ் செய்யப் பட்டுத் தொண்டர்களால் வழிபாடு செய்யப்பட்டு வருகிறது.

**நூல்கள்**

அன்பர்களுடைய வேண்டுகோளின்படி மொழி பெயர்த்தனவும் உரையெழுதியனவும் செய்யுளாக இயற்றப்பட்டவைகளுமானவை :

1. சிவமகிம்நத் தோத்திரம் செய்யுள்
2. வேதசார சமுத்தரணம் செய்யுள்
3. வேதாந்த டிண்டிமம் செய்யுளும் உரையும்
4. ஆத்ம வித்யா விலாசம் செய்யுள்
5. வேதாந்த சாரம் உரைநடை
6. உபதேச சகத்ரி உரைநடை
7. கண்டன கண்டகாத்தியம் உரைநடை
8. வேதாந்த சித்தாந்த முக்தாவலி உரைநடை
9. நியாயகாரிகாவலி செய்யுளும் உரையும்
10. ஆத்ம புராணம் உரைநடை
11. பகவற்கீதை கூடார்த்த தீபிகை உரைநடை
12. பஞ்சாக்கர பாடியம் உரைநடை
13. லகுயோகவாசிட்டம் (2000 செய்யுளுக்கு) உரை
14. கங்காலகரி மூலமும் உரையும்
15. தருக்காமிருதம் உரைநடை
16. பிரஸ்தான பேதம் உரைநடை
17. பர்த்துருகரி வைராக்கிய சதகம் செய்யுள்
18. பஞ்சதசி 5 பிரகரணம் செய்யுள்
19. சித்தாந்த லேச சங்கிரகம் உரைநடை
20. கணேச கீதை செய்யுளும் உரையும்
21. வாசிட்டம் உரைநடை
22. வீரசேகரமாலே
23. கொற்றவாளீசுரர் அந்தாதி
24. திருநெல்லையம்மை யந்தாதி
25. பாரிசாதவனேசர் பதிற்றுப்பத் தந்தாதி

26. அமிர்தவல்லிமாலை
27. சிக்கல் செல்வவிநாயகர் செம்பொன் மணிமாலை
28. சொர்ணபுரீசுரர் மாலை
29. சௌந்தரியநாயகி மாலை
30. சௌந்தரியநாயகி பிள்ளைத்தமிழ்
31. மதுரை அரசப்பசுவாமிகள் வரலாறு
32. ஈப்போ தண்டாயுதபாணி மாலை
33. சங்கரத்வேஷியர் வாய்ப்பூட்டு.

---

## உச. திரு. வி. உலகநாதமுதலியார்

**தோற்றம்**

திரு. வி. கலியாணசுந்தரனாரின் தமையனாராகிய திரு. வி. உலகநாத முதலியார் 1881-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் பன்னிரண்டாம்நாள் துள்ளம் என்னுஞ் சிற்றூரிலே பிறந்தார். தந்தையார் பெயர் விருத்தாசல முதலியார். தாயார் பெயர் பச்சையம்மாள். இவருடைய முன்னோர்கள் வாழ்ந்திருந்த ஊர் திருவாரூர் ஆதலின், திரு என்பது இவருடைய பெயருக்கும் இவருடைய இளவலாகிய கலியாணசுந்தரர் பெயருக்கும் முன்னால் அமைந்து நின்றது.

**கல்வி**

துள்ளம் சிற்றூரில் பத்தாண்டுகள்வரை உலகநாதர் தம் தந்தையாரிடத்தே பண்டைக் கால முறைப்படி கல்வி பயின்றார். எண்சுவடி, பொன்னிலக்கம், அந்தாதிகள், கலம்பகங்கள், நிகண்டு முதலியவைகளைப் பயின்றார். பிறகு தந்தையார் சென்னைமாநகர்க்குக் குடிபெயர்ந்து விடவே, உலகநாதர் சென்னையில் வெஸ்லி கல்லூரியில் ஏழாம் வகுப்புவரை படித்தார்.

**அலுவல்**

ஏழாம் வகுப்போடு பள்ளிக் கல்வியை நிறுத்திய உலகநாதர், சென்னை மலைச்சாலையில் இருந்த பாஸ்டர் அச்சகம், ஹோ அண்டு கம்பெனி, மெட்ராஸ் டைம்ஸ் முதலிய பெரிய அச்சகங்களில் வேலை பார்த்தார். பல அச்சகங்களில் வேலை பார்த்து நல்ல பழக்கத்தைப் பெறவே ஓர் அச்சகத்தை நடத்துதற்கு வேண்டிய அறிவுத் திறன் இவருக்கு அமைந்தது.

**திருமணம்**

1901-ஆம் ஆண்டில் உலகநாதருக்குத் திருமணம் நடைபெற்றது. ஆலப்பாக்கம் சிதம்பர முதலியார் என்பவருடைய புதல்வி இராசாம்பாள் அம்மையார் என்பவர் வாழ்க்கைத் துணைவியாக அமைந்தார்.

**இலக்கண இலக்கியங் கற்றல்**

உலகநாதர் வெஸ்லி கல்லூரியில் கல்விபயின்றபோது யாழ்ப்பாணம் நா. கதிரைவேற் பிள்ளை அங்குத் தமிழாசிரியராக வேலைபார்த்துக் கொண்டிருந்தார். உலகநாதர் பள்ளிப் படிப்பை விட்டபிறகும் கதிரை வேலருடைய தொடர்பு நீடித்துக் கொண்டிருந்தது. ஓய்வு ஏற்படும் போதெல்லாம் கதிரைவேலரிடஞ் சென்று இலக்கண இலக்கியங்களை முறைமையாகப் பயின்று வந்தார். இக் காலத்தில் இவருடைய இளவல் கலியாணசுந்தரரும் கதிரைவேலரிடம் இலக்கண இலக்கியங்களைப் பயின்று கொண்டிருந்தார். கதிரைவேலர் சென்னையைவிட்டு நீங்கி வேற்றூர்கட்குச் சென்று பிறகு பரமனடி சேர்ந்தார். கதிரைவேலர் காலமான பிறகு உலகநாதர் வேறு எவரிடமும் பாடங்கேட்க விரும்பவில்லை. தாமாகவே பல நூல்களைப் பயின்று அறிவைப் பெருக்கிக்கொண்டார். புலமைத்

திறம் வேண்டிய அளவு உண்டாகியது. பலநூல்களைப் பிழையறப் பதிப்பிக்கவும் பத்திரிகைகளை நன்றாக நடத்தவும் வல்லவரானார்.

**பக்தசன சபை**

முதலில் உலகநாதர் கடவுட் கொள்கை முதலியவற்றில் அழுத்தமான பற்றுக் கொண்டிருக்கவில்லை. நாளடைவில் இறையன்பு அடியார்பத்தி முதலியன உண்டாயின. 1903-ஆம் ஆண்டில் சென்னை இராயப்பேட்டையில் தம் ஆசிரியரான கதிரைவேற் பிள்ளையைக் கொண்டு "பால சுப்பிரமணிய பக்தசன சபை" என்னும் பெயருடன் சபை ஒன்றை அமைத்தார். இதற்கு இவருடைய நண்பர்கள் பலர் பக்கத்துணையாக இருந்தனர். சபையை அமைத்தது மட்டுமல்லாமல் அச்சபையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் உழைத்தார். சபையின் அமைச்சராகவும் தலைவராகவும் இருந்தார். சபையில் அடிக்கடி சொற்பொழிவுகள் இவராலேயே நடத்தப்பெற்றன. கந்தபுராணச் சுருக்கத்தைத் தமது செலவில் சபையின் வெளியீடாக வெளியிட்டார். இக்காலத்தில் முதலியார் வைசயந்தி அச்சுக்கூடத்தில் அலுவல் பார்த்துக் கொண்டிருந்தார்.

**பதிப்பகமும் அடக்கவிலைப் பதிப்பும்**

ஸ்பென்சர் கம்பெனியில் கணக்காளராகத் தொழில் புரிந்துகொண்டிருந்த கலியாணசுந்தரர் சிலகாரணங்களை முன்னிட்டு அவ் வேலையைவிட்டு நீங்கினார். சொந்தத்தில் பதிப்பகம் ஒன்றை அமைத்து நூல்களை வெளியிட வேண்டும் என்பது கலியாண சுந்தரருக்கும் உலகநாதருக்கும் நோக்கமாக இருந்தது. இந் நோக்கத்தைத் தம் நண்பர்களோடு கலந்து ஆராய்ந்தனர். 'உமாபதி குருப் பிரகாசம் பிரஸ்' என்னும் பெயரோடு அச்சுக்கூடம் ஒன்

றைத் தொடங்குவதென்றும் நூல்களை வெளியிடுவதென்றும் முடிவாகியது. 1909-ஆம் ஆண்டில் இராயப்பேட்டையில் அச்சுக்கூடம் அமைக்கப்பட்டது. பெரிய புராணம், திருமந்திரம் முதலிய நூல்கள் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிடப் பெற்றன. சில காரணங்களால் அச்சகம் விற்கப்பட்டது. உலகநாதர் லாரன்ஸ் அசைலம் அச்சுக்கூடத்தில் வேலை பார்க்கத் தொடங்கினர். கலியாணசுந்தரர் பள்ளியில் தமிழாசிரியராக வேலைபார்க்கலானர்.

### சாது அச்சுக்கூடம்

திரு. வி. கலியாணசுந்தரனர் தேசபக்தன் பத்திரிகையின் ஆசிரியராகச் சிறிது காலம் வேலைபார்த்தார். பிறகு நவசக்தி பத்திரிகையைத் தொடங்கினர். நவசக்தி பத்திரிகையை அச்சிடுவதற்குச் சாது அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. கலியாணசுந்தரனர் விருப்பப்படி உலகநாதரே அவ்வச்சுக் கூடத்தை நடத்தும் பொறுப்பை மேற்கொண்டு இறுதிவரையில் நடத்தினர். சைவசித்தாந்த மகாசமாசத்தார் அடக்கவிலைப் பதிப்பாக வெளியிட்ட தேவார திருவாசக நூல்களையெல்லாம் உலகநாதர் தமது சாது அச்சுக்கூடத்தில் செவ்வையாக முடித்துக் கொடுத்தார். சித்தாந்தம் பத்திரிகைக்கு ஆசிரியராக அமைந்து நின்று அப் பத்திரிகையை நன்கு நடத்தினர்.

### மக்கட்பேறு

உலகநாதருக்கு மக்கட் செல்வமாக ஓராண்மகனும் இரண்டு பெண்மக்களும் தோன்றினர். மகனுடைய பெயர் பாலசுப்பிரமணியன். அவன் இளமையிலேயே இறைவன் திருவடி நீழலை எய்தினன். இதனல் உலகநாதரும் கலியாணசுந்தரரும் பெரிதும் மனம் வருந்தினர்.

**உலகநாதரின் உயரிய பண்புகள்**

எத்தகைய தொல்லை நேரினும் மனங்கலங்காத் திண்மை உலகநாதரிடம் அமைந்திருந்தது. இவருக்குச் சினம் எழுமாயின் அது சில விநாடிக்குள் அடங்கிவிடும். இவர் சோதிடக் கலையிலும் ஓரளவு பயிற்சி பெற்றிருந்தார். முருகப் பெருமானிடத்தில் இவருக்கு அளவுகடந்த பக்தியுண்டு. அதன் காரணமாகவே தம் செல்வமைந்தனுக்குப் பாலசுப்பிரமணியன் என்று பெயரிட்டிருந்தார். பாம்பன் குமர குருதாச அடிகட்கும் இவருக்கும் நெருங்கிய தொடர்பும் பற்றும் உண்டு. அடிகளார் காலமானபோது முதலியார் சில செய்யுட்களைப் பாடினர். தம்முடைய இல்லத்திற்கு வரும் எல்லோரையும் விருந்துண்ணச்செய்து போற்றுவதில் முதலியார் மிகுந்த ஊக்கமுடையவர்.

**மணிவிழா**

1941 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 10 ஆம் நாள் இவருக்கு அகவை அறுபது நிரம்பியது. அக்கால் அன்பர்கள் மணிவிழாக் கொண்டாடி இவரைப் பாராட்டினர். அப்பொழுது மணிவிழா மலர் ஒன்றும் வெளியிட்டனர். அம்மலரில் திருக்கோவலூர் ஆதீனம் ஞானியார் மடாலயத் தலைவர் சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய அடிகள், கீழைக்கிழார் தெய்வசிகாமணி முதலியார், மயிலைக் கிழார் இளமுருகனார், நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், திரு. பூ. ஆலாலசுந்தரம் செட்டியார், திரு. சி. கே. சுப்பிரமணிய முதலியார், கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு. ச. சச்சிதானந்தம்பிள்ளை முதலிய பலர் முதலியாரைப் பாராட்டி எழுதியுள்ளனர். மற்றும் பல அறிஞர்கள் வாழ்த்துப் பாடல்களும் பாடினர்.

"செம்மைமுது குன்றப்பேர்ச் செம்மலோன் செய்தவமே
இம்மை தழைக்கும் இசைநிறீஇ—மெய்ம்மை

உழைப்பிற் குடியோம்பும் ஒள்ளியசின் னம்மை
இமைத்தநோன் பேஎம்வாழ் வே.

என்பது சண்முகானந்த அடிகளார் இயற்றிய ஆறு பாடல் களுள் ஒன்று.

"திருவருள் நிறைந்த தமிழகம் புரிந்த
திருந்திய தவத்திரு ஆரூர்
தருநிதி விருத்தா சலப்பெருந் தகைக்கும்
சற்குணச் சின்னம் மையார்க்கும்
மருவிலா உலக நாதவேள் திருவி
மாகவி யாணசுந் தரனுர்
இருவரும் மகவாய்த் தோன்றிய போதே
எங்கள்மா நிலம்பெற்ற திசையே."

என்பது, சென்னை அகத்தியர் குருகுலம் சுவாமி அருணகிரி நாதர் அவர்களால் பாடப்பெற்ற பதினொரு பாடல்களுள் ஒன்று.

"கலைநிறை செவ்வி எல்லாம்
கவினுறத் தெளிந்து செந்தேன்
அலையெனச் சுவைகொ ழிக்கும்
அழகொளிர் எழுத்தால் சொல்லால்
நிலைபுகழ் ஒளியி னேங்கி
நிலவுகல் யாண சுந்தரன்
உலைவிலுன் தம்பி என்னின்
உரைப்பதுன் புகழை என்னே."

என்பது, பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் அவர்களால் பாடப்பெற்ற ஒன்பது பாடல்களுள் ஒன்று.

"பலநூல்கட் குரையளித்தாய் பல்லோர்க்கும்
அறிவுரைகள் பாலிக்கின்றாய்
நலமேவும் பணிபணியாக் கொள்வோனைப்
பணிபுணியே நாடி நின்றாய்

தலமேவும் சைவசித்தாந் தப்பெயர்கொள்
பத்திரிகை தழைக்க நல்கும்
வலவாநீ நாள்நாளும் இருமைநலம்
எய்திநன்கு வாழ்க மாதோ.''

என்பது சேலம் சலகண்டபுரம் ஆசிரியர் அ. வரதஞ்சைய பிள்ளை அவர்களால் பாடப்பெற்ற எழு பாடல்களுள் ஒன்று. இன்னும் இவ்வாறு, வையாபுரிப் பிள்ளை, அ. மு. சரவண முதலியார், கமலநாத முதலியார், முருக இலக்குவனர், சோம இராமலிங்க தேசிகர், குகஸ்ரீ, புழலை திருநாவுக்கரசு முதலியார் என்பவர்களும் வாழ்த்துப்பாக்கள் பாடி வாழ்த்தினர்.

**இறுதி**

இவ்வாறு சிறப்புப்பெற்று விளங்கிய இவர், மணி விழாவுக்குப்பின் நான்கு ஆண்டுகள் தமிழ்ப்பணி சிவப்பணி ஆற்றி 4—7—1945-இல் அம்மை அம்பலவாணர் திருவடி நீழலடைந்தனர்.

---

## உரு. பொன்னம்பல சிவம்

**தோற்றம்**

திக்கெலாம் புகழ்ந்திடு தென்பாண்டி நாட்டிலே கொம்பாடி என்னும் ஊரிலே ஏறக்குறைய அறுபத்தைந்தாண்டு கட்கு முன்னர்ப் பொன்னம்பலசிவம் தோன்றினர்.

**கல்வி**

இளம் பருவத்தில் குலசேகரன் பட்டினத்தில் தங்கியிருந்தார். அவ் விடத்திலேயே பள்ளிப்படிப்பைத் தொடங்கினர். பள்ளிப்படிப்பு ஒருவாறு முடிந்தபின் திண்ணைப் பள்ளிக்கூடம் ஒன்று தொடங்கிச் சிறுவர் பலருக்குக் கல்வி போதித்தார்.

**இல்லந்துறத்தல்**

இவருடைய மனம் இல்வாழ்வை வெறுத்து நல்வாழ்வை நாடியது. நடத்திய பள்ளியை நிறுத்திவிட்டு இல்லத்தை விட்டு வெளிப்பட்டார். மடாலயங்கள் சிலவற்றிற் சென்று தங்கினர். அங்கிருந்த அறிஞர்கள் பலர் வேதாந்த நூல்களை ஓதியுணர்ந்தார். மேன்மேலும் இலக்கண நூல்களையும் இலக்கிய நூல்களையும் ஆராய்ந்துகொண்டேயிருந்தபடியால் புலமைத்திறம் உண்டாயது. செய்யுள் இயற்றும் ஆற்றல் கைவரப்பெற்றவராய்த் தனிப்பாடல்கள் பல இயற்றினர்.

**மறைவனத்திறைமாலை**

சிறிதுகாலம் திருமறைக்காட்டிலே தங்கியிருந்தார். அப்பொழுது ஆங்கெழுந்தருளிய இறைவன் மீது மறைவனத் திறைமாலை என்னும் நூலைப் பாடினர்.

**காளையார்கோயில்**

பிறகு காளையார்கோவிலை யடைந்து அங்குள்ள வேதாந்த மடாலயத்தில் பல ஆண்டுகள் உறைந்தார். உலகன்பட்டி இலக்குமண அடிகள் என்னும் சைவசித்தாந்த அறிஞர்பால் சித்தாந்த நூல்கள் சிலவற்றைக் கற்றுணர்ந் தார்.

**பலவான்குடி**

பிறகு பலவான்குடி என்னும் ஊரையடைந்து அங்குள்ள திருவாசக பாடசாலையிற் சிறிதுகாலம் தங்கி அன்பர்கள் பலருக்கு இலக்கண இலக்கியங்களைக் கற்பித் தார். அங்கெழுந்தருளிய குமரவிநாயகர் என்னும் பிள்ளை யார்மீது குமரவிநாயகர்பதிகம் என்னும் நூல் ஒன்றும், குன்றக்குடி முருகப்பெருமான் மீது குமரபஞ்சகம், அகராதி மாலை என்னும் நூல்களையும் பாடினர். அங்கிருக்கும் போது பலவிடங்கட்குஞ் சென்று சொற்பொழிவு

செய்தலை மேற்கொண்டிருந்தார். மெ. வெ. வேலப்ப செட்டியார் என்னுந் தனவணிகர் ஒருவர் இவரிடம் அன்பு பூண்டு நற்றெண்டராக விளங்கினர். அதனல் அவருக்குக் கல்வியில் ஆர்வந்தோன்றி நாளடைவில் நூல்கள் பல வற்றைக் கற்று அவரும் அறிஞரானர்.

**கதிர்காமச் செலவு**

அன்பர் பலருடைய உதவியைக் கொண்டு கதிர்காமஞ் சென்றுவர எண்ணினர். பலரிடத்தும் தமது பாவன்மை யைக் காட்டி நன்கொடைகள் பெற்றார். வே(வெ)ங்கடா சலஞ் செட்டியார் என்னும் தனவணிகர் ஒருவரிடஞ் சென்று,

"எங்கடா தாவிருக்கும் எழிற்கதிர்கா மஞ்சென்று
சங்கடா டவிகளைநான் தாண்டியருள் பெறுவதற்குத்
திங்கடா னெனுமுகத்தாய் திகழ்பலவான் குடிவாழ்வாய்
வெங்கடா சலப்பெரியாய் மிகுபொருள்தான் ஈவாயே."

என்று பாடினர். இவ்வாறு இவர் பாடிய பாடல்கள் பல. அவைகளெல்லாம் தொகுத்து எழுதிவைக்கப் பெருமையால் மறைந்து போயின.

**தனிப் பாடல்கள்**

செய்யுள் இயற்ற வேண்டும் என்று எண்ணினல் போதும். உடனே இவருக்குச் செய்யுள் கடகடவென்று புறப்பட்டுவிடும். பிறகு ஒய்வு ஒழிவு இல்லாமல் பாடிக் கொண்டேயிருப்பார். இந் நூலாசிரியராகிய சு. அ. இராம சாமிப் புலவர் அந் நாளில் பத்திரிகைகள் பலவற்றில் பல வகையான கட்டுரைகள் எழுதிக்கொண்டிருந்தார். அக் கட்டுரைகளிற் சிலவற்றைப் படித்து மகிழ்ந்த இவர்,

"சுஞஆ ஞராம சாமியொன்று சொல்கின்றேன்
தேனபா லாவெனத்தித் திக்கநீ—பேண

பிடித்தெழுதி விட்ட பெரும்பேப்பர்த் தாளைப்
படித்தடைந்தேன் நல்ல பயன்."

என்று ஒருநாள் செய்யுள் ஒன்றைக் கூறினர்.

**கூத்தப்பிரான்மீது பாட்டு**

ஒருநாள் கூத்தப்பிரானைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். அப்போது,

"கடத்தானை உரியனைச்சங் கடத்தானை
யாதடியார் களைநன் கோம்பும்
திடத்தானைப் பனிவரைமா திடத்தானைத்
திரைசெறிநீர் உறைசடாம
குடத்தானை ஒருதிருக்குக் குடத்தானை
யனைக்கொடிய வழியில் என்னை
நடத்தானை மணிமன்றில் நடத்தானைக்
கண்டுதொழு துய்ந்தேன் நானே.

என்று புதிய பாட்டொன்று புறப்பட்டது.

[இ-ள். கடத்து ஆனை உரியனை-மதம்பொருந்திய யானைத் தோலை ஆடையாகக் கொண்டவனை; சங்கடத்தால் நையாது - துன்பத்தால் வருந்தாமல். பனிவரைமாது - உமையவள். சடாமகுடத்தானை - சடாமகுடம் பொருந்தியவனை. குக்குடத்தான் ஐயனை - முருகன் தந்தையை.]

பழநித்தண்டாயுதபாணிக் கடவுள்மீது பின்வரும் நடுவெழுத்தலங்காரத்தைப் பாடினர்.

**பன்னிருசீராசிரிய விருத்தம்**

"ஒருவிதநோய் ஒருகருவி உறுங்காமர்
சுகமில்லான் அக்க தேவி
உலகீன்றாள் இவ்வறுசொல் நடுவெழுத்தா
றெனக்கருள்வாய் உடனும் பன்னீர்

உருவெழுக்தைக் கரத்தமைத்தும் சிரத்தமைத்தும்
திருக்கழுத்தில் ஓங்கச் சேர்த்தும்
ஒளிரிழையா கத்தரித்தும் மேற்போர்த்தும்
பிறப்பிடமா ஒருகாற் கொண்டும்
பெருமையுடன் விளங்குமுக்கட் பெருஞ்சோதி
பெற்றெடுத்த பெரிய வாழ்வே
பேசருமைந் தருநிகர்த்து மாசில்வளம்
பலகொடுத்துப் பிறங்கா நின்ற
தருநிறையும் பழநிவரை உறைதண்ட
பாணியே சகசா னந்தத்
தடங்கடலே மடங்கலந்தார் இடம்பொருந்தாக்
கடம்பணிந்த தனிச்செவ் வேளே."

[ஒருவிதநோய் கபம் கம் - தலை. ஒருகருவி அரம் அம் - கங்கை. காமர் காமர் கார் - கருமை. சுகமில்லான் அசுகி அகி - பாம்பு. அக்கதேவி தோகல் தோல்-யானைத் தோல். உலகீன்றாள் அம்மை அமை - மூங்கில்.]

### நூல்கள்

தனிப்பாடல்கள் பல இயற்றியதன்றி இவர் செய்த நூல்கள்,

1. மறைவனத்திறைமாலை
2. தேசிய கீதக்கொத்து
3. குமர விநாயகர் பதிகம்
4. குமார பஞ்சகம்
5. அகராதிமாலை
6. அகராதிக்குறள்

முதலியன.

### இறுதி

முருகக் கடவுள்மீது மிகுந்த பேரன்புகொண்ட இவர் திருநெல்வேலி குறுக்குத்துறையை அடைந்து சிலகாலம் முருகனைப் போற்றி வழிபட்டுக்கொண்டிருந்தார். பிறகு

பழனிமாநகரை அடைந்து தண்டபாணியைப் போற்றி வழி பட்டுக்கொண்டு அவ்விடமே நிலையாக இருந்தார். 1952-ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வுலகவாழ்வைத் துறந்து முருகன் திருவடிநீழலை அடைந்தார். இவரிடத்துப் பேரன்பு கொண்டிருந்த மெ. வெ. வேலப்ப செட்டியார் என்பவர்,

"பன்னு பெருங்கவிதைப் பாவலனும் பார்துதிக்கும்
பொன்னம் பலசிவந்தான் போயினனும்—என்னே!
விதிதான் மதியிழந்து வேறுலகஞ் சேரச்
சதிசெய்து பார்த்தானோ தான்."

என்று வருந்திச் செய்யுள் ஒன்றைத் தம் நண்பர் ஒருவருக்கு எழுதியனுப்பினார்.

---

## உசூ. வி. சூ. நடராசன்

### தோற்றம்

பரிதிமாற் கலைஞன் என்று தமது பெயரைத் தமிழில் மொழிபெயர்த்த சூரியநாராயண சாத்திரியாருடைய அருந்தவப் புதல்வராகத் தோன்றிய வி. சூ. நடராசன் ஆங்கிலம் 1899-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் 13-ஆம் நாள் சென்னையிற் பிறந்தார்.

### கல்வி

நடராசன் தமது நான்காவது அகவையிலேயே தந்தையாரை இழந்தார். தகுந்த அகவையில் கல்வி கற்கத் தொடங்கிய இவர் 1917-ஆம் ஆண்டில் மதுரையில் எஸ். எஸ். எல். சி. தேர்வை முடித்தார். இவர் விருப்பப் பாடமாக எடுத்துக் கொண்டது வரலாறு. தஞ்சை மருத்துவக் கல்லூரியில் சேர்ந்து படிப்பதற்கு விண்ணப்பம் போட்டார். இதற்கிடையே உசிலம்பட்டி போர்டு உயர்

நிலைப்பள்ளியில் பதினேழு ரூபாய் ஊதியத்தில் தமிழாசிரியர் வேலை கிடைத்தது. இவருக்குத் தமிழில் தகுந்த பயிற்சியிருந்தது. இவர் உயர்நிலைப்பள்ளியில் மாணவராக இருக்கும்போது தமிழ்ப்பேராசிரியர் ம. கோபாலகிருட்டிண ஐயர் இவருக்குத் தமிழாசிரியராக அமைந்திருந்தார். தமிழில் மிகவல்லவரான அவர் 'விவேகோதயம்' என்னும் பத்திரிகை ஒன்றை நடத்தி வந்தார். அப் பத்திரிகைக்கு கதை, கட்டுரை, கவிதை முதலியன எழுதினார். இதனாலும் கோபாலகிருட்டிண ஐயரது பழக்கத்தாலும் இவருக்குத் தமிழறிவு தழைத்தது. மேலும் கோபால கிருட்டிண ஐயர் இவருக்குத் தனிப்பட்ட முறையில் தமிழை நன்கு போதித்து இவருடைய தமிழறிவை வளர்த்தார். நடராசன் ஆறும்படிவத்தில் படித்துக் கொண்டிருக்கும்போது எழுதிய 'கதைப் பூங்கொத்து' என்னும் கதை நூல் ஒன்று ஐந்தாம் படிவ மாணவர்கட்குப் பாடப் புத்தகமாக அமைந்ததாம். இத்தகைய வேலைகளே இவரைத் தமிழாசிரியர் வேலைக்குத் தகுதியாக்கின.

**மருத்துவக் கல்வி**

தமிழாசிரியர் வேலைக்குக் கட்டளைவந்த அதே சமயத்தில் தஞ்சை மருத்துவக் கல்லூரியில் இடமிருக்கிற தென்றும், வந்துசேரலாம் என்றும், உதவி கிடைக்கும் என்றும் செய்தி வந்தது. உசிலம்பட்டிக்குச் சென்று தமிழாசிரியர் வேலையை ஒப்புக்கொள்வதா; தஞ்சைக்குச் சென்று மருத்துவம் பயில்வதா? என்று எண்ணமிட்டார். பிறகு தஞ்சைக்குச் சென்று மருத்துவம் பயில்வதென்று முடிவாகியது. தஞ்சை மருத்துவக் கல்லூரியில் மூன்று ஆண்டுகளும், மதுரை மருத்துவப் பள்ளியில் இரண்டாண்டுகளும் பயின்றார். படிப்பதற்கான எல்லாவகையான செலவுகளையும் அரசினர் ஏற்றுக்கொண்டனர்.

1923-ஆம் ஆண்டில் மருத்துவப் பரீட்சையில் தேர்வு பெற்று எல். எம். பி. என்னும் பட்டத்தைப் பெற்றார்.

### தொழில்

பிறகு இவர் உசிலம்பட்டி தாலுகா போர்டு சானிடரி இன்ஸ்பெக்டராக ஏற்படுத்தப் பெற்று அங்கு வேலை பார்க்கத் தொடங்கினார். பிறகு மதுரையில் சுகாதார இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டார். பிறகு செங்கற்பட்டில் ரூரல் சானிடேஷன் சுகாதார அலுவலாளர் வேலை கிடைத்தது. பிறகு இராமேசுவரம், திருநெல்வேலி, காரைக்குடி, தேவகோட்டை, கண்ணனூர், இராசபாளையம், பாளையங்கோட்டை, போடிநாயக்கனூர், பழநி ஆகிய ஊர்களில் நகர சுகாதார அதிகாரியாகப் பணியாற்றத் தொடங்கி நல்ல வேலை செய்தார்.

### திருமணம்

1926-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் செல்லம்மாள் என்னுஞ் செல்வியைத் திருமணம் புரிந்து இல்வாழ்க்கையையும் நல்வாழ்க்கையாக இனிது நடத்தினார். மக்கட் செல்வமாக ஐந்து பெண்மக்களும் ஓராண்மகனுந் தோன்றினர்.

### தமிழ்த்தொண்டு

"மகனறிவு தந்தையறிவு" என்பர் முன்னோர். இதன் பொருள் ஓராண்மகனுக்கு அமைந்துள்ள அறிவு அவனுடைய தந்தையின் அறிவேயாம் என்பது. இம்மொழி எல்லா இடங்களினும் பொருந்தாமற் போனாலும் ஒருசில இடங்களிலாவது பொருந்தி விடுகிறது. தந்தையாகிய சூரியநாராயண சாத்திரியாருக்கு இருந்த தமிழ்ப்பற்றும் தமிழறிவும் நடராசனிடத்திலும் நன்கு அமைந்திருந்தன. இவர் சுகாதார அதிகாரி வேலையை மேற்கொண்டு ஊரூராக

அலைந்து திரிந்தபோதினும் தமிழ்த் தொண்டை மறக்கவில்லை. ஒல்லும் வகையால் எல்லாம் தமிழ்ப்பணியைச் செல்லுமிடங்களில் செய்துகொண்டேயிருந்தார். புகழ் பெற்ற தமிழறிஞர் ஒருவருடைய மகன் என்று அறிஞர்களும் இவரைப் பாராட்டிப் போற்றினார்கள். தமிழ் நாட்டுப் பத்திரிகைகள் பலவற்றிற்குக் கட்டுரைகள் எழுதினார். பள்ளிப் பிள்ளைகளுக்கான பாடநூல்களையும் உப பாட நூல்களையும் எழுதி உதவினார். அவைகளை இவருடைய இளவலாகிய சுவாமிநாதன் நன்முறையில் பதிப்பித்து வெளியிட்டார். நடராசன் மொழிபெயர்ப்புகள் செய்வதிலும் கதைகள் கட்டுரைகள் முதலியன வரைவதினும் வல்லவர். இவர் தமிழ் அகரவரிசை நூல் ஒன்றைப் பெரிதாக எழுதி முடிப்பதற்குத் திட்டம் போட்டு அவ்வேலையையும் செய்து கொண்டிருந்தார். ஆனால் அவ்வேலை முடிவுபெறவில்லை.

**இறுதி**

பழநியில் வேலைபார்த்துக் கொண்டிருக்கும்பொழுது இவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டது. சிறிது காலம் ஓய்வுபெற்றுக்கொண்டு அமைதியாக இருந்தார். ஓய்வு, தொடர்ந்த பெரும் ஓய்வாக முடிந்துவிட்டது. 1953-ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 31-ஆம் நாள், திடீரென்று மார்படைப்பினால் மண்ணுலக வாழ்வைத் துறந்து விண்ணுலகம் புகுந்தார்.

**இவர் எழுதிய நூல்கள்**

1. கதைப் பூங்கொத்து
2. பைசா நாடகம்
3. கதம்பம்
4. காதற் கள்வன்

## உஎ. சிவபாத சுந்தரம்

### தோற்றம்

செந்தமிழ்த் தொண்டும் சிவநெறித் தொண்டும் புரிந்த சிவபாதசுந்தரம், ஈழவளநாட்டில் புலோலி கிழக்கு என்னும் ஊரிலே, 1878-ஆம் ஆண்டு தைத் திங்கள் பதினேழாம் நாள் தோன்றினர். தந்தையார் பெயர் சுப்பிரமணிய பிள்ளை. தாயார் பெயர் வள்ளியம்மை. சிவபாதசுந்தரத்தின் குடும்பத்தினர் பலரும் செந்தமிழ்ச் செல்வர்களாகவே விளங்கியிருந்தனர். தந்தையராகிய சுப்பிரமணியபிள்ளை ஆசிரியராகவும் அருங்கலை விநோதராகவும் விளங்கி யிருந்தார்.

### கல்வி

சிவபாதசுந்தரம் தொடக்கக் கல்வியைத் தமது ஊரிலே படித்து முடித்தார். சுப்பிரமணியபிள்ளையோடு உடன்பிறந்த கணபதிப்பிள்ளை என்பவர் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் வடமொழிப் பேராசிரியராகப் பணி யாற்றிக் கொண்டிருந்தார். ஆகவே சிவபாதசுந்தரம் ஆங்கிலக் கல்வியைக் கற்பதற்குத் திருவனந்தபுரத்திற்குச் சென்றார். அங்கிருந்துகொண்டே சென்னைப் பல்கலைக்கழக எப். ஏ. தேர்வில் எழுதித் தேர்ச்சி பெற்றார். பிறகு திருச் சிராப்பள்ளிக்குச் சென்று செயிண்ட் சோசப் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றார்.

### ஆசிரியத் தொழில்

பட்டம்பெற்று யாழ்ப்பாணத்திற்கு மீண்டபின் உறவி னர் ஒருவருடைய பள்ளியிலே ஆசிரியராகப் பணிபுரியத் தொடங்கினர். சில காலத்திற்குப் பிறகு திரிகோணமலை செயின்ட் சோசப் பள்ளியில் தலைமையாசிரியராக அமர்ந் தார். அங்கு இரண்டே ஆண்டுகள் பணியாற்றினர். பிறகு, செல்லப்பா என்பவரால் தோற்றுவிக்கப்பட்ட விக் டோரியா கல்லூரியின் முதல் தலைமை யாசிரியராகச் சில

காலம் பணியாற்றினர். பிறகு சில ஆண்டுகள் கழித்து அக் கல்லூரியின் தலைமைப் பதவியை ஏற்று 1933-ஆம் ஆண்டுவரை பணியாற்றினர். இவருடைய முயற்சியினல் கல்லூரி மிகுந்த சிறப்புடன் வளர்ந்தோங்கியது.

**பண்பு**

இவர், கணிதம் தருக்கம் இவ் விரண்டையுமே தமது விருப்பப் பாடமாக எடுத்துக்கொண்டு கல்வி பயின்றிருந் தாலும் எல்லாப் பாடங்களையும் நன்ருகப் போதிக்குந் திறமை பெற்றிருந்தார். எவ்வகையான பாடத்தையும் எளிமையாகவும் மாணவர்களுடைய உள்ளத்திலே பதியு மாறும் போதிப்பார். இவருடைய வகுப்பிலே அமைதியும் ஒழுங்கும் கட்டுப்பாடும் ஒருங்கே பொருந்தியிருக்கும். மாணவர்கள் இவர்பால் பணிவுடனும் அன்புடனும் நடந்து கொண்டனர். இவர் மாணவர்களைத் தம் அன்பினல் நடத்திச் சென்ருர். பெரும்பாலான மாணவர்கள் இவரு டைய பெயரைக்கூட அறிந்திருக்க மாட்டார்கள். மாண வர்கள் இவரைப் "பீ. ஏ. மாஸ்டர்" என்றே உரைத்து வந்தனர். மாணவர்களே அன்றி மாணவர்களுடைய பெற்ருேர்களும் சிவபாதசுந்தரத்தைப் பெரிதும் மதித்துப் பாராட்டினர்கள்.

**சைவப்பணி**

சிவபாதசுந்தரத்தின் நோக்கம் முழுவதும் சைவப்பணி யிலேயே படிந்திருந்தது. கோயில்களில் உயிர்கள் பலி யிடப்பெறுவதைக் கண்டித்தார். இவருடைய முயற்சியி னல் பல விடங்களில் உயிர்ப் பலிகள் ஒழிக்கப் பட்டன. சைவப் பாடசாலைகளைத் தொடங்குவதில் இவர் மிகுந்த விருப்பங் கொண்டிருந்தார். முல்லை சைவப் பிரகாச வித் தியாசாலை தோன்றுவதற்கு இவர் மூலகாரணமாக

இருந்தார். இவருடைய முயற்சியினால் வேறு பல இடங்களினும் சைவ வித்தியாசாலைகள் தோன்றின.

**இந்துக் கல்லூரியில் வேலை**

விக்டோரியாக் கல்லூரியின் தற்காலிகப் பணியில் இருந்து விடுபட்டுப் பிறகு தொடர்ந்து பணியேற்கும் காலம் வரை இடைப்பட்ட காலத்தில் மானிப்பாய் இந்து கல்லூரியிற் சில காலம் பணியாற்றினார். பிறகு கொழும்புக்குச் சென்று சர். பொன்னம்பலம் இராமநாதனால் நடத்தப் பெற்ற கொச்சிக்கடை பொன்னம்பலம் பள்ளியின் தலைமையாசிரியராகப் பணிபுரிந்தார்.

**நூல்கள் இயற்றல்**

கல்வியதிகாரியாக இருந்த டாக்டர் பெரேரோ என்பவர் இவருடைய அறிவாற்றலையும் பண்பையும் பெரிதும் புகழ்ந்து இவரிடம் அடிக்கடி சொற்போரிடுவார். ஆசிரியப் பயிற்சிமுறை என்னும் சிறிய தமிழ்நூல் ஒன்றை வெளியிட்டார். இதனை இலங்கை அரசினர் ஆசிரியப் பயிற்சிக்குரிய பாடப் புத்தகமாக்கினர். உளநூல், தருக்க நூல் என்னும் இரண்டு நூல்களை வெளியிட்டார். இவைகளும் எல்லோராலும் போற்றிப் பாராட்டப் பெற்றன. ஆங்கிலத்தில் தருக்கத்தின் இன்றியமையாமை என்னும் நூலையும் வெளிப்படுத்தினார். சைவசமயத்தின்பாற் கொண்ட அன்பினால் சைவ நூல்கள் பலவற்றை இயற்றித் தக்காங்கு சைவத்தொண்டாற்றினார். 1933-ஆம் ஆண்டில் இவர் ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வுபெற்றார். ஆயினும் தமது உழைப்பில் இருந்து சிறிதும் ஓய்வுபெறவில்லை. இவருடைய இந்துசமயக் கொள்கை என்னும் ஆங்கிலநூல் மேல் நாட்டாரின் மதிப்பையும் நன்கு பெற்றது. மற்றும் இந்நூலைக் காசிப் பல்கலைக் கழகத்தார் சைவசித்தாந்த தத்துவப்பாடமாக எம். ஏ.-க்குத் தேர்வு

வைத்தனர். இவரால் ஆறுமுக நாவலர் வரலாற்றுச் சுருக்கம் ஒன்றும் எழுதி வெளியிடப்பெற்றது. தமது இறுதி நாட்களில், "சைவசமயத்தின் பெருமை" என்னும் பெயருடன் நூல் ஒன்றைத் தம்முடைய உடன்பிறந்தாரது வேண்டுகோளின்படி எழுதத் தொடங்கி எழுதி முடித்தார்.

## இறுதி

சைவசமயத்தின் பெருமை என்னும் தமது இறுதி நூலை எழுதி முடித்தபின், அதனை வெளியிடுதற்கு வேண்டும் பணியினைச் செய்யத் தொடங்கினர். ஆயினும் நோயினாலும் முதுமையினாலும் வெளியிட்டு முடிக்காமலே 1953-ஆம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 14-ஆம் நாள் தமது எழுபத்தைந்தாம் அகவையில் இவ்வுலக வாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை எய்தினர்.

## இயற்றிய நூல்கள்

### தமிழ்

க. ஆசிரியப்பயிற்சிமுறை
உ. ஆறுமுக நாவலர் வரலாறு
௩. உளநூல்
ச. சைவகிரியா விளக்கம்
ரு. சைவசமயசாரம்
சூ. தருக்கநூல்
எ. சைவசமயத்தின் பெருமை
அ. திருவாசகமணிகள்
கூ. திருப்பெருவடிவம்
க0. திருவருட்பயன்
கக. கந்தபுராண விளக்கம்

### ஆங்கிலம்

1. இந்துசமய சைவக் கொள்கை
2. தருக்கத்தின் இன்றியமையாமை.

## உஅ. பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார்

### தோற்றம்

1891-ஆம் ஆண்டு ஜூன் திங்கள் இருபத்தாறும் நாள், பாரிப்பாக்கம் கண்ணப்பமுதலியார் இவ்வுலகில் தோன்றினார். இவருடைய தாயார் பெயர் அலங்காரம் அம்மையார். தந்தையார் பெயர் பாரிப்பாக்கம் முனிசாமி முதலியார்.

### கல்வி

கண்ணப்பமுதலியார் தமது மூன்றும் அகவையிலேயே பள்ளியிற் சேர்க்கப்பட்டு விட்டார். தொடக்கத்தில் பாரிப்பாக்கத்தில் இருந்த ஒரு திண்ணைப்பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கினார். பிறகு தொண்டைமண்டலம் உயர் நிலைப் பள்ளியிற் சேர்ந்து படிக்கலானார். பிறகு 1905-ஆம் ஆண்டில் எழும்பூர் ஓவியக் கல்லூரியிற் சேர்ந்து ஓவியக் கலை பயிலத் தொடங்கினார். 1908-ஆம் ஆண்டில் ஓவியக் கல்லூரியின் துறைகள் ஒன்றில் சென்னை மாகாணம் முழுதிற்கும் முதல்வகுப்பில் முதல்வராகத் தேறி இருநூற்று நாற்பது வெண்பொற்காசுகள் பரிசு பெற்றார்.

### பால சைவசபை

இவருக்கு அகவை பதினைந்து பதினாறு நடந்து கொண்டிருக்கும்போது இவரும் இவருடைய நண்பர்கள் நாற்பது பேர்களும் ஒன்று சேர்ந்து இருக்கம் ஆதிமூல முதலியாருடைய உதவியைக்கொண்டு, "பால சைவசபை" என்னும் பெயருடன் சங்கம் ஒன்றை ஏற்படுத்தினார்கள். அக்காலத்தில் இளைஞர்களுடைய சங்கம் இல்லை. திரு. வி. க. அவர்களும் அவர்களுடைய தமையனார் திரு. வி. உலகநாத முதலியார் அவர்களும் இச் சங்கத்திற் கலந்து சொற்பொழிவுகள் செய்து சங்கத்திற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார்கள்.

**மணி திருநாவுக்கரசர்**

இளைஞர் சங்கத்தார் மணி திருநாவுக்கரசு முதலியாரை ஆசிரியராகக்கொண்டு இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றார்கள். அதனால் எல்லோருக்கும் தமிழறிவும் தமிழ்ப்பற்றும் நாள்தோறும் வளர்ந்தோங்கின.

**மணமும் மக்கட்பேறும்**

இளம் பருவத்திலேயே தந்தையை இழந்த முதலியார் தாயையும் இழந்தார். பதினெட்டாம் அகவையில் மங்கையர்க்கரசி என்னும் பெண்மணியை மணந்து இல்வாழ்விற் புகுந்தார். வாழ்க்கைத் துணைவியாக அமைந்த மாதரசி எல்லாக் குண நலன்களாலுஞ் சிறந்து விளங்கினர். மக்கள் சிலர் தோன்றினர். கல்வியறிவிற் சிறந்து விளங்கிய கண்ணப்ப முதலியார் நண்பர்களோடு கலந்துறவாடுவதிலும் உயர்ந்து விளங்கினர். முதலியாருடைய தோற்றம் எத்தகையோரையும் கவரத்தக்கது. பேசும்போது பிறருடைய பேச்சைப் பொறுமையோடு கேட்பார். பேசுபவர்களுடைய மனங் கோணுதவகையில் நன்முறையில் மறுமொழி கூறுவார். இவருக்குச் சமயப்பற்று குலப்பற்று முதலிய எல்லாப் பற்றுக்களும் உண்டு. ஆயினும் பிறருடைய உள்ளம் புண்படும் வகையில் உரையாடவோ நடந்துகொள்ளவோ மாட்டார்.

**அறிவும் தொழிலும்**

முதலியார் நல்ல புலமையைப் பெற்றிருந்தார். கல்லூரிகளில் பேராசிரியராக அமர்ந்து பணிபுரியத்தக்க அறிவாற்றலைப் பெற்றிருந்தும் அரசினருடைய நில அளவை அலுவலகத்திலே தொழில் புரிந்தார். அலுவலில் உயர்வு பெறவேண்டிய சமயத்தில் அலுவலில் இருந்து ஓய்வு பெற்றார்.

துன்பமாலை

தம் மக்கட்குத் திருமணம் புரிந்து வைத்தபின் தாம் அமைதியாக இருந்து நல்ல நூல்கள் இயற்றலாம் என்று இவர் திட்டமிட்டுக்கொண்டு அதற்கான குறிப்புக்களையும் எழுதித் தொகுத்துக்கொண்டு வந்தார். ஆனால் துன்பங்கள் ஒன்றையடுத்து ஒன்று தொடர்ச்சியாக வந்துகொண்டே யிருந்தன. அதனால் மனத்துன்பம் அதிகரிக்கப்பெற்ற இவர் மிகுதியாக நூல் எழுதும் பணியில் ஈடுபடவில்லை.

சைவசித்தாந்தப்பணி

சைவத்தில் மிகுந்த பற்றுக்கொண்டிருந்த முதலியார் சிவஞானசித்தியார் வகுப்பு ஒன்றை இரண்டு ஆண்டுகள் தொடர்ந்து நடத்திப் பல அன்பர்கட்குச் சைவசித்தாந்த அறிவை ஊட்டினார். சமயங் கிடைக்கும்பொழுதெல்லாம் சைவசித்தாந்த சபைகட்குச் சென்று சொற்பொழிவுகள் நிகழ்த்தினார். இவருடைய சொற்பொழிவுகள் யாவுந் தமிழ் மணமுஞ் சிவ மணமுங் கமழப்பெற்றதாகவே விளங்கின.

தமிழ்ப்பணி

பலவகையான துன்பத் தொடர்களாற் சூழப்பெற்ற இவர் அவைகளுக்கிடையே தமிழ்ப்பணியையும் இயன்ற வரையில் செய்துகொண்டே யிருந்தார். பல பத்திரிகைகட்குக் கட்டுரைகள் வழங்கினார். காலத்தால் முந்தியது திருவெம்பாவையா திருப்பாவையா என்னும் ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் திருவெம்பாவையே முற்பட்டது என்று தக்க சான்றுகளுடன் ஆராய்ச்சி நூல் ஒன்று எழுதி முடித்தார். மிகுந்த ஆராய்ச்சிகள் செய்து 'தமிழ்த் திருமணம்' என்னும் நூல் ஒன்று எழுதினார். திருவொற்றியூரில்

எழுந்தருளியுள்ள வடிவுடையம்மன் மீதில் "திருவொற்றியூர் வடிவுடையம்மன் அருள் வேட்டல்" என்னும் அரிய செய்யுள் நூல் ஒன்றைப் பாடினார். அந் நூலின் தமிழ்ச் சுவை எல்லோராலும் பாராட்டக்கூடிய உயர்ந்த நிலையில் சிறந்து விளங்குகிறது:

"திருவார் பொழில்சூழ் திருவொற்றித்
தியாகப் பெருமான் திருவருளே!
மருவார் குழலார் மடமயிலே!
மகிழ்பே ரின்பம் பொழிமுகிலே
தருவார் தெய்வத் தடம்பொழிலே
தமிழாம் அமுதப் பெருங்கடலே
உருவார் அழகின் மலர்க்கொடியே
ஒளியார் வடிவாம் பிறைமணியே."

"தென்னா டுடைய சிவபெருமான்
திகழும் ஒற்றிச் செந்தேனே!
மின்னார் உருவப் பொற்கொடியே!
மேகக் குழலார் முழுமதியே!
என்னா வதனின் நின்னெழுத்தும்
என்னெஞ் சதனில் நின்வடிவும்
மன்னா ஒளிர அருள்புரிவாய்
மகிழார் வடிவே மலர்தருவே!"

என்பன அந் நூலில் உள்ள நூற்றொரு பாடல்களில் இரண்டு பாடல்களாம். இந் நூலைத் திரு. வி. க. அவர்கள்,

"பாரிப் பாக்கம் எழுசைவப்
பரிதி பசுமைத் தமிழ்த்திங்கள்
வேரி அருவிக் கலைச்சோலை
வேதத் தென்றல் குணக்குன்று
மாரி என்னக் கண்ணப்ப
வள்ளல் பொழிந்த மலர்மணிகள்
வாரி ஒற்றித் தாயணிந்தாள்
வாழ்த்திக் காண்க மாநிலமே."

என்று புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

**பலவகைத் தொண்டுகள்**

முதலியார், பூவிருந்தவல்லி வேளாளர் சங்கம், சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம், சென்னைச் சைவ சித்தாந்த சமாசம், மாணவர் மன்றம் முதலிய பலவகைக் கழகங்களில் கலந்துகொண்டு ஒல்லும்வகையில் தொண்டாற்றினர். சித்தாந்தம் பத்திரிகைக்குச் சிறிது காலம் ஆசிரியராக இருந்தார். 'தமிழரசு' 'நல்லாசிரியன்' 'ஞானந்தபோதினி' முதலிய பல பத்திரிகைகளில் கட்டுரைகள் வரைந்தார்.

**இவரால் இயற்றப்பெற்ற நூல்கள்**

1. திருவெம்பாவை ஆராய்ச்சி
2. தமிழர் திருமணம்
3. வடிவுடையம்மன் அருள்வேட்டல்
4. சிவஞானபோத விளக்க உரைநடை (ஒரு பகுதி)
5. பூவை. கலியாண சுந்தரர் வரலாறு
6. மாணிக்கவாசகர் நாடகம்

முதலியன.

**குறிப்புக்கள்**

தமது வாழ்க்கைக் குறிப்புக்களை 26-6-1891 முதல் 13-12-1933 வரை குறித்து வைத்துள்ளார்.

**இறுதி**

பலவகைத் துன்பச் சூழல்கட்கிடையே தமிழ்த் தொண்டும் சமயத்தொண்டும் செய்துகொண்டிருந்த இவர் தமது அறுபத்து நான்காவது அகவையிலே 1955-ஆம் ஆண்டு டிசம்பர்த்திங்கள் இருபத்தொன்றும் நாளாகிய திருவாதிரை நன்னாளிலே, இவ் உலகவாழ்வைத் துறந்து இறைவன் திருவடி நீழலை யடைந்தார்.

## உகூ. வையாபுரிப் பிள்ளை*

**தோற்றம்**

தென்பாண்டி நாட்டிலே திருநெல்வேலிக்கு அண்மையில் உள்ள சிக்கநரசய்யன் கிராமம் என்னுஞ் சிற்றூரிலே 1888-ஆம் ஆண்டு அக்டோபர்த்திங்கள் 13-ஆம் நாள் வையாபுரிப்பிள்ளை பிறந்தார். இவருடைய தந்தையார் பெயர் சரவணப் பெருமாள் பிள்ளை.

**கல்வி**

இவர் தம்முடைய தொடக்கப் படிப்பை கணபதிப் பிள்ளை என்னும் ஆசிரியரிடத்திலே தொடங்கினர். தொடக்கக்கல்வியை ஒருவாறு முடித்தபின் ஆங்கிலப் பாடசாலைப் படிப்பும் திருநெல்வேலியிலேயே நடைபெற்றது. அப்பொழுது இவரோடு உடன் பயின்ற மாணவர்கள் க. அ. நீலகண்ட சாத்திரியார், பெ. நா. அப்புச்சாமி ஐயர், பி. ஸ்ரீ ஆச்சாரியா முதலியோராவர். பள்ளியில் சுப்பிரமணியக் கவிராயர், சிவராம பிள்ளை என்பவர்கள் தமிழாசிரியர்களாக இருந்து தமிழ் கற்பித்தனர். பள்ளியைத் தவிரத் தனிப்பட்ட முறையிலும் தமிழறிஞர்கள் சிலரிடத்தில் தமிழ்கற்கும்பேறும் இவருக்குக்கிட்டியது. அத்தகையோருள் பாம்பன் குமரகுருதாச அடிகளும் ஒருவராவர். அவர் அக் காலத்தில் குறுக்குத்துறையிற் சிலகாலம் தங்கியிருந்தார். அப்பொழுது இவர் அப் பெரியாரை அடுத்துச் சில நூல்களைப் பாடங்கேட்டார். யாழ்ப்பாணம் சுவாமிநாத பண்டிதரும் நெல்லையில் வந்து தங்கிய காலத்தில் அவரிடமும் சில நூல்களை ஓதியுணர்ந்தார். சைவத்தொடர்புடைய சிலநூல்களை இவர் இளமைப் பருவத்திலேயே கற்கும்படியான நற்பேறும் கிட்டியது. இப்படிப் பலவாறு

---

* திரு. மு. சண்முகம் பிள்ளையவர்கள் தினமணியில் எழுதிய குறிப்பைக்கொண்டு எழுதப்பட்டது.

தமிழ்க்கல்வியைப் பயின்று தமது தமிழறிவை நன்றாகப் பெருக்கிக்கொண்டார்.

**சென்னையில் கல்வி**

பள்ளிப்படிப்பு முடிந்தவுடன் இவர் சென்னைமாநகரை அடைந்து மேல்படிப்புப் படிக்கத் தொடங்கினார். கிறித்துவக் கல்லூரியில் பி. ஏ. வகுப்பிற் சேர்ந்தார். வரலாற்றையும் பொருளாதாரத்தையும் சிறப்புப்பாடமாக எடுத்துக் கொண்டு படிக்கலானார். இருந்தமிழ்ப்புலமையில் பெருந்திரு வடைந்திருந்த மறைமலையடிகள் இவருக்குத் தமிழாசிரிய ராக அமர்ந்திருந்தார். தமிழ்க்கல்வியை ஊக்கத்துடன் இவர் பயிலுதலைக்கண்டு மறைமலையடிகள் இவர்பால் மிகுந்த பற்றுக்கொண்டார். கல்லூரித்தமிழ்ச்சங்கத்தின் செயலாள ராக அமைந்து சிறந்தமுறையிற் பணிபுரிந்தார். சென்னையில் அந்நாளில் சிறந்து விளங்கிய தி. த. கனகசுந்தரம் பிள்ளை முதலிய தமிழறிஞர்களிடமெல்லாம் நெருங்கிப்பழகலானார். பி. ஏ. தேர்வில் சென்னை மாகாணத்தில் முதன்மையாகத் தேர்ச்சிபெற்றுச் சேதுபதியின் தங்கப்பதக்கத்தைப் பரிசா கப்பெற்றார். ஓலைச்சுவடிகளைப் படிக்கத்தொடங்கி ஓலைச் சுவடிகளைப் படிப்பதிலும் தெளிவடைந்தார். அச்சில் வெளிவந்த நூல்கட்கும் ஓலைச்சுவடிக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்தார். அச்சிற் பதிப்பவர்கள் மாறு பாடுகள் செய்திருந்தால் அவைகளைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஊக்கங்கொண்டு அச்சில் வெளிவந்த நூல் களையும் ஓலைச்சுவடிகளையும் ஒப்பிட்டுப்படித்து மாறுபாடு களைக் கண்டுபிடித்தார். இதனால் ஓலைச்சுவடியை அச்சில் பதிக்கத்தொடங்கியவர்கள் அச்சங்கொண்டு விழிப்பாயினர். இவர் ஓலைச்சுவடியோடு ஒப்பிட்டுப்படித்துப் பார்த்த சங்க நூல்கள் பல.

**மணமும் சட்டப்படிப்பும்**

1912-ஆம் ஆண்டு ஜூன் திங்களில், இவருக்குத் திருமணம் நடந்தேறியது. வாழ்க்கைத் துணைவியின் ஊர் திருவனந்தபுரத்தையடுத்த பலராமபுரம். மணமானபின் திருவனந்தபுரத்தில் தங்கிச் சட்டக்கல்லூரியில் கல்வி பயின்றார். சட்டத்தேர்வில் வெற்றிபெற்றார்.

**தொழில்**

சட்டத்தேர்வில் தேறியபின் திருவனந்தபுரம் நீதி மன்றத்தில் வழக்கறிஞராகத் தொழில்புரியத் தொடங்கினார். இவ்வூரில் பல தமிழன்பர்கள் இவருக்கு நண்பர்களானார்கள். அவர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர்கள் நீதிபதி சேஷையர், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, கே. என். சிவராசுப்பிள்ளை, பண்டித முத்துச்சாமிப் பிள்ளை, இசையரசு இலட்சுமணப் பிள்ளை முதலியோராவர்.

**அவையும் ஆராய்ச்சியும்**

அந்நாளில் அங்கிருந்த தமிழறிஞர்கள் புத்தன் சந்தையில் சைவப்பிரகாசசபை என்னும் பெயருடன் அவையொன்றை அமைத்திருந்தனர். மேற்கூறிய அறிஞர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து ஞாயிற்றுக்கிழமைதோறும் திருக்குறள் முதலிய இலக்கியங்களை முறைமையாக ஆராய்ச்சி செய்தார்கள். இவருடைய தந்தையார் வடமொழியையுங் கற்றுக்கொள்ளுமாறு இவரை இளமைப் பருவத்தில் தூண்டினார். அதன்படி இவர் வடமொழியையும் வேண்டிய அளவு கற்றிருந்தார். அதுவும் நூலாராய்ச்சிக்கு இன்றியமையாத்துணையாக நல்லுதவி புரிந்து நின்றது. திருவனந்தபுரத்து மொழியாகிய மலையாளத்தையும் இவர் இங்குக் கற்றுணர்ந்துகொண்டார்.

**எழுத்தாளரும் பதிப்பாசிரியரும்**

ஆசிரியர் சுந்தரம்பிள்ளை தாம் இயற்றிய மனோன் மணீயத்தை 1891-ஆம் ஆண்டில் முதல் பதிப்பாகத் தாமே வெளியிட்டிருந்தார். அப்பதிப்புக் கிடைப்பது அருமையாக இருந்தது. பல்கலைக்கழகத்தார் மனோன்மணீயப்பகுதிகளைப் பாடமாக வைத்தபோது மூலத்திலும் உரையிலும் மாறு பாடுகள் சில நிகழ்ந்திருந்தன. எல்லாவற்றையும் இவர் நன்கு ஆராய்ந்து 1922-ஆம் ஆண்டில் இரண்டாம் பதிப்பு வெளிப்படுத்தினார். இவருடைய பதிப்பு எல்லோரானும் போற்றிப் பாராட்டப்பெற்றது. செந்தமிழ் முதலிய பத்திரிகைகளில் அடிக்கடி ஆராய்ச்சிக்கட்டுரைகள் பல எழுதினார்.

**நெல்லையில் வேலை**

1923-ஆம் ஆண்டுத் தொடக்கத்தில் தமது ஊராகிய நெல்லையிலேயே வழக்கறிஞராகத் தொழில் புரிய எண்ணி னார். திருநெல்வேலிக்கு வந்து சேர்ந்தார். திருநெல் வேலியை அடைந்ததும் திருவனந்தபுரத்தில் செய்துவந்த நூலாராய்ச்சி தமிழாராய்ச்சி முதலியவைகளை இங்குந் தொடங்கினார். டி. கே. சிதம்பரநாத முதலியார், சக்கரபாணி நம்பியார், வேதநாயகம்பிள்ளை, அநந்தராம ஐயங்கார் முதலிய தமிழன்பர்களோடு தமிழ் பற்றிய ஆராய்ச்சிகளை நடத்திவந்தார். இங்குக் கம்பராமாயண ஆராய்ச்சிதான் முதன்மையாக நடைபெற்றது. நெல்லையில், "கம்பர்கழகம்" என்னும் பெயருடன் கழகம் ஒன்றை அமைத்து அதில் அடிக்கடி கம்பராமாயணச் சொற்பொழிவு ஆராய்ச்சி முதலியவைகளை நடத்தியதோடு கம்பர் விழாவையுஞ் சிறப்பாக நடத்தினார். விழாவுக்கு ரா. இராகவ ஐயங்கார் தலைமை தாங்கினார். 'கம்பன் திருநாள்' என்பதுபற்றி

இவர் கட்டுரை ஒன்றை எழுதிப் படித்தார். அக் கட்டுரையை எல்லோரும் புகழ்ந்து பாராட்டினார்கள்.

**சென்னையில் அகரவரிசைவேலை**

சென்னைப் பல்கலைக்கழகத்தாருடைய ஆதரவில் நடந்து வந்த தமிழ் அகரவரிசைக்குப் பதிப்பாசிரியர் ஒருவர் 1926-ஆம் ஆண்டில் தேவைப்பட்டார். அப்பொழுது அகரவரிசைக் குழுவுக்குத்தலைவராக இருந்தவர் வழக்கறிஞர் கிருட்டிணசாமி ஐயர். இவர் பதிப்பாசிரியரை ஏற்படுத்து வதற்குத்தகுதியானவர் யாவரென்று தம்முடைய நண்பர்க ளோடு கலந்து எண்ணினர். வையாபுரிப்பிள்ளையின் நண்பராகிய பெ. நா. அப்புச்சாமி ஐயர் இவருடைய பெயரைக் குறிப்பிட்டதோடு இவருடைய கல்வியறிவுத் தன்மையையும் பெருமையையும் விரிவாக எடுத்துரைத் தார். அகரவரிசைக் குழுவினர் இவரையே ஏற்படுத்தலாம் என்று மனநிறைவு கொண்டனர். 1926-ஆம் ஆண்டு நவம்பர்த்திங்களில் இவர் பதிப்பாசிரியர் வேலையை ஏற்றுக் கொண்டார். திரு. மு. இராகவையங்கார் தலைமைத் தமிழ்ப் பண்டிதராகவும், வை. மு. கோபாலகிருட்டிணமாச்சாரியார் வடமொழி தமிழ் இரண்டினும் தேர்ச்சிபெற்ற பண்டித ராகவும், ஆங்கிலப்பகுதிக்குத் துணையாக இ. எஸ். வரதரா சையர், சுந்தரமூர்த்தி என்பவர்களும் நியமிக்கப்பட்டனர்.

**வேலை விரைந்து முடிந்தது**

இந்த அகரவரிசை வேலை 1913-ஆம் ஆண்டில் சாண்ட்லர் என்னும் பெயருடைய பாதிரியார் ஒருவருடைய தலைமையில் தொடங்கப்பெற்றதாயினும் இவர் பதிப்பாசிரி யராகச் சென்றபோது அகரவரிசையின் முதல் தொகுதி தான் வெளிவரக்கூடிய நிலையில் இருந்தது. காரணம் வேலை தகுந்த முயற்சியின்றி ஆமை நடையைப்போல் வெகு மெது

வாக நடந்துகொண்டிருந்ததுதான். இவர் பதிப்பாசிரியராகச் சென்றபின் வேலை விரைந்து நடக்கத் தொடங்கியது. எல்லா வற்றையும் ஒழுங்கு செய்துகொண்டு, வெளிவரவேண்டி யிருந்த ஐந்து தொகுதிகளையும் ஏறக்குறையப் பத்து ஆண்டு களில் வெளிவரச் செய்தார். இடையில் அகரவரிசை வேலைக்குத் தக்கதுணையான நிகண்டு, வெளிவராத பழைய நூல்கள் முதலியவைகளை ஒழுங்குபடுத்தி வெளிவரச்செய் தார்.

**தமிழ்த்துறைக்குத்தலைமை**

1936-ஆம் ஆண்டில் அகரவரிசை வேலை முடியத்தக்க நிலையில் இருந்தது. அப்பொழுது தமிழாராய்ச்சித்துறை யின் தலைமைப்பதவி காலியாக இருந்தது. பலர் அவ்வேலை யைப் பெறுதற்குப் போட்டியிட்டனர். போட்டிகட்கு இடையில் இவருக்கே அவ்வேலை கிடைத்தது. ஏறக்குறை யப் பத்து ஆண்டுகள்வரை அவ்வேலையில் அமர்ந்திருந்தார். தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் வேலையை ஏற்றுக் கொண்டபிறகு அகரவரிசையின் ஏழாவது தொகுதியையும் முடித்தார்.

**பிரெஞ்சு முதலிய மொழிகள்**

இவர் பிரெஞ்சு, சேர்மன் முதலிய மொழிகளையுங் கற்றுத் தேறினர். சேர்மன் மொழியில் தேறித் தேர்வுப் பத்திரமும் பெற்றூர்.

**இராவ்சாகிப்**

1938-ஆம் ஆண்டில் அரசாங்கத்தார் இவருக்கு இராவ் சாகிப் என்னும் பட்டத்தைக் கொடுத்துச் சிறப்புச் செய்தார்கள்.

**நூல்கள் கட்டுரைகள் முதலியன**

பல்கலைக்கழகத்தின் வாயிலாகப் பல நூல்கள் வெளி வந்தன. தமிழாராய்ச்சித்துறைக்கு வந்த மாணவர்கட்கு

அத்துறையில் தக்க வழிகாட்டியாக இருந்து அவரவர்கள் எடுத்துக்கொண்ட பொருள்பற்றி நன்கு ஆராய்ந்து எழுது வதற்குத் தகுந்தவாறு அறிவுரைகள் கூறி வழிகாட்டினர். இலக்கியம் பற்றியும் இலக்கணம் பற்றியும் கவிதைகள் முதலியன பற்றியும் மொழியைப் பற்றியும் பலவகையான ஆராய்ச்சிக் கட்டுரைகளை அவ்வப்பொழுது எழுதிப் பத்திரிகைகளின் வாயிலாக வெளியிட்டு வந்தார். சில சமயங்களில் கதைகளையும் பத்திரிகைகட்கு எழுதுவார்.

**ஓய்வுக்குப்பின் நூல்வேலைகள்**

பல்கலைக்கழக ஆராய்ச்சித்துறைத் தலைவர் வேலையி லிருந்து ஓய்வுபெற்றபின் முழுநேரத்தையும் நூல் வேலையிலேயே செலவிடலானர். தமது கட்டுரை கதை முதலியவைகளை நூல்வடிவாகத் தொகுத்து வெளியிடத் தொடங்கினர். பலநூல்கள் வெளிவரத் தொடங்கின. இவர் பெரியனவுஞ் சிறியனவுமான பல நூல்களை இளமைக் காலத்திலிருந்தே வெளியிடத் தொடங்கி விட்டார். அவ்வாறு வெளிவந்த நூல்கள் பல.

**திராவிட மொழிகளில் ஆராய்ச்சி**

1946-ஆம் ஆண்டில் நாகபுரியில் நடந்த கீழ்க்கலை மாநாட்டில் திராவிடப் பகுதிக்குத் தலைமை தாங்கினர். தாம் நிகழ்த்திய ஆங்கில உரையை Research in Dravidian Languages என்னும் பெயருடன் தனிநூலாக வெளியிட்டார். இதனுடைய தமிழ்மொழி பெயர்ப்பு திராவிட மொழிகளில் ஆராய்ச்சி என்னும் பெயருடன் தனிநூலாக வெளிவந்திருக்கிறது.

**காவிய காலம்**

1949-ஆம் ஆண்டில் திருவிதாங்கூர்ப் பல்கலைக்கழகத் தாரின் அழைப்பிற்கு இணங்க அங்குச் சென்று தமிழிலக்

கிய வரலாற்றில் காவியகாலம் பற்றி ஆறு சொற்பொழிவுகள் நிகழ்த்தினர்.

### பேராசிரியர்

திருவனந்தபுரம் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராக இருந்த திரு. மு. இராகவ ஐயங்காரவர்கள் 1951-ஆம் ஆண்டில் ஒய்வு பெற்றபோது பல்கலைக் கழகத்தார் அவ் வேலைக்கு இவரை அழைத்தனர். மூன்று ஆண்டுகள் அவ் வேலையைப் பார்ப்பதாக ஒப்புக்கொண்டு அவ்வேலையைப் பார்க்கத் தொடங்கினர். காவியகாலம் பற்றிய தமிழ் ஆராய்ச்சியைப் பல்கலைக்கழகச் சார்பில் அச்சிடத் தொடங்கினர். ஒரு சிறுபகுதி அச்சிடப் பட்டது. 1954-ஆம் ஆண்டு செப்டம்பரில் பல்கலைக்கழக வேலையில் இருந்து ஒய்வு பெற்றுச் சென்னைக்குத் திரும்பினர். காந்தி நகரில் உள்ள தமது இல்லத்தில் தங்கி மேலும் நூல் வேலைகளைத் தொடங்கினர். பேராசிரியர் வேலையை விட்டுத் திருவனந்தபுரத்தில் இருந்து புறப்பட்டபொழுது அவ்வூர்த் தமிழர்கள் இவருக்குப் பொன்னடை போர்த்திப் பாராட்டிச் சிறப்புச் செய்தார்கள்.

### ஆங்கிலத்தில் தமிழ்த் தொண்டு

தமிழ் மொழிக்கு இவர் ஆங்கிலத்திலும் தொண்டு செய்திருக்கிறர். தமிழ் வரலாறு பெருமை முதலியவை களைப் பற்றி ஆங்கிலக் கட்டுரைகள் பலவற்றை ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதியிருக்கிறர். 1946-ஆம் ஆண்டு முதல், இந்திய வரலாற்றுச் சபை என்னும் அவையோடு தொடர்பு கொண்டிருந்தார். இந்தச் சபை இந்திய அரசாங்கத்தின் ஆதரவில் வரலாற்று நூல்களைப் பகுதி பகுதியாக வெளியிட்டு வருகிறது. இத் தொகுதிகளில் தமிழ் இலக்கிய வரலாறு பற்றி எழுதும் பொறுப்பை இவர்

மேற்கொண்டிருந்தார். கி. பி. முந்நூறு வரையில் உள்ள முதற் பகுதியையும் அதன் பிறகு கி. பி. எண்ணூற்று நாற்பத்தைந்து வரையில் உள்ள இரண்டாம் பகுதியையும் எழுதி யனுப்பினர். மேற்கொண்டு வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருந்தது.

**இவருடைய பதிப்புச் சிறப்புகள்**

இவருடைய பதிப்புக்கள் யாவும் தனிச் சிறப்புடையனவாக விளங்கும். ஒவ்வொரு நூலும் நூற்பொருள் விளக்கத்திற்கு இன்றியமையாத அகரவரிசை ஆராய்ச்சிக் குறிப்புக்கள் முதலியவைகளைக் கொண்டனவாக விளங்கும்.

**இறுதியும் பண்பும்**

இறுதிவரையில் தமிழ்த் தொண்டிலேயே ஈடுபட்டிருந்த இவர் 1956-ஆம் ஆண்டு பிப்ரவரித் தங்கள் பதினேழாம் நாள் தமது அறுபத்தெட்டாம் அகவையில் மண்ணுலக வாழ்வை நீத்து விண்ணுலக வாழ்வைப் பெற்றார். இவருடைய இறுதிக் காலத்தில் செய்து வந்த தொண்டுகள் முற்றுப் பெறுமல் நின்று விட்டன. இவர் சிறந்த அறிவாளி. அடக்கமும் பொறுமையும் அமையப் பெற்றவர். புகழை ஒரு பொருட் படுத்ாதவர். தாம் எடுத்துக்கொண்ட வேலையைச் செம்மையாகச் செய்து முடிக்கும் சீரிய பண்பு இவரிடம் நன்ருக அமைந்திருந்தது. இவருடைய தமிழ்த் தொண்டைப் பாராட்டி 1955-ஆம் ஆண்டு பிப்ரவரித்திங்களில் தமிழ் எழுத்தாளர் சங்கத்தார் கவர்னரைக்கொண்டு கேடயம் அளித்துப் பெருமைப் படுத்தினர்.

**பாராட்டுப் பாடல்**

இவர் அவ்வக் காலங்களில் அன்பர்கள் சிலரைப் பாராட்டிப் பாடல்கள் பாடியிருக்கிருர். அவைகளுள் திரு. வி.

உலகநாத முதலியார் அவர்களின் மணி விழாவின்போது பாடிய வாழ்த்துப் பாடல்

“சைவ சமயத் தனித்தொண்டன் தாங்கருஞ்சீர்த்
தெய்வத் தமிழின் திருத்தொண்டன்—வையத் (து)
இறைவ னெனும்பேரான் இனியான் இனிதே
உறைகநெடி தூழி உவந்து.”

என்பதாம்.

## இவர் இயற்றியனவும் பதிப்பித்தனவுமான நூல்கள்

1. மனோன்மணீயம்
2. இலக்கியச் சிந்தனைகள்
3. தமிழன் மறுமலர்ச்சி
4. சிறுகதை மஞ்சரி
5. தமிழர் பண்பாடு
6. இலக்கிய உதயம் (இரண்டு பகுதிகள்)
7. இலக்கியதீபம்
8. இலக்கிய உலகம் (இரண்டு பகுதிகள்)
9. கம்பர் காவியம்
10. திராவிடமொழிகளில் ஆராய்ச்சி
11. காவியகாலம்
12. இலக்கிய மணிமாலை
13. சொற்கலை விருந்து.

---

## ௯௦. அ. வரதநஞ்சைய பிள்ளை

**தோற்றம்**

"நீர்க்காவிச் சட்டையினுல் போர்த்த தேகம்
 நினைவெல்லாம் தமிழாக ஆன நெஞ்சம்
சோர்வின்றித் தொண்டாற்றச் சுற்றுங் கால்கள்
 சுடர்க்கவிகள் வடிக்கின்ற பொற்க ரங்கள்
கூர்ந்தெதையும் நோக்குகின்ற விழிகள் யாரும்
 கும்பிட்டால் தலைவணங்கும் அடக்கப் பண்பு
சார்ந்தாரைச் சாரவைக்கும் இனிமை கொண்டான்
 சால்புடையான் வரதநஞ்சைப் புலமை யோனே."

என்று திரு. செம்பியன்மாணிக்கம் அவர்களால் சொல்லோவியமாகத் தீட்டிக் காட்டப் பெற்ற வரதநஞ்சைய பிள்ளை அவர்கள், கொங்குமண்டலத்திலே சேலம் மாவட்டத்தின்கண் உள்ள பெருமாள்பாளையம் என்னுஞ் சிற்றூரிலே, 1877-ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் முதல் நாளுக்குச் சரியான, ஈசுவர ஆண்டு ஆவணித் திங்கள் பதினெட்டாம்நாள் பிறந்தார். தந்தையார் பெயர் அப்பாச் சாமிப் பிள்ளை, தாயார் பெயர் வரதாயி அம்மை. இவர் தோன்றிய குலம் வேளாண் குலத்துக் கருணிகர் மரபு.

**கல்வி கற்றல்**

வரதநஞ்சையர் ஐந்தாம் அகவையில் பள்ளியில் அமர்த்தப் பட்டார். இவருடைய தந்தையார் பள்ளிக் கூடம் வைத்துப் பிள்ளைகள் பலருக்குக் கல்விகற்பிக்கும் பணியை மேற்கொண்டிருந்தபடியால் இவரும் தந்தையாருடைய பள்ளியிலேயே கல்வி கற்கலானுர். மூன்று திங்கள்களில் தமிழ்நெடுங்கணக்கைக் கற்றுக் கொண்டார்.

**நினைவாற்றலுக்கு**

சிறுவர்களுக்கு நினைவாற்றல் மிகக் குறைவாக இருக்கும். சிறுவர்களுடைய நினைவாற்றலை வளர்ப்பதற்கு அக்

காலத்துக் கணக்காயர்கள் பலவழிகளைக் கையாண்டார்கள். வரதஞ்சைய பிள்ளையின் தந்தையாராகிய கணக்காயர் தமது பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகள் மாலையில் வீட்டிற்குச் செல்லும்போது ஒவ்வொரு பையனிடமும் ஒவ்வொரு மலரின் பெயரைச் சொல்லியனுப்புவார். மறுநாள் காலையில் பிள்ளைகள் பள்ளிக்கு வந்ததும் அவரவர்கட்குச் சொல்லப்பெற்ற மலரின் பெயரைக் கேட்பார். சரியாகச் சொல்லாமல் தப்பாகச் சொன்னவர்கட்குத் தக்கவாறு பிரப்பம்பழம் கிடைக்கும். வரதஞ்சையர் மிகு இளமைப் பருவத்திலேயே ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி முதலிய நீதி நூல்களையும்; முந்திரியிலக்கம், கீழ்வாயிலக்கம், நெல்லிலக்கம், எண்சுவடி, தண்டலையார் சதகம், நீதிசாரம் முதலிய நூல்களையும் நன்ருகக் கற்றுக்கொண்டார். இவர் தமது நுண்ணுணர்வினுல் நன்கு படித்தாரே யன்றி இவருடைய தந்தையார் தம்முடைய மகன் என்று தனிப் பட்ட முறையில் சிறப்பாக யாதுங் கற்பிக்கவில்லை. தம்முடைய மகன் படிப்பில் தந்தையாராகிய கணக்காயர் கருத்துச் செலுத்தாமலே யிருந்தார். ஆயினும் மற்றவர்கள் வரதஞ்சையருடைய கல்வித்திறத்தைக் கண்டு கணக்காயர் தம்முடைய மகனுக்கு மட்டும் நன்ருகக் கல்வி கற்பிக்கிருர் என்று குறை கூறினுர்கள்.

பாட்டியார்

இவருடைய தந்தையைப் பெற்ற பாட்டியார் நன்ருக எழுதப் படிக்கத் தெரிந்தவர். அவர் தம்முடைய பெயரனுக்குப் பாரதம், இராமாயணம் முதலிய இதிகாசக் கதைகளைக் கூறி அறிவுறுத்தியதுடன் பல கதைகளையுஞ் சொல்லி அறிவுறுத்தினுர்.

இவருக்கு அகவை எழு முடியும் வரையிலும் வேறு உடன்பிறந்தார்கள் யாரும் பிறக்கவில்லை. ஆகவே, இவர்

ஏழாண்டுவரையிலும் தாய்ப் பால் குடித்துக் கொண்டிருந் தாராம். தண்ணீர் குடித்துவிட்டு வருவதாகத் தந்தையா ராகிய கணக்காயரிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்று தாய்ப்பால் குடித்துவிட்டுத் திரும்புவாராம். தாய்ப்பாலை நின்று கொண்டே குடித்ததாகப் பின்னுளில் கூறியிருக்கிறார்.

## தெலுங்கு கற்றல்

இவருடைய தந்தையார் தனிப்பட்ட முறையில் ஒரு சிறுவனுக்குத் தெலுங்கு கற்பித்துக் கொண்டிருந்தார். வரதநஞ்சையருக்கும் தெலுங்கு கற்க வேண்டுமென்னும் ஆர்வம் உண்டாயிற்று. இவருடைய தந்தையார் மிகக் கண்டிப்புள்ளவர். அவரிடம் நெருங்கி வரதநஞ்சையர் தமது விருப்பங்களைக் கூற மாட்டார். ஆகவே, தம்முடைய விருப்பத்தைத் தாயாருக்கும் பாட்டியாருக்குந் தெரியப் படுத்தினர். அவர்கள் இவருடைய தந்தையாரிடத்திலே அச் செய்தியைக் கூறினர். அதற்குத் தந்தையார், "அவன் தமிழை நன்ருகப் படித்தால்போதும். தெலுங்கு படிப்பதைப் பற்றிப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்," என்று கூறிவிட்டார். வரதநஞ்சையர் தெலுங்கு கற்க வேண்டும் என்னுந் தமது எண்ணத்தை மாற்றிக்கொள்ள வில்லை. தம் தந்தையாரிடம் தெலுங்கு படிக்குஞ் சிறுவனிடம் தம் தந்தையார் இல்லாத சமயங்களில் ஒவ்வொரு தெலுங்கு எழுத்தாகக் கற்றுக் கொண்டார். எல்லா எழுத்துக்களை யும் நன்கு கற்றுக்கொள்ளவே தெலுங்குமொழியை எழுத்துக் கூட்டிப் படிக்கும் திறமையுண்டாகி விட்டது. ஒரு திங்களுக்குள் தெலுங்கு மொழியை இவ்வாறு கற்றுக் கொண்டார். ஆறு திங்களுக்குள் தெலுங்குப் புத்தகங்களை எடுத்துப் படிக்கும்படியான நிலைமையை அடைந்து விட்டார்.

**தந்தையார் அறிதல்**

தம் மகன் தெலுங்கு கற்றுக்கொண்ட செய்தி தந்தையாருக்குத் தெரியாது. தந்தையார் வீட்டில் இல்லாத சமயத்தில் ஒரு நாள் தெலுங்குநூல் ஒன்றை எடுத்து வாய்விட்டு உரக்கப் படித்துக்கொண்டிருந்தார். வெளியே சென்றிருந்த தந்தையார் அச்சமயத்தில் வீட்டிற்கு வந்துவிட்டார். தம் மகன் தெலுங்கு படிப்பதைச் சிறிதுநேரம் மறைவாக வெளியே நின்று கேட்டுக்கொண்டிருந்தார். பிறகு கனைத்துக்கொண்டே வீட்டிற்குள் நுழைந்தார். தந்தையைக் கண்ட தனயர் தாம் படித்துக் கொண்டிருந்த தெலுங்கு நூலை எறிந்துவிட்டு ஓடியொளிந்தார்.

**குறும்பு**

தாயாரும் பாட்டியாரும் வரதஞ்சையரை அருமை பாராட்டிச் சிறப்புடன் வளர்த்தார்கள். இதனால் இவருக்குக் குறும்பு செய்யும் குணம் உண்டாகியது. தந்தையார் பள்ளிக்கூடத்திற்கு வராமல் வெளியூர்களுக்குச் சென்றிருக்குங்காலங்களில், இவர் பள்ளிக்கூடத்தில் ஆசிரியருடைய இருப்பிடத்திலே அமர்ந்துகொள்ளுவார். மற்றைய மாணவர்களைக் கண்டிப்பார், தண்டிப்பார். வீட்டில் இருந்து தின்பண்டங்களைக் கொண்டுவருமாறு கூறுவார். தம்மோடு கூட விளையாட வருமாறு அழைப்பார். நாளடைவில் இச் செய்தி இவருடைய தந்தையாரின் காதுகளுக்கு எட்டிவிட்டது. தாம் ஊரில் இல்லாத காலங்களில் பள்ளிக்கூடத்திற்குப் போகக் கூடாது என்று கட்டளையிட்டு விட்டதன்றி வேறொருபையனைத் தலைமாணுக்கனுகவும் ஏற்பாடு செய்துவிட்டார்.

**பூசைக்குப் பின்**

இவருடைய தந்தையார் செம்பினலாகிய பிள்ளையார் உருவச்சிலை ஒன்றைவைத்துப் பூசிப்பது வழக்கம். பூசை

முடிவில் செபஞ்செய்வது தோத்திரம்பாடுதல் முதலியவை களைச் செய்வார். இதனைப் பார்த்துக் கொண்டிருந்த இவருக்கு நாமும் பூசை செய்யவேண்டும் என்னும் எண் ணம் உண்டாகியது. அதற்குத் தகுந்த சமயத்தை எதிர் பார்த்துக்கொண்டிருந்தார். தந்தை ஊரில் இல்லாத சமயத்தில் ஒரு நாள் அந்த ஆனைமுகக் கடவுளைத் தாமும் பூசித்து வழிபட எண்ணினர். தாயாரும் பாட்டியாரும் தடுத்துங் கேளாமல் விநாயகர் உருவச்சிலை இருந்த பெட்டியை எடுத்து எதிரே வைத்துக்கொண்டு பூசை பண்ணத் தொடங்கினார். தந்தையாரைப் போலவே தாமும் நீராடித் திருநீறு பூசிக் கண்மணிமாலை யணிந்து கொண்டார். ஆனைமுகக் கடவுளுக்குத் திருமுழுக்கு முதலியவைகளைச் செய்து கற்பூர ஒளி முதலியன காட்டித் தாம் அறிந்த தேவாரப் பாடல்கள் சிலவற்றை ஓதிக்கொண் டிருந்தார். இந்தப் பூசைவிளையாட்டு இவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. "பூசை வேளையில் கரடி புகுந் தது" என்று உலகத்தார் பழமொழி ஒன்றைக் கூறுவார் கள். அஃது இவருடைய செயலிலே உண்மையாகி விட்டது. வெளியே சென்றிருந்த தந்தையார் திரும்பி வீட்டிற்கு வந்துவிட்டார். மைந்தனுடைய செயல் மட் டற்ற மகிழ்ச்சியை அளிப்பதற்குப் பதிலாகப் பெருஞ் சினத்தை உண்டாக்கிவிட்டது. தந்தையைக் காணவே மைந்தர் எழுந்தார். பின்னங்கால் பிடரியில் படுமாறு முழு ஆற்றலையுங் காட்டிப் பிடித்தார் ஓட்டம். தந்தை மைந்தனைத் துரத்துதற்கு எண்ணினர். பூசணிக்காய் அளவு பருமனுள்ள கல் ஒன்றைத் தூக்கிக் கொண்டு விரட்டினர். இவர் ஓரிடத்தில் ஒளிந்திருந்து தந்தையா ருடைய சினம் ஒருவாறு தணிந்த பிறகு வீட்டிற்குத் திரும்பினர்.

**தந்தையார் பிரிவு**

இவருக்கு அகவை ஒன்பதும் இவருடைய தம்பி கந்தசாமிக்கு அகவை ஒன்றும் நடந்துகொண்டிருக்கும்போது தந்தையார் தமது நாற்பதாவது அகவையில் இறைவன் திருவடி நீழலையடைந்தார். குடும்பத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு இவருடைய தலையில் விழுந்தது. அந்த இளம் பருவத்திலேயே கணக்காயர் வேலையை மேற்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்தி அதனால் வரும் வருவாயைக் கொண்டு காலங்கழிக்கலானார்.

**மேலுந் தமிழ் கற்றல்**

சில ஆண்டுகளுக்குப்பின் இவருடைய தாயாரும் காலஞ் சென்றார். பல இடங்களிலும் பள்ளிக்கூடம் வைத்துக் காலந்தள்ளிக்கொண்டிருந்த இவர் மேலும் தமிழ் நூல்களைக் கற்கத்தொடங்கினார். தந்தையார் வைத்திருந்த புத்தகங்களை யெல்லாம் எடுத்துப்படிக்கலானார். முதலாவதாக இவர் படிக்கத்தொடங்கியது நைடதம். அப் புத்தகம் மூலமும் உரையுமாக இருந்ததால் அதனைத் தாமே கற்றார். தெரியாத சொற்களின் பொருளை அகராதியைப்பார்த்து அறிந்துகொண்டார். பள்ளிக்கூடவேலை போக ஒழிந்த நேரங்களிலெல்லாம் நூலும் கையுமாக இருக்கலானார். இவ்வாறு பாரதம் கம்பராமாயணம் முதலிய பல நூல்களைக் கற்றுணர்ந்தார். இலக்கண நூல்களைத் தகுந்த ஆசிரியரிடம் பாடங் கேட்டுணர விரும்பினார். ஆனால் அந்த எண்ணத்தை நிறைவேற்றிக்கொள்வதற்குத் தகுந்த ஆசிரியர் அகப்படாமல் வருந்தினார்.

**முருகன் திருவருள்**

பதினாறும் அகவைமுதல் நல்லிப்பாளையம் என்னும் ஊரில் பள்ளிக்கூடம் ஒன்று வைத்து நடத்தினார். இவ்வூர்

நாமக்கல்லுக்கு அண்மையாகையால் விடுமுறை நாட்களில் அங்குச்சென்று உயர்நிலைப்பள்ளிகளில் உள்ள தமிழாசிரியர் களோடு கலந்து அளவளாவவும் இலக்கணங்களில் ஐயமேற் பட்டவைகளைக் கேட்டுத் தெரிந்துகொள்ளவும் வழியேற் பட்டது. இச் சமயத்தில் தாமே தனிப்பாடல்களை இயற்றவுந் தொடங்கினர். இவர் தமக்கு ஐயமானவைகளைப் பிற புலவர்களிடங்கேட்டால் அஃது அவர்களுக்கும் ஐயமானவைகளாகவே யிருக்கும். ஆகவே, இவர் அது யாதாக இருக்குமென்று எண்ணமிட்டுக்கொண்டு உறங்கு வார். கனவில் ஒரு தோற்றம் உண்டாகும். ஓர் ஆசிரியர் போர்டு பலகையில் எழுதி விளக்குவதைப் போலத்தெரியும். விழித்துக்கொண்டு நூல்களை எடுத்துப்படிப்பார். ஐயம் நீங்கித் தெளிவு ஏற்படும் அதுதான் உண்மைப் பொருள் என்று உறுதிகொள்வார். அவ்வாறு நிகழ்வது முருகன் திருவருளே என்று மகிழ்வார்.

## ஆசிரியத் தேர்வு

பிறகு ஏரகுடி என்னும் ஊருக்குச்சென்று ஆசிரியத் தொழில் பார்க்கத்தொடங்கினர். அகவை ஐம்பதுள்ள முதியவர் ஒருவரும் ஆசிரியராக வேலைபார்ப்பதற்காக வந்திருந்தார். ஊரினர் கணக்காயர் இருவருடைய அறிவுத் திறமையையும் ஆராய்ந்து தகுந்தவர்களை ஆசிரியராக அமர்த்துவது என்று முடிவு செய்தனர். தேர்வு தொடங் கிற்று. அகவை பதினறுள்ள இவரும் ஐம்பது வயதுள்ள மற்றொருவரும் போட்டியிடுதலைக் காண்பதற்கு மக்கள் பலர் கூடினர்கள். நூல்களைக் கற்ற சிறந்த அறிவுடைய ரெட்டியார் ஒருவர் தேர்வு வேலையை நடத்தலானர்.

“ ஊதைகொள் குரும்பைமிசை சங்கினுலை யேற்றி
வாதையறு நித்திலம் மடுத்தரிசி பெய்தே

போதினரக் காம்பல்கள் புதுக்கனன் மடுத்துப்
பேதையர்கள் சிற்றில்விளை யாடல்பெரி தெங்கும்.''

என்னும் நல்லாப்பிள்ளை பாரதச் செய்யுளைப் படித்துப் பொருள்கூறுமாறு முதலில் முதியவரிடம் தேர்வைத் தொடங்கினர். அம் முதியவர் பாட்டைப் படித்துவிட்டுப் பொருள்கூறத் தொடங்கினர். "இது சிறு பெண்கள் சிற்றிலமைத்துச் சிறுசோறாக்கி விளையாடுஞ் செய்தியைக் கூறுகிறது. சங்கை உலைப்பாத்திரமாகவும் தேங்காய் நீரை உலை நீராகவும் முத்துக்களை அரிசியாகவும், செவ்வாம்பல் மலரை நெருப்பாகவும் கொண்டு விளையாடுகிறார்கள் என்பது இதன் திரண்டபொருள்,'' என்று கூறினர். எல்லோரும் இரெட்டியாருடைய முகத்தைப்பார்த்தார்கள். இரெட்டியாரோ உதட்டைப்பிதுக்கினர். பிறகு பொருள் கூறியவரைப்பார்த்து, "இளநீரே உலையாக எங்கே ஐயா கூறியிருக்கிறது?'' என்று கேட்டார். முதியவர் குரும்பை மிசை என்று சொல்லியிருக்கிறதன்றோ என்றார். அதற்கு இரெட்டியார், "குரும்பைமிசை என்றால் குரும்பை நீர் என்றா பொருள்? எல்லாம் சரிதான். இஃதொன்றில்தான் தவறிவிட்டீர்'' என்று சொன்னர். பிறகு வரதஞ்சையரைப் பார்த்து, "ஊதைகொள் குரும்பை மிசை'' என்பதற்குப் பொருள் யாது? என்று கேட்டார் உடனே இவர், "ஊதை-காற்று: காற்றால் உதிர்க்கப்பட்டுக்கிடந்த குரும்பைகளை அடுப்புக்கற்களாக அமைத்து அதன்மேல் உலை ஏற்றுகிறார்கள். அவர்கள் கூறிய மற்றைப்பொருள் ஒக்கும்'' என்று விடையிறுத்தனர். கூடியிருந்தவர்கள் "இவர் அகவை இளைஞராயினும் அறிவில் முதியவராக இருக்கிறார்'' என்று சொல்லிப் பாராட்டினர்கள். மேலுஞ் சில கேள்விகள் கேட்கப்பட்டன. இறுதியில் இவரே ஆசிரியத்தொழிலுக்கு ஏற்படுத்தப் பெற்றார்.

**தனிப்பாடல்**

ஒருகால் இவரும் இவருடைய நண்பர் ஒருவரும் முருகக்கடவுளைப்போற்றி வழிபடும் பொருட்டுச் செட்டிக் குளம் என்னும் ஊருக்குச் சென்றூர்கள். அப்பொழுது இவர் தம் நண்பர் விரும்பியவாறு,

"மட்டுத் தளையவிழ் குல்லையந் தாம மணிநிறத்தோன்
இட்டப் படுமரு கன்கதிர் வேற்கை இளையவன்வாழ்
செட்டிக் குளம்வந்து சேவிக்கின் றேம்அச் சிவனருளும்
செட்டிக் குளம்வரு மோபுன்கண் யாவையும் தீர்த்திடற்கே."

என்னும் செய்யுளைப் பாடினுர். இதனைக் கேட்டு நண்பர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார்.

**இலக்கணம் கற்றல்**

துறையூரில் நாகலிங்கம்பிள்ளை என்னும் பெயருடைய தமிழறிஞர் ஒருவர் இருந்தார். அவர் தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்களையும் சங்க நூல்களையும் நன்கு பயின்றவர். வரதநஞ்சையர் விடுமுறை நாட்களில் மேற்படி அறிஞரிடஞ்சென்று தொல்காப்பியத்தில் விளங்காத பகுதிகளை மட்டும் கேட்கலானுர். அவர் முகமலர்ந்து இன் சொற் கூறிப் பாடஞ்சொன்னுர். இவர் நுட்பமாகக்கேட்கும் கேள்விகளைக் கேட்டு வியந்து புகழ்ந்தார். "எத்தனையோ பேர் என்னிடம் பாடங்கேட்டனர்; உன்னைப்போல் நுட்ப மாக ஆழ்ந்து கற்றவர் எவரும் இலர். உன் கேள்விகள் ஆழ்ந்து கற்கவேண்டும் என்று அறிவுறுத்துவன வாயிருக் கின்றன," என்று சொல்லி இவரைப் பெரிதும் பாராட்டினுர். நன்ருக ஆராய்ச்சி செய்து இவருடைய கேள்விகட்கு விடை யளிப்பதோடு, "இதன்மேலும் பொருள் இருக்கலாம். நீயும் நன்ருக ஆராய்ந்து தெரிந்துகொள்," என்று கூறுவார்.

**இலக்கியம் கற்றல்**

துறையூருக்கும் ஏரக்குடிக்கும் இடையில் சிக்கத்தம்பூர் என்னும் பெயருடைய ஊர் ஒன்று இருக்கிறது. அவ்வூரில் முத்துவீரமரெட்டியார் என்னும் பெயருடைய இலக்கியப்புலவர் ஒருவர் இருந்தார். அவர் பெரும்புலவர் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யவர்களிடமும் பழகியவர். அவரிடம் இவர் ஆரியப்புலவர் பாகவதம், திருவிளையாடல் புராணம், கம்பராமாயணம் முதலிய நூல்களிற் சிற்சில பகுதிகளைப் பாடங்கேட்டார்.

**நூலியற்றுதல்**

இவருடைய நண்பர்கள் சிலர் இவருடைய புகழும் பெயரும் நிலவுலகத்திலே நிலைத்து நிற்பதற்காக ஏதேனும் ஒரு நூல் செய்யவேண்டும் என்றனர். "குசேலர் வரலாறு குசேலோபாக்கியானம் என்னும் பெயரோடு பாடப்பட்டிருப்பதைப் போலத் துருவனுடைய வரலாற்றைத் 'துருவோபாக்கியானம்' என்னும் பெயருடன் பாடலாம்" என்று தமது எண்ணத்தையும் புலப்படுத்தினர். இவர் அவ்வாறே செய்யத் தொடங்கித் துருவோபாக்கியானம் என்னும் பெயருடன் முந்நூறு பாடல்கள் வரை பாடினார். திருச்செங்கோட்டில் எழுந்தருளிய நாரீவிநாயகர் என்னும் பிள்ளையார்மீது மும்மணிமாலை ஒன்று பாடினார். நயனகிரி வரதராசர்மீது பதிகம் ஒன்று பாடினார். இவரிடம் பலர் தமது நூல்களுக்குச் சிறப்புப்பாயிரம் பெற்றுச்சென்றனர்.

**சேடாசலக்கவிராயர்**

அந் நாளில் காங்கேயம் என்னும் ஊரில் சேடாசலக் கவிராயர் என்னும் பெயருடையவர் ஒருவர் இருந்தார். அவர் எண்வகை அவதானமுஞ் செய்வார். விரைந்து கவி பாடுவதில் வல்லவர். இசைப் பயிற்சியும் உண்டு. இசைப் பாடல்கள், வழிநடைச்சிந்துகள் போன்ற சிறிய நூல்களை

நன்ருகச் செய்வார். இவர் ஒரு காரியத்தை முன்னிட்டு வரதநஞ்சையரிடம் வந்தார். இவரோடு அளவளாவிப் பேசிக் கொண்டிருந்தார். அவர் இயற்றிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். தாம் இயற்றிய பாடல்களையும் அவருக்குக் கூறினர். பிறகு இவர்,

"கார்நிறமாம் பத்துக்கால் காணும்பார் வாயெட்டுச்
சீர்நிற்கும் நல்லாரைச் சேருமே—ஏர்நிற்க
ஆடும் பணமென்ருல் அஞ்சக்கை மூடுமிதை
நாடியுரைப் பீர்புலவீர் நன்கு."

என்னும் வெண்பா ஒன்றை இயற்றினர். சேடாசலக் கவிராயரைப் பார்த்து, "இஃதொரு பழைய செய்யுள். நன்ருக ஆராய்ச்சி செய்து பார்த்தேன். பொருள் விளங்கவேயில்லை. தெய்வத்தைப்போலத் தாங்கள் வந்தீர்கள். இதன் பொருளைத் தாங்கள் விளக்கியருள வேண்டும்," என்று சொல்லித் தாம் இயற்றிய செய்யுளை நீட்டினர். கவிராயர் இச் செய்யுளைப் பலமுறை படித்துப் பார்த்தார். கருநிறம், பத்துக்கால், எட்டுவாய், நல்லோரைச் சேரும், ஆடும், பணம் என்ருல் அஞ்சக்கையை மூடிக்கொள்ளும் என்று எளிதாகக் காணப்பட்டதே தவிரப் பொருள் இன்னது என்று அறியமுடியவில்லை. நன்ருக எண்ணமிட்டுப்பார்த்தார். "பிறகு சொல்லுகிறேன்" என்ருர். கவிராயர் வந்த காரியத்தை இவர் இனிது நிறைவேற்றினர்.

**பொருள் விளக்கல்**

மறுநாள் கவிராயரைப்பார்த்து, "நேற்றுக் கூறிய பாட்டின் பொருள் விளங்கிவிட்டதா?" என்று உசாவினர். கவிராயர் இவரைப்பார்த்து "இரவில் உறக்கமின்றி எண்ணிப் பார்த்தேன். அஃது என்னையும் ஏய்க்கின்றது. விளங்கவில்லை. நீர் கேட்பதைப்பார்த்தால் அதன் பொருள்

உமக்குத் தெரியும்போல இருக்கிறது. இப் பாடல் யாரால் இயற்றப்பெற்றது? உண்மையை ஒளிக்காமல் உரைத்தல் வேண்டும்,'' என்று வற்புறுத்தினர். இவர் நகைத்துக் கொண்டே, “வேலை என்னுடையதுதான்; என்னுடைய பிழையைப் பொறுத்தருளுங்கள்; நான் இயற்றிய பாட்டின் பொருள் திருமால்'' என்றார். கவிராயர், “எவ்வாறு? பொருத்திக் காட்டுங்கள் பார்ப்போம்,'' என்றார். இவர், “நீங்களே பொருத்திப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்றார். கவிராயர், “கார்—கருநிறம் சரி. பத்துக்கால் என்றால் என்ன?'' இவர்,“பத்துக்கால் என்பதோடு-காணும் பார்வாய், என்பதைச் சேர்த்து நிறுத்துங்கள்.'' கவிராயர், “பத்துக் கால் காணும் பார்வாய் - பத்துமுறை இவ்வுலகிலே பிறப்பு எடுக்கும். அடடா! இப்படியா என்னை ஏமாற்றுகிறீர்?'' இவர், “எட்டுச்சீர் நிற்கும்-நல்லாரைச் சேரும்.'' கவிராயர், “எண்வகைச் சிறப்புக்களும் பொருந்திய எட்டுத் திரு மகளிரையும், (அட்டலட்சுமிகளையும்) தழுவும்.'' சரி ஆடும் பணம் என்றால் அஞ்சக்கை மூடும்-இதன்பொருள் என்ன? இவர், “இதுதான் கல்வியாழத்தைக் காணும் அளவுகோல்; பணம் என்றால் பாம்பின் படம். கவிராயர் ஓகோ அப்படியா? இப்பொழுது எனக்கு எல்லாம் விளங்கி விட்டது. படம் எடுத்து ஆடுகின்ற பாம்பைக் கண்டால் அம் சக்கை - அழகிய கண்களை மூடிக்கொண்டு உறங்கத் தொடங்கிவிடும். புலவர்களை ஏமாற்றுவதற்கென்றே இப் பாட்டைப்பாடி உருவாக்கினீர் போலும்! எனக்கே திக்கு முக்காடிப் போய்விட்டதே'' என்றார். இவர், “நான் ஒரு குறும்புக்கவி ஆகையால் இவ்வாறு செய்தேன்'' என்றார். கவிராயர், “இப்படியும் சில பாடல்கள் வேண்டும். இறுமாப் புடைய புலவர்களுக்கு இது சரியான வாய்ஆப்பு, மயக்கப் பொருள் தந்து எல்லோரையும் மருட்டிவிடும்'' என்றார்.

**பாக்கொடை**

பிறகு கவிராயர் வரதநஞ்சையரைப் பார்த்து ஒரு பாடல் சொல்லத்தொடங்கினர். ஒரு கணத்துக்குள்,

“கஞ்சத்து வந்த கலைமகள்சேர் நின்கவியால்
நெஞ்சத் துவந்தனம்யாம் நேர்மையுடன்—குஞ்சமுறு
மாவரத நஞ்சயபூ மாதங்கு வாழ்புயதா
மாவரத நஞ்சையபூ மா.”

என்னும் ஒருசெய்யுளைப் பாடி நன்கொடையாக வழங்கினர். பிறகு இவரும் சேடாசலக் கவிராயரைப் புகழ்ந்து ஒரு செய்யுள் பாடினர்.

**திருமணம்**

இவருக்கு அகவை இருபத்து மூன்று நடந்துகொண்டிருந்தபோது பிலவ ஆண்டு வைகாசித்திங்களில் திருமணம் நடைபெற்றது. இவருடைய நண்பர்களும் செல்வர்களும் தக்கவாறு உதவிசெய்து திருமணத்தைச் சிறப்பாக நடத்தி வைத்தனர்.

**பாட்டு**

ஒருமுறை காட்டுப்பாளையம் மிட்டாதார் இவரைப் பார்த்து, “ஐயா! வேல் என்று தொடங்கி வேல் என்று முடியுமாறு முருகக்கடவுள்மீது ஒரு செய்யுள் இயற்ற வேண்டு”மென்றனர். இவர் உடனே,

“வேலேந்தும் கையுடைய வித்தகனே மாதுரியப்
பாலேந்தி ஊட்டியவாம் பல்வாயா—மாலேந்தும்
பூஞ்சோலைக் காளிநகர்ப் புண்ணியனே நின்னைமற
வேஞ்சால நீயுமற வேல்.”

என்று பாடினர்.

**பொடிப் பாட்டு**

இவர் கோயம்புத்தூருக்குச் சென்றிருந்தபோது அங்கிருந்த பொடிக்கடைக்காரர் ஒருவர் பொடியின்மீது

சிலபாடல்கள் பாடவேண்டும் என்று வேண்டிக்கொண்டார். இவர்,

> " மலையைப் பெரிய மத்தாக்கி
> வளரோ டதியை இடைப்பெய்தே
> அலையைக் கடைந்து தான்பொன்கொண்
> டன்றுதேவர் வாய்க்கமுதம்
> மலியத் தந்த கோபால
> சாமி பின்னும் வந்துபுகை
> இலையைக் கடந்து பொன்கொண்டெம்
> மூக்குக் கமுதம் ஈந்தானே."

> " முன்னுசி கூறி மறையோர்கள்
> கோயம்புத் தூரினில்வாழ்
> மன்னுசி கேட்ட குணமணி
> யேயென வாழ்த்துகொடைக்
> கன்னுசி வாக்கிய கோபால
> பூபநின் கைப்பொடிதான்
> சன்னுசி நாசிக்கும் யாசிக்கும்
> தன்மையைத் தந்திடுமே."

என்றுஞ் சில பாடல்களைப் பாடினார். அப் பொடிக்கடைக் காரர் இவர் கோயம்புத்தூர் செல்லும்போதெல்லாம் நல்ல பொடியாக இடித்து இவருக்கு இனமாகக் கொடுத்துக் கொண்டிருந்தார். இதுவே பாட்டுக்கு நன்கொடை.

### கணக்குவேலை முதலியன

இவர் பெருநிலக்கிழாரின் பிள்ளைகள் சிலருக்குக் கல்வி கற்பித்தார். ஊர்க்கணக்குவேலையும் இவரை யடைந்தது. இராமாயணம் முதலிய நூல்களைச் சொற்பொழிவு செய்து பட்டாபிடேகமும் நடத்தித் தக்கவாறு நன்கொடை பெற்றார்.

**கரந்தைத் தொடர்பு**

வரதநஞ்சைய பிள்ளையவர்களின் பெரும் புகழும் எல்லாவிடங்களினும் பரவி நின்றன. கரந்தைத் தமிழ்ச் சங்கத்தலைவராக இருந்த த. வே. உமாமகேசுரன் பிள்ளை இவருடைய கல்விச் சிறப்பு முதலியவைகளை அறிந்து அடிக்கடி வரவழைத்துச் சொற்பொழிவுகள் செய்யச் செய்தார்.

**பாராட்டு**

இவருக்கு 'ஆசிரியர்' என்னும் பட்டத்தை அளிக்க வேண்டும் என்று இலத்திவாடிமிட்டா பெருநிலக்கிழார் விரும்பினர். தக்கார்களைக்கொண்டு அளிக்கச் செய்வதே சிறந்தது என்று முடிவு செய்து கரந்தைத்தமிழ்ச் சங்கத்திற்குத் தெரியப்படுத்தினர். சங்கத்தினரும் அவருடைய எண்ணத்தை முழுமனத்தோடு ஏற்றுக்கொண்டனர். பெருநிலக்கிழார் தங்கத்தோடா ஒன்றில் இவருடைய பெயரையும் அதனை வழங்கும் தம்முடைய பெரையும் கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் பெயரையும் பொறித்து கா. ரா. நமச்சிவாய முதலியார் தலைமையிற் கூடிய கரந்தைத் தமிழ்ச் சங்க விழா ஒன்றில் அளிக்கச்செய்தார். அப்பொழுது இவருடைய இளவல் அ. கந்தசாமிப் பிள்ளை முதலிய பலர் இவரைப் பாராட்டிப் பாடிய பாடல்கள் அங்குப் படிக்கப் பட்டன. அப்பொழுது இவர் பெருநிலக்கிழாரைப்பாராட்டிப் பல செய்யுட்கள் பாடினர். அப்பொழுது பாடியவைகளுள்,

> "செந்தார்ப் பசுங்கிளியே சின்னச்சா மிப்பூமான்
> வந்தா தரிப்பதுதாழ் வாயிடினும்—நந்தாமே
> தன்னகர்ப்பே ரென்னோடு சாற்றுவரே னும்போதும்
> மன்னிலத்தில் வாடியென்றோர் வாக்கு."

என்பதும் ஒன்றாகும். மற்றும் சங்கத்தாரையும் வாழ்த்தினர்.

### தமிழரசி குறவஞ்சி

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் நிகழும்போது தமிழரசி குறவஞ்சி என்னும் நூல் ஒன்று இயற்றி அரங்கேற்றஞ்செய்ய வேண்டுமென்று த. வே. உமாமகேசுரனார் இவருக்கு ஒரு கடிதம் எழுதினர். முதலில் இவர் அவ்வாறு குறவஞ்சி நூல் இயற்றும் எண்ணமிலாதவராக மறுத்துரைத்தும் தமிழவேளின் வற்புறுத்துதலுக்காக நான்கே நாட்களில் குறவஞ்சியைப் பாடி முடித்து வெள்ளிவிழாக் கூட்டத்தில் நிறைவேற்றினர். அவைத் தலைவராகத் திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் அமர்ந்திருந்தார். ஆங்கிலமுந் தமிழும் வல்ல பல அறிஞர்கள் கூடியிருந்தனர். அவர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத் தக்கவர்கள், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளையவர்கள், நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள், டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள், பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள் முதலியோர்களாவர்.

“உலகெலாம் பரவுதமிழ் அரசிகுற
வஞ்சியெம துரைக்க டங்கி
நிலவுமா றருள்புரியு மெனத்துணிந்து
போற்றுகிற்பாம் நெடிய கூர்த்த
உலையுருவ வேற்கைச்சேய் தன்னையொரு
குறவஞ்சி எய்தத் தோன்றும்
மலைபுரையும் கடகளிற்று மாமுகத்துப்
பண்ணவனார் மலர்த்தாள் மாதோ.”

என்பது குறவஞ்சியின் காப்புச் செய்யுளாகும்.

### ஞானியாரடிகள்மீது பாட்டு

திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் அடிகட்கு அறுபதாம் ஆண்டு நிறைவு விழா நிகழ்ந்தபோது அடிகளாரின்

அருந்தமிழ்ப் பணியையும் சொல்வன்மையையும் பெருமை யையும் பாராட்டிச் சில பாடல்களை இவர் செய்தனுப்பினர்.

அம்மானை

" சீரார் புலிசைச் சிவஞான சண்முகனுர்
ஏராரோர் வேளைமுனிந் திருப்பவர்காண் அம்மானை
ஏராரோர் வேளைமுனிந் திருப்பவரே யாமாயின்
நேராயெவ் வேளையவர் நேசிப்பார் அம்மானை
நேசிப்பார் செவ்வேளை நித்தமுங்காண் அம்மானை."

என்னும் அம்மானைப்பாட்டு அப் பாடல்களில் ஒன்றாகும்.

**கட்டுரைகள்**

செந்தமிழ்ச்செல்வி, தமிழ்ப்பொழில், சிவநேசன் முதலிய பல பத்திரிகைகட்கு, இவர் பல கட்டுரைகள் எழுதி நல்ல தொண்டு செய்திருக்கிறார். சிவநேசன் பத்திரி கையில் இவரால் எழுதப்பெற்ற கட்டுரைகளைப் படித்து நற்பயன் பெற்றவர்கள் பலர்.

**பொதுவான பண்புகள்**

தமிழிலே மட்டுமன்றி வடமொழி தெலுங்கு முதலி யவைகளிலும் இவர் நல்ல புலமையுடையவர். இவருடைய இல்வாழ்க்கைக்கு ஏற்ற மனைவியார் அமைந்தமையின் வாழ்க்கையைச் சிறப்புற நடத்தினர். இவருக்கு அமிர்தம், தெய்வயானை, இலட்சுமி என்னும் பெண்மக்களும்; இராம லிங்கம் என்னும் ஆண்மகனும் மக்கட் செல்வமாகத் தோன்றினர். இவர் பள்ளிக் கணக்காயராக இருந்து கொண்டே நாட்டுக்கணக்கு இசைப்புலமை தமிழ்ப்புலமை சோதிடப்புலமை முதலிய எல்லாவற்றையும் ஒருங்கே பெற்றிருந்தார். மற்றும் வேதாந்த சித்தாந்த நூல்களினும் தக்கவாறு தேர்ச்சி பெற்றிருந்தார். இவருடைய எல்லாத் திறமைகளையும் நன்குணர்ந்தே "புலவரேறு" என்னும்

சிறப்புப் பெயரும் வழங்கப் பெற்றிருந்தது. இவரிடம் பல மாணவர்கள் இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுப் புலமைத் தேர்வுகளில் வெற்றி பெற்றுக் கலைக் கழகங்களில் தமிழாசிரியராகப் பணிபுரிகின்றார்கள். இவருடைய இளவலாகிய அ. கந்தசாமிப் பிள்ளை மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் தேர்வுகளான பிரவேசம் பாலபண்டிதம் பண்டிதம் என்னும் மூன்று தேர்வுகளினும் முதல்வராகத் தேறித் தங்கத் தோடா பரிசு பெற்றவர். அவருக்கு ஆசிரியராகக் கற்பித்தவரும் இவரே.

**கலைத்தொண்டு**

செய்யுள் பாடல் உரைநடை எழுதல் முதலிய துறைகளில் இளமைக் காலத்திலேயே இவர் இறங்கிவிட்டார். கருணீக புராணம் என்னும் நூலைப் பிழை திருத்திச் சுத்தப் பதிப்பாக வெளியிட்டதோடு கீழ்க்கண்ட நூல்களையும் இயற்றியிருக்கிறார்.

1. திருவோபாக்கியானம்.
2. மனவாசிய மாலை.
3. நாரீ விநாயகர் மும்மணிமாலை.
4. நயனகிரி வரதராசர் பதிகம்.
5. தமிழரசி குறவஞ்சி.

மற்றும் பல நூல்கள் எழுத்துச் சுவடியாக இருக்கின்றன.

**இறுதி**

எல்லாத் துறையிலும் சிறந்து விளங்கிய இவர் தமது எழுபத்தொன்பதாம் அகவையிலே 1956-ஆம் ஆண்டு சூலைத் திங்கள் பதினோராம்நாள் மண்ணுலக வாழ்க்கையைத் துறந்து விண்ணகம் புகுந்தார்.

MADURAI UNIVERSITY LIBRARY

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

### பதினைந்து புத்தகங்களினும் வெளிவந்துள்ள

## 380 புலவர் பெருமக்களின் பெயர் அகரவரிசை


| | | புத்தக எண் |
|---|---|---|
| | அகோரமுனிவர் | 10 |
| | அண்ணாமலை ரெட்டியார் (சென்னிகுளம்) | 5 |
| | அதிவீரராம பாண்டியர் | 2 |
| | அநதாரியப்பர் | 13 |
| 5. | அநந்தபாரதி ஐயங்கார் | 11 |
| | அபிராம பட்டர் | 6 |
| | அப்துல்காதிறு ராவுத்தர் | 14 |
| | அமிர்த கவிராயர் (பொன்னாங்கால்) | 4 |
| | அம்பலவாண தேசிகர் (துறைசை) | 10 |
| 10. | அம்பலவாண நாவலர் | 10 |
| | அரங்கசாமி ஐயங்கார் | 14 |
| | அரங்கநாத முதலியார் (பூண்டி) | 3 |
| | அரசகேசரி | 6 |
| | அரசஞ்சண்முகனார் (சோழவந்தான்) | 7 |
| 15. | அருணகிரிநாத அடிகள் | 2 |
| | அருணாசலக்கவிராயர் (சீகாழி) | 3 |
| | அருணாசலக்கவிராயர் (மு. ரா.) | 10 |
| | அழகிய சிற்றம்பலக்கவிராயர் (மிதிலைப்பட்டி) | 4 |
| | அழகிய சொக்கநாத பிள்ளை | 6 |
| 20. | அழகிரிராசு | 14 |
| | அழகு முத்துப்புலவர் | 15 |
| | அவிநாசிப் புலவர் | 11 |
| | ஆண்டிப் புலவர் | 13 |
| | ஆதிமூல முதலியார் (இருக்கம்) | 9 |
| 25. | ஆத்மநாத தேசிகர் | 15 |
| | ஆபிரகாம் பண்டிதர் (தஞ்சை) | 9 |
| | ஆலாலசுந்தரம் பிள்ளை (கா.) | 11 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | ஆறுமுக அடிகள் | 15 |
| | ஆறுமுக நாவலர் (யாழ்ப்பாணம்) | 3 |
| 30. | ஆறுமுகம் பிள்ளை (முதுகுளத்தூர்) | 13 |
| | இரட்டைப்புலவர் | 2 |
| | இரமண மகரிஷி | 12 |
| | இராகவ ஐயங்கார் (ரா.) | 12 |
| | இராசம் ஐயர் | 9 |
| 35. | இராசகோபால ஐயங்கார் (வே.) | 12 |
| | இராசேசுவரி அம்மையார் | 8 |
| | இராமகவிராயர் | 11 |
| | இராமசாமி ஐயர் (இசைப் புலவர்) | 13 |
| | இராமசாமிக் கவிராயர் (மு.) | 13 |
| 40. | இராமசாமிக்கவுண்டர் (சேலம்) | 9 |
| | இராமசாமி ராசு | 11 |
| | இராமச்சந்திர கவிராயர் | 11 |
| | இராமநாதச் செட்டியார். அ. (வயிநாகரம்) | 14 |
| | இராமாநுசக் கவிராயர் | 6 |
| 45. | இராமலிங்க அடிகள் (வடலூர்) | 3 |
| | இராமலிங்கத் தம்பிரான் (புலிக்குட்டி) | 13 |
| | இராமலிங்க அடிகள் (ஈசானிய மடம்) | 9 |
| | இரெட்டியப்பட்டி அடிகள் | 14 |
| | இலக்கண முத்தையா | 14 |
| 50. | இலிங்கப்ப ஐயர் | 11 |
| | இன்பகவிப் புலவர் | 4 |
| | ஈசுரமூர்த்தியா பிள்ளை (மு. பொ.) | 14 |
| | ஈழத்துக்குச்சென்ற இரு புலவர்கள் | 6 |
| | உமறுப்புலவர் | 5 |
| 55. | உமாபதி சிவாச்சாரியார் | 4 |
| | உமாமகேசுவரன் பிள்ளை (தமிழவேள்) | 12 |
| | உலகநாத பிள்ளை (தஞ்சை) | 14 |
| | உலகநாத முதலியார் (திரு. வி.) | 15 |
| | ஒட்டக்கூத்தர் | 2 |
| 60. | ஔவையார் | 1 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | கச்சியப்ப சிவாச்சாரியார் | 4 |
| | கச்சியப்ப முனிவர் | 4 |
| | கடிகை முத்துப்புலவர் | 4 |
| | கண்ணப்ப முதலியார் (பாரிப்பாக்கம்) | 15 |
| 65. | கண்ணுச்சாமிப் பிள்ளை (காழி. சிவ.) | 9 |
| | கதிரேசச் செட்டியார் (பண்டிதமணி. மு.) | 8 |
| | கதிரைவேற் பிள்ளை (நா.) | 10 |
| | கந்தசாமி அடிகள் (சிரவணபுரம்) | 7 |
| | கந்தசாமிக் கவிராயர் (முகவூர்) | 13 |
| 70. | கந்தசாமிக் கவிராயர் (மு. ரா.) | 14 |
| | கந்தசாமிப் பிள்ளை (ச. மு.) | 13 |
| | கந்தசாமிப் புலவர் | 13 |
| | கந்தசாமி முதலியார் (பேரறிஞர்) | 11 |
| | கந்தசாமி முதலியார் (பூசை) | 11 |
| 75. | கந்தசாமி முதலியார் (மோசூர்) | 9 |
| | கந்தசாமி முதலியார் (சாத்தூர்) | 8 |
| | கந்தசாமியார் (ரா.) | 12 |
| | கந்தப்ப ஞானதேசிகர் | 13 |
| | கந்தப்பையர் (திருத்தணிகை) | 8 |
| 80. | கம்பர் | 1 |
| | கருணைப்பிரகாசர் | 11 |
| | கருப்பையாப் பாவலர் (கொட்டாம்பட்டி) | 13 |
| | கருவூர்த்தேவர் | 6 |
| | கலியாணசுந்தர முதலியார் (பூவை) | 7 |
| 85. | கலியாணசுந்தர முதலியார் (திரு. வி.) | 7 |
| | கல்லாடர் | 6 |
| | கவிகுஞ்சர பாரதியார் | 15 |
| | கவிராச பண்டிதர் | 4 |
| | களந்தைக் குமரன் | 11 |
| 90. | கனகசபைக்கவிராயர் (வீரசைவர்) | 15 |
| | கனகசபைப் பிள்ளை (வி.) | 6 |
| | கனகசுந்தரம் பிள்ளை (தி. த.) | 7 |
| | கன்னைய நாயுடு (ஆ. வி.) | 12 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | கார்த்திகேய முதலியார் (மாகறல்) | 14 |
| 95. | கார்மேகக் கவிஞர் | 15 |
| | கால்டுவெல் | 6 |
| | காளமேகப் புலவர் | 2 |
| | கிருட்டிண ஐயர் (கனம்) | 13 |
| | கிருட்டிண பிள்ளை | 6 |
| 100. | கிருட்டிணமாச்சாரியார் (சே.) | 9 |
| | கிருட்டிணமூர்த்தி (கல்கி) | 8 |
| | குகனேரியப்ப நாவலர் | 4 |
| | குப்புச்சாமி ராசு (வெ.) | 14 |
| | குமரகுருதாச அடிகள் (பாம்பன்) | 5 |
| 105. | குமரகுருபரர் | 2 |
| | குமாரசாமி தேசிகர் | 11 |
| | குமாரசாமிப் பிள்ளை (ம. ரா.) | 9 |
| | குமாரசாமிப்புலவர் (சுன்னுகம்) | 7 |
| | குமாரசாமி முதலியார் (சேலம்) | 9 |
| 110. | குமாரசாமி முதலியார் (குன்னூர்) | 14 |
| | குமாரதேவர் | 4 |
| | குருகையூர் வைணவப்புலவர் | 5 |
| | குருஞான சம்பந்தர் | 10 |
| | குருநமச்சிவாயர் | 6 |
| 115. | குழந்தைக்கவிராயர் | 8 |
| | கூழங்கைத் தம்பிரான் | 4 |
| | கைலாச பிள்ளை (சிற்.) | 10 |
| | கைலாச பிள்ளை (த.) | 10 |
| | கோபாலகிருட்டிண பாரதியார் | 14 |
| 120. | கோபால பிள்ளை | 14 |
| | கோபிநாதராயர் (து. அ.) | 15 |
| | கோவிந்தசாமிப் பிள்ளை (ச. க.) | 9 |
| | கோவிந்த பிள்ளை (திரிசிரபுரம்) | 11 |
| | கோவிந்தராச முதலியார் (கா. ர.) | 7 |
| 125. | கோவிந்தராசனார் (சீனி) | 11 |
| | சகதேவ முதலியார் (சேலை) | 8 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | சங்கரசிந்தாமணிப் புலவர் | 12 |
| | சங்கர தாசர் | 14 |
| | சங்கரநமச்சிவாயப்புலவர் | 6 |
| 130. | சங்கர பண்டிதர் | 10 |
| | சச்சிதாநந்த யோகீசுரர் | 14 |
| | சடகோப ஐயங்கார் | 11 |
| | சண்முகசுந்தர முதலியார் (வல்லை) | 9 |
| | சண்முகஞ் செட்டியார் (அ.) | 14 |
| 135. | சண்முகம் பிள்ளை (திருமயிலை) | 8 |
| | சண்முகம் பிள்ளை (வ. சு.) | 9 |
| | சதாசிவச் செட்டியார் (கயப்பாக்கம்) | 10 |
| | சத்திமுற்றப் புலவர் | 6 |
| | சத்தியமூர்த்தி | 14 |
| 140. | சந்திரசேகர கவிராச பண்டிதர் | 11 |
| | சபாபதி நாவலர் | 8 |
| | சபாபதி முதலியார் (மதுரை) | 15 |
| | சபாபதி முதலியார் (புரசை) | 8 |
| | சபாபதி முதலியார் (காஞ்சி) | 13 |
| 145. | சபாரத்தின முதலியார் (குல.) | 9 |
| | சம்பந்த சரணாலயர் | 4 |
| | சம்பந்த முனிவர் | 13 |
| | சயங்கொண்டான் | 2 |
| | சரவணக்கவிராயர் (அட்டாவதானம்) | 6 |
| 150. | சரவணபவாநந்தம் பிள்ளை | 9 |
| | சரவணப்பெருமாட் கவிராயர் (க.) | 8 |
| | சரவணப்பெருமாட் கவிராயர் (உ.) | 13 |
| | சர்க்கரைப்புலவர் (பொன்னெட்டி மாலை) | 10 |
| | சர்க்கரைப்புலவர் (இரண்டாவது) | 10 |
| 155. | சலசலோசனர் | 9 |
| | சவராயலு நாயகர் | 13 |
| | சவாதுப்புலவர் | 13 |
| | சற்குணர் (ச. த.) | 9 |
| | சாந்தலிங்க அடிகள் | 10 |

*

| | | புத்தக எண் |
|---|---|---|
| 160. | சாந்துப்புலவர் | 10 |
| | சாமிநாதையர் (உ. வே.) | 7 |
| | சாமிநாதையர் (சி. வி.) | 10 |
| | சிதம்பர அடிகள் (திருப்போரூர்) | 2 |
| | சிதம்பரநாத முதலியார் (டி. கே. சி.) | 8 |
| 165. | சிதம்பரநாத முனிவர் | 11 |
| | சிதம்பர பாரதியார் | 15 |
| | சிதம்பரம் பிள்ளை (ப.) | 9 |
| | சிதம்பரம் பிள்ளை (மதுரை) | 12 |
| | சிதம்பரம் பிள்ளை (வ. உ.) | 7 |
| 170. | சிதம்பரனார் (துடிசை கிழார்) | 8 |
| | சிவகுருநாத பிள்ளை (ந.) | 12 |
| | சிவக்கொழுந்து தேசிகர் | 8 |
| | சிவசம்புப் புலவர் | 7 |
| | சிவஞான முனிவர் | 3 |
| 175. | சிவஞானம் பிள்ளை (சே.) | 12 |
| | சிவஞான யோகிகள் (விருதை) | 9 |
| | சிவபாதசுந்தரம் | 15 |
| | சிவப்பிரகாச அடிகள் (வியாசர்பாடி) | 14 |
| | சிவப்பிரகாசர் (துறைமங்கலம்) | 3 |
| 180. | சிவப்பிரகாசர் (சித்தர்) | 10 |
| | சிவாக்கிர யோகிகள் | 11 |
| | சிவாநந்தசாகர யோகீசுவரர் | 14 |
| | சிவாநந்த யதீந்திரர் | 12 |
| | சிற்றம்பல நாடிகள் | 10 |
| 185. | சின்னக்குட்டிப் புலவர் (மாவை) | 8 |
| | சின்னத்தம்பிப் புலவர் (யாழ்ப்பாணம்) | 6 |
| | சின்னைய செட்டியார் (வீர. லெ.) | 13 |
| | சீநிவாச ஐயங்கார் (தி. செ.) | 12 |
| | சீநிவாச பிள்ளை (கே. எஸ்.) | 14 |
| 190. | சுந்தர அடிகள் (கோடகநல்லூர்) | 15 |
| | சுந்தரதாசப் பாண்டியர் | 13 |
| | சுந்தர முதலியார் (முத்து) | 10 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | சுந்தரம் பிள்ளை (பெ.) (மனோன்மணீயம்) | 3 |
| | சுப்பிரமணிய ஐயர் (வ. வே.) | 9 |
| 195 | சுப்பிரமணியக் கவிராயர் (சே. ரா.) | 14 |
| | சுப்பிரமணியதாசு (திருக்குறள் அவதானி) | 9 |
| | சுப்பிரமணிய தீட்சிதர் | 5 |
| | சுப்பிரமணிய தேசிகர் | 11 |
| | சுப்பிரமணிய பாரதியார் | 5 |
| 200. | சுப்பிரமணிய பிள்ளை (வ. த.) | 9 |
| | சுப்பிரமணிய பிள்ளை (கா.) | 9 |
| | சுப்பிரமணிய முதலியார் (வெ. ப.) | 7 |
| | சுப்பிரமணிய முனிவர் (தொட்டிக்கலை) | 10 |
| | சுப்பைய ஞானதேசிகர் (வீர.) | 15 |
| 205. | சுவாமிநாத தேசிகர் | 5 |
| | சுவாமிநாத பண்டிதர் | 8 |
| | சூலியன் வின்சோன் | 12 |
| | செந்தினைதையர் (காசிவாசி) | 10 |
| | செந்தில்நாயக அடிகள் (மாதை) | 7 |
| 210. | செய்குத்தம்பிப் பாவலர் | 7 |
| | செல்லையா (வண்ணை) | 9 |
| | செல்வக்கேசவராய முதலியார் | 7 |
| | செவ்வந்திநாத தேசிகர் | 12 |
| | சேக்கிழார் | 4 |
| 215. | சேஷாசல ஐயர் (டி. என்.) | 14 |
| | சேந்தனார் | 6 |
| | சேரமான்பெருமாள் | 6 |
| | சேனாதிராய முதலியார் | 10 |
| | சைவ எல்லப்ப நாவலர் | 4 |
| 220. | சொக்கநாதப் புலவர் | 12 |
| | சொக்கலிங்கச் செட்டியார் (காரைக்குடி) | 7 |
| | சோணாசல பாரதியார் | 15 |
| | சோமசுந்தர குரு | 13 |
| | சோமசுந்தர தேசிகர் (கு.) | 9 |
| 225. | சோமசுந்தர நாயகர் | 8 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | சோமசுந்தரம் பிள்ளை (ம. நா.) | 10 |
| | சோலைய அடிகள் | 13 |
| | ஞானப்பிரகாசர் (சிதம்பரம்) | 15 |
| | ஞானப்பிரகாசர் (கமலை) | 4 |
| 230. | ஞானப்பிரகாசர் (நல்லூர் சுவாமி) | 12 |
| | ஞானியார் அடிகள் | 7 |
| | தண்டபாணிப் பிள்ளை (நாகை) | 9 |
| | தண்டபாணியடிகள் (மாதை) | 5 |
| | தத்துவப்பிரகாசர் | 4 |
| 235. | தத்துவராய அடிகள் | 4 |
| | தலைமலைகண்ட தேவர் | 6 |
| | தாண்டவராயத் தம்பிரான் | 13 |
| | தாண்டவராய முதலியார் (வித்துவான்) | 8 |
| | தாமோதரம் பிள்ளை (சி. வை.) | 3 |
| 240. | தாயுமானவர் | 3 |
| | தியாகராசச் செட்டியார் | 6 |
| | திரிகூடராசப்பன் கவிராயர் | 8 |
| | திருச்சிற்றம்பலம் பிள்ளை | 11 |
| | திருநாவுக்கரசு முதலியார் (மணி.) | 7 |
| 245. | திருமூலர் | 6 |
| | திருவம்பல தேசிகர் | 13 |
| | திருவேங்கடநாதர் (மாதை) | 11 |
| | தில்லைநாயக முதலியார் (தில்லை) | 12 |
| | தில்லைவிடங்கன் மாரிமுத்துப்பிள்ளை | 13 |
| 250. | தேசிகவிநாயகம் பிள்ளை (கவிமணி) | 8 |
| | தேவராச பிள்ளை | 13 |
| | நடராசர் (சே.) | 11 |
| | நடராசன் (வி. சூ.) | 15 |
| | நடேச சாத்திரியார் (பண்டித) | 11 |
| 255. | நடேச முதலியார் (மு.) | 12 |
| | நந்திக்கலம்பக ஆசிரியர் | 6 |
| | நமசிவாயப் புலவர் | 6 |
| | நமசிவாயப் புலவர் (பூசை) | 11 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | நமச்சிவாய முதலியார் (கா.) | 7 |
| 260. | நம்பிகாளி | 15 |
| | நம்பியாண்டார் நம்பி | 4 |
| | நல்லசாமிப் பிள்ளை (ஜே. எம்) | 9 |
| | நல்லசிவன் பிள்ளை | 7 |
| | நல்லாப்பிள்ளை | 6 |
| 265. | நவநீதகிருட்டிண பாரதியார் | 9 |
| | நாகலிங்க முனிவர் (காஞ்சி) | 7 |
| | நாராயண ஐயர் | 11 |
| | நாராயண ஐயங்கார் (திரு) | 12 |
| | நாராயணசாமி ஐயர் (பின்னத்தூர்) | 8 |
| 270. | நாராயண தீட்சிதர் | 8 |
| | நாராயண தேசிகர் (சாது) | 15 |
| | நிரம்பவழகிய தேசிகர் | 4 |
| | நீலாம்பிகையம்மையார் (நாகை) | 8 |
| | நெற்குன்றவாண முதலியார் | 5 |
| 275. | பகழிக்கூத்தர் | 6 |
| | படிக்காசுத் தம்பிரான் | 3 |
| | பட்டினத்து அடிகள் | 2 |
| | பத்திரகிரியார் | 13 |
| | பரஞ்சோதியார் | 11 |
| 280. | பரஞ்சோதி முனிவர் (திருவிளையாடல்) | 4 |
| | பரமசிவத்தம்பிரான் | 11 |
| | பரிதிமாற் கலைஞர் | 5 |
| | பலபட்டடைச் சொக்கநாதப்புலவர் | 8 |
| | பலராமையர் (ந.) | 9 |
| 285. | பழநியப்ப பிள்ளை (தி. பொ.) | 7 |
| | பாண்டித்துரைத்தேவர் | 5 |
| | பாலகிருட்டிண கவிராயர் | 14 |
| | பாலசுந்தர முதலியார் (தண்டலம்) | 14 |
| | பாலசுப்பிரமணியக் கவிராயர் | 4 |
| 290. | பால்வண்ண முதலியார் (மு) | 14 |
| | பானுகவி அடிகள் | 11 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| | பிச்சுவையர் (வேம்பத்தூர்) | 14 |
| | பிச்சுவையர் (கல்போது) | 12 |
| | பிச்சை இபுராகிம் புலவர் | 15 |
| 295. | பிச்சையா நாவலர் | 15 |
| | பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் | 5 |
| | பீமகவிப்புலவர் | 14 |
| | புகழேந்திப்புலவர் | 1 |
| | புதுமைப்பித்தன் | 9 |
| 300. | புராணத் திருமலைநாதர் | 6 |
| | பூசைத்தாயார் | 11 |
| | பூரணலிங்கம் பிள்ளை (மு. சி.) | 8 |
| | பூவராகம் பிள்ளை (ஆ.) | 12 |
| | பெருமாள் கவிராயர் (திருக்குருகை) | 4 |
| 305. | பேரம்பலப்புலவர் | 9 |
| | பொய்யாமொழிப் புலவர் | 2 |
| | பொன்னம்பல அடிகள் | 6 |
| | பொன்னம்பலக் கவிராயர் | 12 |
| | பொன்னம்பலசிவம் | 15 |
| 310. | பொன்னம்பலம் பிள்ளை (ந. ச.) | 8 |
| | பொன்னம்பலம் பிள்ளை | 11 |
| | பொன்னுச்சாமித்தேவர் | 5 |
| | பொன்னையா முதலியார் | 15 |
| | போப்பையர் | 6 |
| 315. | மணிவாசக சரணாலய அடிகள் | 14 |
| | மண்டலபுருடன் | 11 |
| | மதுரகவி | 13 |
| | மதுர கவிராயர் (1) | 11 |
| | மதுரகவி பாரதியார் | 15 |
| 320. | மதுரைநாயகம் பிள்ளை | 10 |
| | மயிலேறும்பெருமாள் பிள்ளை | 3 |
| | மழவை மகாலிங்கையர் | 13 |
| | மறைமலையடிகள் | 7 |
| | மனோன்மணியம்மையார் | 8 |

| | | புத்தக எண் |
|---|---|---|
| 325. | மாசிலாமணி தேசிகர் | 10 |
| | மாணிக்க நாயக்கர் (பா. வே.) | 8 |
| | மாம்பழக்கவிச்சிங்க நாவலர் | 4 |
| | மீனாட்சிசுந்தரம் பிள்ளை (மகாவித்துவான்) | 3 |
| | மீனாட்சிசுந்தரக் கவிராயர் (முகவூர்) | 10 |
| 330. | முத்தப்ப செட்டியார் (பாடுவாய்) | 10 |
| | முத்துக்குட்டிப்புலவர் | 6 |
| | முத்துக்குமாரத் தம்பிரான் | 9 |
| | முத்துசிவன் (ஆ.) | 12 |
| | முத்துச்சாமி ஐயர் | 15 |
| 335. | முத்துச்சாமி ஐயங்கார் | 13 |
| | முத்துச்சாமி ஐயர் (வண்டானம்) | 12 |
| | முத்துச்சாமிப் பிள்ளை (தேவிபட்டினம்) | 13 |
| | முத்துச்சாமிப் பிள்ளை (புகழ்) | 9 |
| | முத்துச்சாமிக்கோனார் | 7 |
| 340. | முத்துத்தம்பி பிள்ளை (ஆ.) | 15 |
| | முத்துத்தாண்டவராய பிள்ளை (சீர்காழி) | 9 |
| | முத்துத்தாண்டவர் | 6 |
| | முத்துராமலிங்க சேதுபதி (க.) | 13 |
| | முத்துராமலிங்க சேதுபதி (உ.) | 14 |
| 345. | முருகப்புலவர் (சர்க்கரைமுத்து) | 10 |
| | வசைகவியாண்டன் புலவர் | 6 |
| | வடமலையப்ப பிள்ளையன் | 8 |
| | வடிவேல் செட்டியார் (கோ.) | 12 |
| | வரதநஞ்சைய பிள்ளை (அ.) | 15 |
| 350. | வரதுங்கராம பாண்டியன் | 13 |
| | வரந்தருவார் | 13 |
| | வன்தொண்டர் | 11 |
| | விசயரங்க முதலியார் (பம்மல்) | 8 |
| | விசுவநாத பிள்ளை (வீ.) | 10 |
| 355. | விபுலாநந்த அடிகள் | 7 |
| | விருத்தாசல ரெட்டியார் (செங்கணம்) | 11 |
| | வில்லிபுத்தூரார் | 2 |

| | | புத்தக எண் |
| --- | --- | --- |
| | வீரகவிராசர் | 5 |
| | வீரகவிராயர் (வெண்பாப்புலி) | 12 |
| 360. | வீரபத்திரப்புலவர் | 15 |
| | வீரபாண்டியப்புலவர் | 5 |
| | வீரமாமுனிவர் | 6 |
| | வீரராகவ முதலியார் (அந்தகக்கவி) | 3 |
| | வீரராகவ முதலியார் (முத்தமிழ்க்கவி) | 15 |
| 365. | வெள்ளியம்பல உபாத்தியாயர் | 11 |
| | வெள்ளியம்பலவாணத் தம்பிரான் | 4 |
| | வென்றிமாலைக் கவிராயர் | 10 |
| | வேங்கடசாமி நாட்டார் (பண்டித ந. மு.) | 9 |
| | வேங்கடரமண தாசர் (சாமக்குளம்) | 11 |
| 370. | வேங்கடாசலம் பிள்ளை (கரந்தைக்கவியரசு) | 12 |
| | வேங்கட்டராயலு நாயுடு | 13 |
| | வேதகிரி முதலியார் (களத்தூர்) | 12 |
| | வேதநாயக சாத்திரியார் | 8 |
| | வேதநாயகம் பிள்ளை (ச.) | 5 |
| 375. | வேலாயுத முதலியார் (தொழூவூர்) | 10 |
| | வேலுச்சாமிப் பிள்ளை (வெண்பாப்புலி) | 8 |
| | வேலைய அடிகள் | 11 |
| | வைத்தியநாத நாவலர் (இலக்கண விளக்கம்) | 3 |
| | வைத்தியநாதையர் (மகா) | 13 |
| 380. | வையாபுரிப் பிள்ளை (ச.) | 15 |

MADURAI UNIVERSITY LIBRARY
4 JAN 1973
MADURAI-2

Book supplied by the University
central Co-op. Stores, Madurai.

கழக வெளியீடு: ௮௯௧

விலை ரூ [illegible] 8.

அப்பர் அச்சகம், சென்னை-1